சிதம்பரம் - கண்கட்டி

# ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனார்

# சைவச் சிறு நூல்கள்.

CONNEMARA PUBLIC LIBRARY
25 FEB 1958
MADRAS

திருவாவடுதுறை ஆதீனம்.
1954

உ

திருவாவடுதுறை

21-வது குருமஹாசந்நிதானம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

# ஜென்மநட்சத்திர மலர்.

விசய—பங்குனி—23

திருவாவடுதுறை ஆதீனவெளியீடு 80.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

## சிதம்பரம் — கண்கட்டிமடம்

## ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனர்

அருளிச்செய்த

# சைவச்சிறுநூல்கள்

## முதற்பகுதி.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து
இருபத்தொன்ருவது குருமஹாசந்நிதானம்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்**
கட்டளையிட்டருளியபடி

அவ்வாதீன வித்துவான்
**த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்**
பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கப்பெற்றன.

மெய்கண்டார்யாண்டு–731.

விசய–பங்குனி
1954.

உ

சிவமயம்.

# குருமரபு வாழ்த்து.

---

*திருச்சிற்றம்பலம்.*

"கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

**திருச்சிற்றம்பலம்**

**ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்—கண்கட்டிமடம்

# ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனார்

அருளிச்செய்த

# சைவச்சிறு நூல்கள்


( பக்கங்கள் 194 )

---


| | பக்கம். |
|---|---|
| முகவுரை | i—x |
| செய்யுள் — | |
| 1. மகாசிவராத்திரி கற்பம் | 1 |
| 2. மாத சிவராத்திரி கற்பம் | 7 |
| 3. சோமவார சிவராத்திரி கற்பம் | 11 |
| 4. சோமவார கற்பம் | 15 |
| 5. வருத்தமறவுய்யும் வழி | 31 |
| 6. திருக்கோயிற் குற்றம் | 35 |
| 7. பரமோபதேசம் | 39 |
| 8. ஐக்கியவியல் | 45 |
| 9. உருத்திராக்க விசிட்டம் | 51 |
| குறிப்புரைகள் | 69 |
| 10. பதிபசுபாசப்பனுவல் | 73 |
| 11. சங்கற்ப நிராகரணம் | 101—137 |


(தொடர்ச்சி பின்பக்கம் காண்க)

சைவச் சிறு நூல்களைத் தேடிப் படிக்க யான் எண்ணிய காலத்து என் தந்தையார் T. A. சபாபதி பிள்ளையவர்கள் கைக் காகிதப் பிரதி யொன்று கிடைத்தது. அப்பிரதியில் இப்பதிப் பிலே கண்ட (9) நூல்களும், சங்கற்பநிராகரணமும், பதிபசு பாசப் பனுவலும் மற்றும் சில நூல்களும் இருந்தன. யாழ்ப் பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் இம்மகான் அருளிச் செய்த சைவநூல்கள் யாவும் சைவருக்கு இன்றி யமையாதன என உட்கொண்டு சைவசமய நெறியைத் தாம் இயற்றிய புத்துரையுடன் அச்சிட்டுபகரித்தார்கள். பெரிய புராணத்துக்குத் தாம் செய்தருளிய சூசனங்களில் ஆங்காங்கு எடுத்துக் காட்டாகச் சைவசமயநெறி, வருத்தமற வுய்யும்வழி முதலிய நூல்களினின்று பல செய்யுட்களை எடுத்தாண்டனர். இவ்வாதீனத்து மஹாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் விரும்பிச் சிவதருமோத்தரத்தைப் பிரதி பண்ணிக் கொண்டு படித்தார்கள் என வரலாறு கூறுகிறது. எனினும் பரமோபதேசம், ஐக்கிய வியல், சங்கற்ப நிராகரணம், பதிபசு பாசப் பனுவல் முதலியன இதுவரையில் அச்சேறினதாகத் தெரியவில்லை. அடியேன் தென்குடித்திட்டை சித்தாந்த வித் தியா சாலையில் ஆசிரியராக இருந்து பின்பு தஞ்சை S. P. G. ஹைஸ்கூல் தமிழாசிரியராக இருந்த-காலத்தும் அடிக்கடி சென்று தஞ்சை அரண்மனைச் சரஸ்வதிமகால் புத்தகசாலையில் கிடைத்த பரமோபதேசம், ஐக்கிய வியல் இவற்றைப் பிரதி (1941—ல்) செய்துகொண்டேன். அதன் பின்பு மற்றவற்றைப் பிரதி பண்ண அவகாசம் கிடைத்திலது. தஞ்சையை விட்டுத் திருப்பனந்தாட் காசிமடத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி—அருணந் தித்தம்பிரான் சுவாமிகள் ஆணையின்படி எளியேனல் துவக்கப் பட்ட ஸ்ரீ காசிவாசி சாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் செந் தமிழ்க் கல்லூரித் தலைவனுக இருந்து சிறப்புற அதனை நடத்தி வந்த காலத்திலே விடுமுறையில் சென்று மேலே கண்ட சரஸ் வதி மகால் புத்தக சாலை ஏட்டுச்சுவடியிலிருந்து பார்த்திப— சித்திரை—22உ சதய நாளில் (1945ல்) சங்கற்ப நிராகரணம்,



உ

சிவமயம்.

# முகவுரை.

திருச்சிற்றம்பலம்

" அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி
உன்னுவர் உண்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்
கண்ணவன் என்று கருதும் அவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றிநின் ருனே "

திருமூலதேவர்,

*திருச்சிற்றம்பலம்.*

ஸ்ரீமறைஞானசம்பந்தர் என்னும் பெயருடைய ஆசிரியர் ஆவார் பலர். அவருள், ஸ்ரீ மெய்கண்டதேவருடைய மாணவரா கிய ஸ்ரீ அருணந்தி சிவத்தின் திருவருள் பெற்ற ஸ்ரீ மறைஞான சம்பந்தர் சந்தான குரவர் நால்வருள் மூன்ருமவராவர் அவ் வாசிரியர் ஸ்ரீ உமாபதிசிவத்துக்கு அநுக்கிரகம் செய்து திருக் களாஞ்சேரியில் இடையருது சிவானந்த நிட்டையில் இருந் தார்கள். உமாபதி சிவத்துக்குச் சிவஞானுேபதேசமும், சாஸ் திரோபதேசமும் செய்தருளியதன்றித் தாம் நூலொன்றும் அருளிச் செய்திலர். அவர்கள் காலம் கி—பி–1313–க்கு முன் ஆம். அது பதின்மூன்ரும் நூற்ருண்டு.

இனி, மகா சிவராத்திரி கற்பம், மாத சிவராத்திரி கற்பம், சோமவார சிவராத்திரி கற்பம், சோமவார கற்பம், வருத்தமற உய்யும் வழி, உருத்திராக்க விசிட்டம் முதலியவற்றை இயற்றி யருளியவர்கள் ஒருமறைஞானசம்பந்தர், பதிபசுபாசப் பனுவல், சங்கற்ப நிராகரணம், சைவ சமயநெறி, பரமோபதேசம், சிவ தருமோத்தரம், கமலாலய புராணம், சிவமயம், தொல்காப்பியம்,

முத்திநிலை என்னும் நூல்களைச் செய்தருளியவர்களும் அம்மறை ஞானசம்பந்தரே. அருணகிரிபுராணம், பரமததிமிரபானு, இறைவனூற்பயன், சகலாகமசாரம், ஐக்கியவியல் முதலியவற்றை அருளியவர்களும் அவர்களே. மறைஞானசம்பந்தர், மறைஞான சம்பந்த பண்டாரம், மறைஞானசம்பந்த தேசிகர், மறைஞான சம்பந்த நாயனார் என்ற பெயர்கள் ஒருவரையே குறிப்பன. இந்நூல்கள் எழுதப்பட்டுள்ள பிரதிகளில் அவ்வாறு ஆசிரியர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர் சிதம்பரத்திலே வாழ்ந்தவராகலின் சிதம்பரம் என்னும் ஊர்ப்பெயர் முன்னும், உலகிலுள்ளார் செய்யும் இழிதகவான செயல்களைக் கண்ணால் காணப் பொருதவராய்த் தம் கண்ணை மறைத்துக்கொண்டு வாழ்ந்தார் ஆகலின் கண்கட்டி என்னும் பெயர் அதன் பின்னுமாக வைத்து மறைஞானசம்பந்தர் என வழங்கப்படுவர். இவர் திருமடம் சிதம்பரத்திலே தெற்கு வீதியும் கீழை வீதியும் கூடுமிடத்தில் இருந்த தென்பர் பெரியோர். அது கண்கட்டி மடம் என வழங்கப்பட்டது.

இனி, கண் கட்டி மடத்தைக் குகைமடம் எனவும் கூறுவர். இது திருவண்ணுமலையில் சிவவரப் பிரசாதியாய் எழுந்தருளியிருந்த குரு நமச்சிவாய சுவாமிகளின் சீடர் குகை நமச்சிவாயர் என்பவர் சிதம்பரத்திலிருந்து ஸ்ரீ ஆனந்த தாண்டவ மூர்த்தியின் திருக்கோயிற்றிருப்பணி செய்து கொண்டு தங்கியிருந்த திருமடமாம், அந்த மடத்திலே வந்த பெரியோரே ஸ்ரீ மறைஞானசம்பந்தர். இவர் கல்வி கேள்விகளில் வல்லவர். சிவாகம சிவபுராணங்களில் நல்ல பயிற்சியுள்ளவர். ஆகமங்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர். பல புராணங்களும், சைவ சமய நூல்கள் பலவும் செய்தவர். பதிபசுபாசப் பனுவல் என்னும் நூலின் பாயிரத்து........"திருந்துதொல் காப்பியம் சிவமயம் செய்தோன்......ஆதி கமலா லயமுதற் புராணம்...... சிவதரு மோத்தரம் தமிழாற் செய்தோன்.........நண்ணிய தவமறை ஞானசம் பந்தன்.........பதிபசுபாசப் பனுவல்செய்

தனனே'' எனவும்; ''செறிமா செறியும் பரமோபதேசம் —மறைஞான சம்பந்தன் வாக்கு'' எனவும், ''முத்தி நிலையணுக் கள் சேர மொழிந்திட்டான்—சத்திய மெய்ஞ்ஞான சம்பந்தன்'' எனவும், ''சைவ சமயநெறி சாற்றினன்சம் பந்தனுயிர்— மையலற வாய்க்க வரம்'' எனவும் அவ்வந்நூல்களின் இறுதி யிற் கூறியுள்ளமையே இதற்குச் சான்று பகர்வனவாம். கமலா லயபுராணம் இயற்றிய காலம் கி--பி. 1548 என்றும். அருண கிரிப் புராணம் இயற்றிய காலம் கி–பி.1555 என்றும் கூறுவர். இவ்வாசிரியர் காலம் பதினாரும் நூற்றாண்டு என்பர்.

இனி, இவ்வாசிரியர் இயற்றியுள்ள நூல்களில் சைவசமய நெறி, –727. பரமோபதேசம், –41. சங்கற்பநிராகரணம் –421, பதிபசுபாசப் பனுவல்–536, மகாசிவராத்திரி கற்பம்–39, மாத சிவராத்திரிகற்பம்-14, சோமவார சிவராத்திரிகற்பம்-17, சோம வார கற்பம்–216, வருத்தமற உய்யும் வழி–17, முதலிய நூல்கள் குறள் வெண்பாக்களால் செய்யப்பெற்றவை. ஐக்கியவியல் -15. உருத்திராக்க விசிட்டம்–108. என்பன வெண்பாக்களால் இயன்றுள்ளன. ''சாற்றினனே கண்டிவரந் தன்னையெணிச் சம்பந்தன்... ஆய்ந்து'' என்னும் சிறப்புப்பாயிர வெண்பாவால் உருத்திராக்க விசிட்டத்தையும் இயற்றியவர் இவரே எனத் தெரி கிறது. இவருடைய மாணவருள் ஒருவர் இயற்றினர் என்பாரும் உளர். ஆராய்தற்குரியது. சிவஞான சித்தியாருக்கு உரையியற் றிய மறைஞான தேசிகர் இவருடைய மாணவர் என்பது உறுதி யாம். பரமோபதேசம், ஐக்கிய வியல், சங்கற்ப நிராகரணம் முதலியன எழுதியுள்ள ஏட்டுச் சுவடிகளில் கண்கட்டி– 'மறை ஞானபண்டாரம்' அருளியதுஎன எழுதப்பட்டுள்ளன. இதனால், இப்பெரியார் சைவாசாரியர் மரபிலே தோன்றியுள்ளவர் எனத் தெரிகிறது. இவர் சைவசமயத்தவர். ஆயினும், ஆன்மானந்த வாதி யாவர் என்பது இவர் செய்த 'முத்திநிலை'யால் விளங்கும். இதனை மறுத்துத் தருமையாதீனத்துப் பிரதம பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தமூர்த்திகள் முத்திநிச்சயம் என்னும் சிறந்த சித்தாந்தநூல் ஒன்று செய்தருளியுள்ளமையும் காண்க.

சைவச் சிறு நூல்களைத் தேடிப் படிக்க யான் எண்ணிய காலத்து என் தந்தையார் T. A. சபாபதி பிள்ளையவர்கள் கைக் காகிதப் பிரதி யொன்று கிடைத்தது. அப்பிரதியில் இப்பதிப் பிலே கண்ட (9) நூல்களும், சங்கற்பநிராகரணமும், பதிபசு பாசப் பனுவலும் மற்றும் சில நூல்களும் இருந்தன. யாழ்ப் பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் இம்மகான் அருளிச் செய்த சைவநூல்கள் யாவும் சைவருக்கு இன்றி யமையாதன என உட்கொண்டு சைவசமய நெறியைத் தாம் இயற்றிய புத்துரையுடன் அச்சிட்டுபகரித்தார்கள். பெரிய புராணத்துக்குத் தாம் செய்தருளிய சூசனங்களில் ஆங்காங்கு எடுத்துக் காட்டாகச் சைவசமயநெறி, வருத்தமற வுய்யும்வழி முதலிய நூல்களினின்று பல செய்யுட்களை எடுத்தாண்டனர். இவ்வாதீனத்து மஹாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் விரும்பிச் சிவதருமோத்தரத்தைப் பிரதி பண்ணிக் கொண்டு படித்தார்கள் என வரலாறு கூறுகிறது. எனினும் பரமோபதேசம், ஐக்கிய வியல், சங்கற்ப நிராகரணம், பதிபசு பாசப் பனுவல் முதலியன இதுவரையில் அச்சேறினதாகத் தெரியவில்லை. அடியேன் தென்குடித்திட்டை சித்தாந்த வித் தியா சாலையில் ஆசிரியராக இருந்து பின்பு தஞ்சை S. P. G. ஹைஸ்கூல் தமிழாசிரியராக இருந்த காலத்தும் அடிக்கடி சென்று தஞ்சை அரண்மனைச் சரஸ்வதிமகால் புத்தகசாலையில் கிடைத்த பரமோபதேசம், ஐக்கிய வியல் இவற்றைப் பிரதி (1941—ல்) செய்துகொண்டேன். அதன் பின்பு மற்றவற்றைப் பிரதி பண்ண அவகாசம் கிடைத்திலது. தஞ்சையை விட்டுத் திருப்பனந்தாட் காசிமடத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி—அருணந் தித்தம்பிரான் சுவாமிகள் ஆணையின்படி எளியேனுல் துவக்கப் பட்ட ஸ்ரீ காசிவாசி சாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் செந் தமிழ்க் கல்லூரித் தலைவனுக இருந்து சிறப்புற அதனை நடத்தி வந்த காலத்திலே விடுமுறையில் சென்று மேலே கண்ட சரஸ் வதி மகால் புத்தக சாலை ஏட்டுச்சுவடியிலிருந்து பார்த்திப— சித்திரை—22உ சதய நாளில் (1945ல்) சங்கற்ப நிராகரணம்,

பதிபசுபாசப் பனுவல் ஆகிய இவ்விரு நூல்களையும் காகிதப் பிரதி செய்து முற்றுவித்தேன். அதன்பின்பு திருவாவடுதுறை ஆதீனப் புத்தகசாலைக் கைங்கரியத்தை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் பேரருளால் எளியேன் ஏற்றுப் பணியைத் தொடர்ந்து நடத்தத்தொடங்கி ஆராய்ந்த காலத்து சிதம்பரம் —கண்கட்டி மடம்—ஸ்ரீமறைஞான பண்டாரம் அருளிய நூல்களின் தொகுப்புக்கள் அடங்கிய சுவடிகள் இரண்டு கிடைத்தன. அவை மிகச் சிதிலமானவை. ஆயினும், எல்லாவற்றையும் ஒருசேர உடன் வைத்துக்கொண்டு ஆராய்ந்த காலத்துச் சில பலதிருத்தங்களும் கிடைத்தன, எனினும், சில பாடல்கள் சொரூபங் கூடத் தெரியாத நிலையில் இருந்தமையால் அவற்றை யெல்லாம் கிடைத்த அப்படியே இச் சிறு நூற்றொகுப்பில் அச்சிட்டு வைத்துள்ளேன். அறிஞருலகம் அவைகளை யெல்லாம் நன்கு ஆராய்ந்து மீளப் பதிப்பிக்கும் கடமையுடையது.

*" பெறுதற்கரிய மனிதப்பிறப்பை உடையவர்களாய், மெய்ந் நூல்களாகிய வேதாகமங்கள் வழங்கும் புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டத்திலே தவஞ்செய் சாதியிலே சைவமரபிலே பிறந்தும் அனேகர் இவைகளின் அருமையைச் சிறிதும் சிந்தியாதும், கருணாநிதியாகிய சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணியபாவங்களையும் அவைகளின் பலங்களையும் கற்றாயினும் கேட்டாயினும் அறியாதும், பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்யாதும் தமது வாழ்நாளை வீணாளாகக் கழித்து எரிவாய் நரகத்துக்கு இரையாகுகின்றார்கள். சிலர் ஒரோவழிச் சிவ புண்ணியங்களைச்செய்யப் புகுந்தும், அவைகளைச் செய்யும் முறைமையைச் சிறிதும் அறியாமையால், குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளுதல்போல, பாவத்தையே ஈட்டிக்கொள்ளுகிறார்கள். இப்படிக் கெட்டுப்போகாது, நமது சைவ சமயிகள் இம்மனிதப்பிறப்புப் பெறுதற்கரியதென்பதையும், இது நீங்கும் அவதி அறிதற்கரிய தென்பதையுஞ் சிந்தித்து இந்த நூல்களை வாசித்தறிந்து, பாவங்களை வெறுத்து, சிவ*

*பெருமானுடைய திருவடிகளைத் தங்கள் மனம் வாக்குக் காயங்களி னாலே விதிப்படி மெய்யன்போடு வழிபட்டு, நித்தியமாகிய பேரின் பத்தைப் பெற்றுய்யக்கடவர்கள்."*

இனி, இவ்வாதீனத்து 16–வது குருமகாசந்நிதானம் மேலகரம்-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் காலத்திலே சின்னப்பட்டத்திலே யிருந்த பேட்டை -ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் பால் கல்வி பயின்று சிறந்து பின்பு, பொம்மபுரம் ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் ஆதீனம் சிதம்பரம் ஈசானிய மடத்திலேயிருந்த ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளால் பரிசோதிக்கப்பட்டு அவர்கள் எழுதிய சூசனம் முதலியவற்றோடு ஈக்காடு—ஸ்ரீ இரத்தினவேல் முதலியாரவர்களால் (1901ல்) பதிப்பிக்கப் பெற்ற அச்சுப் புத்தகம் ஒன்றுகிடைத்தது. அதனோடும் ஒப்புநோக்கித்திருத்தம் சில செய்து கொண்டதுடன் அமையாது சூசனம் முதலியவற் றையும் அடிக்குறிப்புக்களையும் (20-3-51-ல்) பிரதி செய்து கொண்டேன். பின்பு இத்தொகுப்பு நூல்களை வெளியிட முயன் றேன். ஆயினும், இவைகளினும் இன்றியமையாத சில பல நூல் களை ஆராய்ந்து விரைவில் வெளியிடுமாறு பெருங்கருணையுடன் அநுக்கிரகம் செய்து வரும் இவ்வாதீனத்து 21-வது குரு மஹாசந்நிதானமாக இப்பொழுது வீற்றிருந்து சைவச் செங்கோலோச்சும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகசுவாமிகள்பால் விண்ணப்பம் செய்ய அவர்கள் எளியேன்பாலன்பாலிரங்கிச் 'சைவ நூல்களை இறவாமல் பாது காத்தல் இன்றியமையாததே' என அபயந்தந்து மகாசிவ ராத்திரி புண்ணியகாலத்திலே சைவ நன்மக்களுக்குப் பயன் படும்படி 'அச்சிடுக' எனக்கட்டளையிட்டருளினார்கள். அன் றியும், சிவராத்திரி சோமவாரவிரதம் உருத்திராக்க மகிமை இவைகளை வசனவடிவிலும் எழுதிச் சேர்த்திடுக; அவ்வசனம் கற்றோரையன்றி மற்றையோரும் அறிந்துகொள்ள இயலும் என உத்தரவிட்டார்கள். அவ்வுத்தரவின்படியே அவைகளுடன் உருத்திராக்க விசிட்ட - சூசனம் முதலியவைகளையும் அன்

பர்கள் பொருட்டுச் சேர்த்திருக்கின்றேன். மற்றும், திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள, சோமவார கற்பகூசனம், சிவராத்திரி கற்பகூசனம் முதலியன வசனவடிவில் கற்போர்க்கு எளிதாகச் சேர்க்கப்பட்டுள்ளமையும் காண்க.

1948-சர்வசித்து – மாசி – மகாசிவராத்திரி நிர்ணயத் துண்டுப் பிரசுரங்களும் இன்றியமையாமை கருதி உடன் சேர்க்கப்பட்டன. இவையாவும் சைவ மெய்யன்பர்களுக்குச் சாலப் பயன்தரும் எனவே கருதுகிறேன்.

இனி, இத்தொகுதியில் காணப்படும் 10. பதிபசுபாசப் பனுவல் என்னும் நூலின்கண் பாயிரம்–20. பிரமாண இயல்-68, பதிசாதன இயல்–83, பசுசாதன இயல்–44, பாசசாதக இயல்–70, பொது இயல்–8, போதக இயல்–44 ஆகப் பாயிரமும் இயல்கள் ஆறும்சேர்ந்த தொகை 337 குறள்வெண்பா உள்ளன. சைவசித்தாந்தநூல் கற்பவர்களுக்கு உபகாரமாகப் பிரமாண இயல் அளவைகளை நன்கு அறிவிப்பது. அளவை நூலை நன்கு கற்றுணர்ந்தார்க்கன்றிச் சமய நூல்களில் வரையறைசெய்து உணர்த்தும் பகுதிகள் சிறிதும் விளங்கா. ஆகலின், சமய நூல் கற்கவிரும்பும் மாணவர்கள் ஒருதலையாகக் கற்றுணருமாறு அளவை இலக்கணத்தைச் சிவஞான சித்தியாரில் முதற்கண் வைத்தருளியபடியே இவ்வாசிரியரும் முதற்கண் அதனை வைத்தோதுவாராயினர் என்க.

இனி, இத்தொகுப்பின் 11-வதுபகுதி சங்கற்ப நிராகரணம். இந்நூல் சந்தானகுரவருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் அருளிச்செய்த சங்கற்பநிராகரணத்தினும் வேருயது. இது 424 குறள் வெண்பாக்களால் இயன்றுளது. இந்நூலின்கண் காப்பு–1, பாயிரம்–49 நீக்கி அயிக்கியவாதி முதல் சைவர் இறுதியாகவுள்ள எட்டு சமயவாதிகளின் சங்கற்பமும் அவரவர் வாதங்களின் நிராகரணமும் உள்ளன. அவைகளின் செய்யுள் தொகை வருமாறு :—

| | | சங்கற்பம் | | நிராகரணம், |
|---|---|---|---|---|
| 1. அயிக்கியவாதி | ... | 21 | ... | 36. |
| 2. பாடாணவாதி | ... | 16 | ... | 24. |
| 3. பேதவாதி | ... | 16 | ... | 6. |
| 4. சிவசமவாதி | ... | 21 | ... | 29. |
| 5. சங்கிராந்தவாதி | ... | 20 | ... | 30. |
| 6. அவிகாரவாதி | ... | 20 | ... | 22. |
| 7. நிமித்தகாரண பரிணமவாதி | ... | 20 | ... | 14. |
| 8- சைவர் | ... | 54 | ... | 54. |

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவருளைப்பெற்று அடியேன் இந்நூல்களை அச்சிட்டு வருங்காலத்தில் "புதையலெடுத்ததனம்போல" மற்றொரு பிரதி வலியவந்து கிடைத்தது. மகாமகோபாத்தியாய ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரவர்கட்குத் தமிழ் நூல்களையெல்லாம் அளவின்றி வழங்கிய இத்திருவாவடுதுறை ஆதீனத்துக்கு அடுத்தபடியில் வைத்து எண்ணப்படும் தகுதிவாய்ந்து அவர்கட்குப்பல தமிழ் நூல்களைத் தந்துதவிய மிதிலைப்பட்டி — அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டு ஏட்டுப்பிரதியைப் பார்த்தெழுதிய பழையகாகிதப் பிரதி அது. இதனை அன்புடன் வாங்கி உதவியவர் மிதிலைப்பட்டியை அடுத்துள்ள இராங்கியம் ஹைஸ்கூல் ஆசிரியர் சிரஞ்சீவி R. சண்முகம்பிள்ளையவர்கள். இப்பிரதியைப் பார்த்து அச்சுக்குத் தகுதியாக எழுதிக்கொடுத்தவர் சிர. M. திருநாவுக்கரசு என்பவர். இக்கவிராயர் வீட்டுக் காகிதப்பிரதியும் மிகப்பயனுடையதாகவே இருந்தது. முன்பு விளங்காதிருந்த பகுதிகளில் சில இதன் மூலம் விளங்கின. எனினும், இக்காகிதப் பிரதியில் பாசசாதகஇயல், பொதுஇயல்கள் காணப்படவில்லை. அதனல் அவை திருத்தமும் அடைந்தில. ஏடுகள் எழுதுவோரால் நேர்ந்துள்ள எழுத்துப்பிழைகளும் எல்லாப்பிரதிகளிலும் அளவில்லாதனவே. அதனல். பொறுமையையும் நன்ருக அவை உண்டு பண்ணின.

இனி—7. பரமோபதேசம், 8. அயிக்கியவியல், 10. பதிபசுபாசப்பனுவல், 11. சங்கற்பநிராகரணம் ஆகிய நான்கு நூல்களும் இதுவரையில் அச்சிடப்படாதன. எனவே, இவைகள் முதன்முதலாக இப்பொழுதுதான் சைவத் தமிழுலகத்திலே அச்சூர்தியிலேறி உலாவருவன. ஆகலின், பிழைபல இருத்தல் இயல்பே. இதனினும் நல்லபிரதிகள் வைத்திருக்கும் பேரன்பர்கள் உலகோபகாரமாக அதனைத் தந்தருளுவராயின் அடுத்த பதிப்பில் அவை நன்கு திருத்தமுறுவனவாம். சிவராத்திரி கற்பம் முதலிய 7 நூல்களையும் 1901-ல் அச்சிட்டுதவிய ஈக்காடு இரத்தினவேல் முதலியாரவர்கள் அன்று வேண்டிக்கொண்டிருந்தமையைத் தமிழுலகம் நன்கு அறிந்துவைத்தும் ஏறக்குறைய 53 ஆண்டுகளாக வாளா இருந்தது. இது சைவ உலகுக்குப் பெரியதோர் நஷ்டமே ஆம். ஐம்பது ஆண்டுகளின் முன் இவைகள் வெளிவந்திருக்குமாயின் பலபகுதிகள் சிதையாமல் கிடைத்திருக்குமே! என் செய்வது!! திருவருள் நிலை அஃது என எண்ணவேண்டியதேயாம். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் உத்தரவிட்டருளியபடி இது சிவராத்திரி வெளியீடாக வரத்தாமதம் ஆகவே அப்போது திருமந்திர மாநாட்டு விரிவுரைகளைத் தொகுத்து வெளியிட உத்தரவாயிற்று. இப்போது இது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஜென்ம நட்சத்திர மலராக வெளிவருகிறது.

இலக்கணச் சுருக்கம் கற்கும் இளைஞரும் எளிதில் படித்துணரத்தக்கதாய் அமைந்துள்ள இந்நூற் செய்யுள்களின் எளிய நடையை எண்ணிக் குறிப்புரைகள் அதிகமாக வரையவில்லை. இந்நூல்களைப் பயில்வார்க்கு நல்ல சைவவுணர்ச்சி கைவரும் என்பதிலும் ஐயமின்று. அறிஞருலகம் குற்றம் பொறுத்தருளுக.

*இங்ஙனம்,*

*சித்தாந்தசைவமணி—*

**த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,**

*ஆதீனவித்துவான்.*

*திருவாவடுதுறை*

1—4—54.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

"மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேயுன் குற்றேவல் செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக்குந்திருக் காளத்தியுள்
அறிவே யுன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே"

திருச்சிற்றம்பலம்.

—ஸ்ரீ ஆளுடையநம்பிகள்.

குறிப்பு :— இப்புத்தகம் வேண்டுவோர் ஆதீனம் லைபரேரியன் அவர்களுக்கு 0-12-0 தபால் தலைச்சீட்டு அனுப்பிப் பெற்றுக்கொள்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவராத்திரி.

பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் ஒருவருக்கொருவர் நான் பிரம்மம் நான் பிரம்மம் என்று வாதஞ்செய்த காலத்து அவ்விருவரிடையே அடிமுடியைக் காணக்கூடாமல் அக்கினிமயமாகி ஓர் ஸ்தாணுவடிவமாய் பிரம்மஸ்வரூபியாகிய பரமசிவம் ஆவிர்ப்பவித்த காலம் சிவராத்திரிகாலம். அக்காலமே மாசிமாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி சோமவாரம் திருவோண நட்சத்திரங் கூடிய புண்ணியகாலமென்க. அப் பிரம்ம விஷ்ணுக்களுக்குச் சகளீகரித்த நாழிகை இராத்திரி பதினாலுநாழிகை என்பர். சகளீகரித்த சிவபெருமான், அடிமுடியைக் காணாது திகைத்துநிற்கும் பிரம்ம விஷ்ணுக்களை நோக்கி பிரமனே! நீ முடியைக்காணாது கண்டதாகப் பொய்யுரைத்தபடியால் உனக்குக் கோயிலில்லாமற் போகக்கடவது என்று அவனுக்கு நிக்கிரகமும், விஷ்ணுவே! நீ அடியைக்காணாமல் காணவில்லையென்றே மெய்கூறியபடியால் உனக்குக் கோயிலும் இரட்சிக்குந் தொழிலும் தந்தோமென்று திருமாலுக்கு அனுக்கிரகமும் செய்தனரென்க. தேவர்களெல்லாம் தரிசிக்க ஒரு முகூர்த்தம் அப்படியே அத்திருவுருவத்தோடு நின்றமையால் இலிங்கோற்பவகாலம் ஓர் முகூர்த்தமென்று விதிக்கப்பட்டதென்க. இராத்திரி காலத்தில் பரமசிவம் மஹேசுவரமூர்த்தமா யுதித்தபடியினாலே சிவராத்திரியென்று பேர் வந்தது. அக்கினிமயமாகிய ஸ்தாணுசொரூபமான அந்த இலிங்கத்தினின்றும் பரமசிவம் மஹேஸ்வரமூர்த்தமாய் வெளிவந்தபடியால் இலிங்கோற்பவரென்றும் திருநாம முண்டாயிற்று.

*

அன்றியும் பிரமதேவருக்கு இறுதிக்காலமாகிய பிரளயத்தில் சீவராசிகள் முழுவதும் ஒழிந்துபோன காலம் இராத்திரி காலம். அந்த இராத்திரி நான்கு சாமத்திலும் பார்வதிதேவியார் பரமசிவனைப் பூசித்து மறுபடி சிருஷ்டி தொடங்குங் காலத்தில் பார்வதிதேவியார் பரமசிவத்தை நோக்கி நான் தேவரீரைப் பூசித்த இந்த இராத்திரி சிவராத்திரியென்று பெயர் பெறவும், விரதமிருந்து இந்தக்காலத்தில் பூசிப்பவர்கள் சாயுச்சியம் பெறவும் கிருபைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

ஆகையால் மாசிமாதம் அபரபட்ச சதுர்த்தசி திதியில் சூரியோதயகாலத்தில் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துச், சிவத்தியானத்துடன் அன்று பகல் முழுவதும் உபவாசமாயிருந்து, இராத்திரி நான்கு சாமத்திலும் நித்திரையில்லாமல் சிவபூஜை செய்யவேண்டும்.

சிவபூசையில்லாதவர்கள் ஆலயத்திற்சென்று பரமசிவத்துக்கு அபிஷேகமுதலானவைகள் செய்வித்துத் தரிசனம்பண்ணி மறுநாள் உதயமானவுடன் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிவதரிசனம் செய்துவந்து பாரணம் செய்ய வேண்டும் சிவராத்திரி தினம் இராத்திரி பதினாலு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலமாக விதிக்கப்பட்டிருப்பதனால் அந்தக்காலத்தில் அவசியம் சிவதரிசனம் செய்யவேண்டும். சிவராத்திரி தினத்தில் பரார்த்த பூசையாவது ஆன்மார்த்த பூசையாவது தங்கள் தங்கள் நியமப்பிரகாரம் நடத்த வேண்டியது.

பரார்த்தத்துக்காவது, ஆன்மார்த்தத்துக்காவது சூரியதேவர் முதலான பரிவாரங்களுக்குப் பூசை நடத்தவேண்டியதில்லை. பரார்த்தத்துக்கு மஹாலிங்க முதலான மூலமூர்த்திகளுக்கும், ஆன்மார்த்தத்துக்கு இலிங்கமூர்த்திக்கு மாத்திரமுமே பூஜை நடத்த வேண்டியது. பரார்த்த ஆன்மார்த்தங்களில் மஹாகணபதிக்கு மாத்திரம் நான்கு காலத்திலும் பூசை நடத்தலாம்.

1-வது காலம்—அபிஷேகம் பஞ்சகௌவியம். வஸ்திரம் செம்பட்டு. பத்திரம் வில்வம். கந்தம் பச்சைக்கர்ப்பூரம் சேர்ந்த

சந்தனம், நிவேதனம் பால்பொங்கல், தூபம்—சாம்பிராணி, சந்தனக் கட்டை. தீபம் புட்ப தீபம்.

2-வது காலம்—அபிஷேகம் பஞ்சாமிர்தம், வஸ்திரம் மஞ்சள் பட்டு, பத்திரம் குருந்தை, கந்தம் அகிற்சந்தனம், நிவேதனம் பாயசான்னம், தூபம் குங்குமம், தீபம் நக்ஷத்திர தீபம்.

3-வது காலம்—அபிஷேகம் பலோதகம். வஸ்திரம் வெண் பட்டு. பத்திரம் கிளுவை, விளா. கந்தம் கஸ்தூரி சேர்ந்த சந்தனம். நிவேதனம் எள்ளோதனம் தூபம். கருங் குங்குலியம். தீபம் ஐந்து முகதீபம்.

4-வது காலம்—அபிஷேகம் கந்தோதகம். வஸ்திரம் நீலப்பட்டு. பத்திரம் கருநொச்சி. கந்தம் புனுகுசேர்ந்த சந்தனம். நிவேதனம் சுத்தான்னம். தூபம் கர்ப்பூரம் லவங்கம். தீபம் வில்வார்த்தி.

மேலெழுதிய நான்குகால பூசைக்கும் விதித்திருக்கின்ற திரவியங்களோடு யதாவிதியான அபிஷேகம்முதலானவகைகளும் பத்திர புஷ்பங்களும் சித்திரான்னங்களும் அபூபவகைகளும் சோடசோபசார தீபாராதனைகளும் நடத்தவேண்டியது. இந்த நான்குகால பூசைகளும் மஹாலிங்க மூர்த்திக்கு அஷ்ட புஷ்ப பூர்வமாக நடத்த வேண்டியது. அஷ்டபுஷ்பவிதியை ஆசாரியர் மூலமாய்உணர வேண்டியது. அஷ்டபுஷ்பமென்பது அர்ச்சனைக்காகிய எண்வகைப் புட்பங்களும், மந்திரபூர்வமாயுள்ளதுமென்க.

## ஆன்மார்த்த பூசைக்கு ஸ்தானம்.

ஆலயம் — புண்ணியஸ்தலம் — நதிதீரம்—பர்வதம் — புட்பவனம் ஆசாரியர்வீடு—தன்வீடு இந்தஸ்தானங்களாம்.

## சிவராத்திரி புண்ணிய காலத்தில் பண்ணவேண்டிய தானங்கள்.

சிவலிங்கம், உருத்திராக்ஷம், விபூதிப்பை, நவரத்தினம் பொன், வெள்ளி, கோ, பூமி முதலானவைகளாம். ஆகையால்

மேற்குறித்த விடங்களில் பூசையும், இந்த தானங்களையுஞ் செய்து மறுநாள் பிராமண சந்தர்ப்பணையும் மஹேஸ்வர பூசையும் நடத்த வேண்டியது. இந்த மஹாசிவாராத்திரி விரதத்தை கிருதயுகத்தில் விநாயகமூர்த்தியும், திரேதாயுகத்தில் ஷண்முகமூர்த்தியும், துவாபரயுகத்தில் பிரமதேவரும், கலியுகத்தில் விஷ்ணு மூர்த்தியும் அனுஷ்டித்ததாக வாதுளமுதலிய ஆகமங்களிலும் காலோத்தர முதலிய உபாகமங்களிலும் பௌஷியோத்தர முதலிய புராணங் களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சோமவார விரதம்.

---

நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள் ஓர்காலத்துத் தம்மிடத்திற் கெழுந்தருளிய முனிசிரேஷ்டராகிய கௌதமருக்கு சோடச உபசாரங்களைச்செய்து, சுவாமீ! அடியேங்கட்கு அனுக்கிரகஞ்செய்யவேண்டியதொன்றுளது. அது உலகத்தில் நடந்து வருகிற சோமவார விரதமென்பதே யென்று விண்ணப்பஞ் செய்து கொண்டனர். அம்முனிசிரேட்டர், ஓ முனிவர்களே! கேளுங்கள் பூர்வத்தில் சந்திரனனவன் உமையாசகிதத்வா, சோம: என்னும் திருநாமஸ்வரூபராகிய சிவபெருமானுக்குரிய சோமவாரத்தில் விரதமிருப்பதே தகுதியென்று நியமித்து அதில் விரதாரம்பஞ் செய்து முடிந்தவுடன் சிவபெருமான் அவன் தவத்திற் கிரங்கிப் பிரத்தியட்ச தரிசனந் தந்து, ஓ சந்திரனே! உனக்கு வேண்டிய வரம் கேளெனச் சந்திரன் மஹா சந்தோஷ முடையவனாய்ப் பலவாறு தோத்திரஞ்செய்து, சுவாமீ! அடியேன் தேவரீரிடத்தே எப்போதும் வாசமாயிருக்கவும் அதற்குத்தக்க பெயரொன்றை யடையவும் தேவரீர் அருள்புரிய வேண்டுமென்ன, சிவபெருமான் சோமனென்னும் பெயர் தந்து தனது சடையில் அச்சோமனைத் தரித்துக் கொண்டருளினர்.

பின்னரோர்காலத்தில் கைலையங்கிரியில் நவரத்தினகசிதமாகிய ஆசனத்தில் தேவர், கின்னரர், கிம்புருடர், சித்த, வித்தியாதரர், இருடிகள் மற்றுமுள்ளோர்களும், தோத்திரஞ் செய்ய வீற்றிருந்த சிவபெருமானனவர் தம் சடைமுடியிலிருந்து சந்திரனை யாவருங்கண்டதிசயிக்கத் தோற்றுவித்தருளினர். அப்போது பார்

வதியார் இச்சந்திரன் யார்க்குமரியதாகிய உமது திருமுடியையடைந்துவாழும் பெரும்பேறடைந்த காரணத்தை அடியேனுக் கருளவேண்டுமென்று பிரார்த்திக்கச் சிவபெருமான் அருள் செய்கின்றனர்.

ஓ பார்வதி! எமக்குரிய சோமவார விரதத்தை மஹா பத்தியுடன் விதிப்படி செய்து முடித்ததனால் அடைந்தன னென்றனர். உமாதேவியார் மிகமகிழ்ந்து சுவாமீ! அடியேனுக்கு அவ்விரத முறையைக் கூறியருளவேண்டுமென்று துதிக்கச் சிவபெருமான் யாவருமுய்யும்பொருட்டு ஓ கௌரீ! சோமவாரதினத்தில் இவ் விரதத்தை அனுட்டித்துப் பெரும்பேறடைய எண்ணுவோர் ஆரம்பத்தில் அஷ்டதிக்கிலும் அஷ்ட கலசங்களையும், நடுவே பத்மாசனத்தில் பாணலிங்கத்தையும் நிறுத்தி ஆசிரியனைக் கிழக்குமுகமாக இருக்கச்செய்து வில்வம், அறுகு, வெள்ளெருக்கு, வெள்ளைப்பட்டு, வெள்ளையட்சதை, பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம், பால், சந்தனம், புனுகு, இளநீர் முதலிய சிவபூசாதிரவியங்களை அருகிருத்தி அபிடேகஞ்செய்து,

ஓம் மகாதேவாய நம:
ஓம் மகேஸ்வராய நம:
ஓம் சங்கராய நம:
ஓம் இடபத்துவசாய நம:
ஓம் சூலபாணியே நம:
ஓம் காமாங்கநாசனுய நம:
ஓம் தேவதேவேசாய நம:
ஓம் ஸ்ரீகண்டாய நம:
ஓம் ஈஸ்வராய நம:
ஓம் பார்வதிப்பிரியாய நம:
ஓம் உருத்திராய நம:
ஓம் சிவாய நம:

என்னும் பன்னிரண்டு மந்திர புட்பத்தால்அருச்சித்துத்தூபதீப ஆராதனை சோடசோபசாரமும்முடித்துப் பன்னிரண்டு பிரதட்சண நமஸ்காரஞ்செய்து ஒருகால் போசனமேனும் உபவாசமேனும் இருப்பதாக நியமித்துக்கொள்ளவேண்டும்.

உத்தமமாகிய உபவாசநியமஞ் செய்வோர் நித்திரையின்றிச் சிவபுராணங்களைக்கேட்டும், படித்தும் இரவைக் கழித்து மறுநாள் காலையில் பாரணஞ்செய்யவேண்டும். இவ்வாறு 1, 2, 3, வருடம்

இவ்விரதமனுஷ்டித்து முடிவிலும் இவ்வாறே நடத்திப் பன்னிரண்டு பிராமணர்களைச் சோடசோபசாரம்செய்து வணங்கி அர்த்தநாரீச உருவமைந்த பொற்பிரதிமைக்கு அபிடேகம்முதலியவற்றை நடத்த வேண்டும்.

இடை நின்ற சோமவாரங்களின் காலையில் சிவநாமத்தை உச்சரித்தெழுந்து நதி, ஏரி, குளம், கால்வாய் முதலிய விடங்களிற் சென்று சிவபூசையை முடித்துக்கொண்டு வில்வம் 5, அறுகு 10, வெள்ளையட்சதை 10 இம்மூன்றையுங் கொண்டு பிரதோஷ காலத்திற் சிவாலயத்துட் கிரமப்படி பிரவேசித்து அவ்வில்வம் முதலியவற்றால் அருச்சித்துச் சிவதரிசனம் செய்துவந்து உண்டு சிவ புராணங்களைப் படித்தும் கேட்டும் தனித்துச் சயனிக்கவேண்டும். இவ்வாறு இவ்விரதம்கொள்வோர் வெள்ளை வத்திரத்தையே தரித்துக்கொண்டு சிவசின்னம்தாங்கி சிவசந்நிதானத்துட் பிரவேசித்தல் முறை. இவ்வாறு முற்றும் நடத்த முடியாதாயினும் அந்தந்த வருடம் கார்த்திகைமாதத்திலாவது இச்சோமவார விரதம் அனுஷ்டிப்பவர் பெறுதற்கரிய சாயுச்சிய பதவியை யடைவர் என்பதற்குச் சந்தேகமில்லையெனச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர். என்று சொல்லிக் கௌதமர் விடைபெற்றுச்சென்றனர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உருத்திராக்ஷமகிமை.

## உருத்திராக்ஷதாரணத்தால் வானரமும் சேவலும் போகமோக்ஷங்களை அநுபவித்தமை.

---

நந்திக்கிராமமென்னு மோர்கிராமத்தில் நர்தையென்னும் பெயருடைய ஓர் தாசியிருந்தாள். அவள் சேவலொன்று, வானரமொன்று ஆகிய இவ்விரண்டையும் வளர்த்து வந்தாள். அந்தத் தாசியானவள் சிவபக்த சிரோமணியாகையால், பஸ்மதாரணம் உருத்திராக்ஷ தாரண மில்லாதவரைப் பார்ப்பதற்கும் பரிசிப்பதற்கும் அஞ்சிக் கூசி அப்புறஞ் செல்லும் நியமமுடையவளாய்த் தன்னால் வளர்க்கப்பட்ட சேவலுக்கும் வானரத்துக்கும் காது கழுத்து முதலிய ஸ்தானங்களில் உருத்திராக்ஷதாரணஞ் செய்து, அவைகளுக்குத் தன்னுடைய நாட்டியத்தையும் கற்பித்துக் கொடுத்து, அதிக சிறப்புடன் வளர்த்திவந்தனள். இவ்வாறு நெடுநாள் சென்ற பின்னர் அவ்விரண்டும் இறந்துவிட்டன.

இறந்துபோன அவ்விரண்டும் உருத்திராக்ஷதாரணத்தோடு கூடியிருந்த புண்ணிய விசேடத்தால், கோழியானது காஸ்மீர தேசத்துக்கு அரசனாகிய பத்திரசேனனுடைய மகனாகப்பிறந்தது. வானரம் அவ்வரசனுடைய மந்திரியின் மகனாகப் பிறந்தது. அரசன் தன்மகனுக்கு சுதன்மாவென்று பெயரிட்டான். மந்திரி தன் மகனுக்குத் தாரகனென்று பெயரிட்டான். இவ்விரண்டும் உடலும் உயிரும்போற் கூடிவாழ்ந்து, அரசுரிமைக்குரிய பொன் மணி முதலிய செல்வங்களையெல்லாம் வெறுத்து, முத்திசாதனத்துக்குரிய உருத்திராக்கமணிகளையே கிடைத்ததற்கரிய சிறந்த ஆபர

ணங்களென மதித்து அவற்றை விதிப்படி சிரமுதலிய அங்கங்களில் அணிந்து, நெடுங்காலம் தங்கள் இராச்சியத்தை யாண்டு, இம்மையி லனுபவிக்கவேண்டிய போகங்களையெல்லாம் குறைவின்றி அனுப வித்துத் தங்கள் குடைநிழலின்கண் வாழ்வாரையும் உருத்திராக்க மணியில் அன்பு வைத்து அணியச்செய்து சிவசம்பந்திக ளாக்கி இவ்வுலக வாழ்வைவிட்டுச் சிவலோகஞ்சென்று அங்கு சிவகணங் களோடு வாழ்ந்திருந்தார்கள்.

இழிந்த பிறப்பினையுடைய சேவலும், வானரமும் இருந்த பிறப்பொழிந்து அரசச்செல்வத்தை யனுபவித்து மறுமையில் சிவ லோகமடைந்தது தவங்களைச்செய்தமையாலோ, தானங்களைச் செய் தமையாலோ, ஞானவிசாரஞ் செய்தமையாலோ, இவைகளிலொன் றுனுமன்று. உருத்திராக்கந் தரிக்கப்பெற்ற தொன்றாலேயேயாம். ஆகலான், இம்மை மறுமைப் பயன்களை யடைய விரும்புவோர் உருத்திராக்கமணிகளையே சிறந்த ஆபரணமாகக்கொண்டு கூசாது அணியவேண்டுமென்க.

---

## உருத்திராக்ஷதாரணத்தால் (தன்னைவென்ற) பகைவனை வென்றது.

புட்கராதேயத்தை யாண்ட சவுமியனென்பவ னொருவன் அழ கிலே சிறந்த தன் மனையாளுடைய இன்பநலத்தை வெறுத்துப் பிறர்மனை நலனையே பெரிதெனவிரும்பியும், புல்லொழுக்கங் களையே நல்லொழுக்கங்களெனக் கடைப்பிடித்தும், அநீதியெல்லாம் நீதியென்றெண்ணியும், தன்கீழ் வாழ்வோரை ஒருகணமேனும் நீங் காது வருத்துவதே தொழிலாகக்கொண்டும் அரசுபுரிந்தான்.

அவன் மனையாள் தன்னைக் கணவன் விரும்பாதொழியவே காமத்தீயால் மிகவும் வெதும்பிச் சகிக்க லாற்றாது, தன்னரசனுக் குரிய புரோகிதனுடைய மனையாளாகிய சத்தியவிரதை என்பவ ளிடத்திற் சென்று தனக்கு நேர்ந்த குறைபாடுகளையெல்லாம் ஒன் றொழியாது கூறி, என்கணவன் எனக்கின்பத்தைத்தந்து என்னை

விட்டுப் பிரியாது எப்பொழுதிருப்பான் என்றனள். சத்தியவிரதை யானவள் கணவனுசையால் படுகின்ற துன்பத்தைப் பார்த்து மன மிரங்கி, "ஓ பெண்ணே, நீயேன் கவலைப்படுகின்றாய், சிவபெரு மானுடைய கண்மணி (உருத்திராக்கமணி) யிருக்கின்றது; அதனைத்தருகின்றேன்; நீ யணிந்துகொள்; உன்கணவன் உனக்குக் கண்ணுயிருப்பான்; இதனை நம்பு; வேறொருமந்திரமும் தந்திரமும் வேண்டாம்" என்றனள் அவ்வரசன்மனைவி அப்பார்ப்பனியி னுடைய பாதத்தில் வீழ்ந்து வணங்கி "நானுய்ந்தேன் உய்ந்தேன்" என்று ஆனந்தபரவசத்தளாய் "அம்மணி! அக்கண்மணியைத்தாரும் அணிந்துகொள்ளுகிறேன்" .என்ன, அப்பார்ப்பனி ஓர் அக்க மணியை யெடுத்து "உனக்குப் புத்திரப்பேறுண்டாகக் கடவது" என்றுஆசீர்வதித்துக் கொடுக்க, அம்மணியை அன்போடேற்று அன்றுதான் மங்கிலியத்தைத் தரித்தவள்போல் தரித்துக்கொண்டு அப்பார்ப்பனியிடத்து விடைபெற்றுச் சென்றனள். சென்றஅன்றே இவளை என்றும் நினையாத கணவன் அவள்பால் வந்தனன். உருத் திராக்ஷதாரணியாகிய அக்கற்புடையவள்அதிசயித்து முன்னே நிற்க, அவன் அவளைப்பார்த்து அவளுக்கப்போதுள்ள அப்பேரழகு எப் போது வந்தது என்றுகூறி மகிழ்ந்து களித்து இருவரும் மன் மதனும் ரதியும்போன்றவர்களாய் அயலார்மனையை வெறுத்து இன் புற்றிருந்தார்கள்.

இவ்வாறிருக்கும் நாள்களி லோர்நாள் அவ்வரசன் அயலூருக் குச் செல்ல, அங்குதன் சைனியங்களைக் காவாமையால் திக்கு களிலெல்லாம் அச்சைனியங்கள் ஓடிப்போய்விட்டன. அவ்வா றோடிப்போனதை யுணர்ந்த மாற்றரசர்கள் அவ்வரசனைத் தோற் றோடிப்போகும்படி செய்தார்கள். அரசனும் அரண்மனைக்குட் சென்று மனைவியிடத்தில் தோல்வி யுற்றதைக் கூற, அவ்வசுமதி அரசனைப்பார்த்து 'நீர் பயப்படவேண்டாம், சிவபெருமானது உருத்திராக்கமிருக்கின்றது. அதையே ஆபரணம்போல் தரித்துக் கொண்டால் பகை யொழிவீர்; பெருந்திரவியஞ் சேர்ப்பீர்; இடை யூறு நீங்குவீர்; உம்மைத் தேவரும் வணங்குவார்கள்; இடபக் கொடி யேந்திய சிவபெருமானது இரண்டு திருவடிகளையும்

பெறுவீர்; ஆகையால், முறைப்படி அம்மணியைத் தரித்துக் கொள்ளும்'' என்று கூறினள். அவ்வாறே புரோகிதரைக்கொண்டு ஆயிரம் உருத்திராக்க மணியை யணிந்து, பகையை வென்று, அப்பகைவருடைய தேசங்களையும் கைப்பற்றி, தன்குடிகள் அனைவரையும் அவ்வுருத்திராக்கமணியைத் தரித்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டான்.

---

## சுவரில் சித்திரரூபமாயிருந்த திருமால் உருத்திராக்ஷமகிமை கூறியது.

இவ்வாறு உலகத்திலுள்ளவர்களெல்லாம் உருத்திராக்க மணியை அணியச்செய்த அரசனுக்கு இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பிறந்தார்கள். அவன் அவர்களையும் உருத்திராக்கமாலையை ஆபரணமாகத் தரிக்கச்செய்தான். அவ்வாறே அவர்களும் தரித்துக்கொண்டு வந்தார்கள். பின்பு கமலாக்கனென்னுமோரரசன் அப் பெண்களில் காலஞானி என்பவளை மணந்து கலவியின்பத்தை விரும்ப, அவள் 'உருத்திராக்கமில்லாதவர்களைப் பரிசிக்கமாட்டேன்' என்று கூறினள். அவ்வரசன் புன்சிரிப்புக்கொண்டு "அரசர்களணிய வேண்டிய ஆபரணங்கள் அநேக மிருக்க நீ அணிந்திருக்கின்ற உருத்திராக்கமணி அவ்வாபரணங்களி லொன்றல்லவே'' என்று தடுத்துக்கூறினன். அப்போது காலஞானி உருத்திராக்கமணி யணிவதனாலுண்டாகும் பயன்களை யெடுத்துக்கூறி "இவற்றை ஆகமவிதிகளுணர்ந்த பெரியோர்களைக்கேட்டு உனக்குச் சம்மதப் படின் தரித்துக்கொள்'' என்று கூறினள். அதற்கு அரசன் "யாராயிருந்தாலும் நான்எடுத்துச் சொல்பவர்களைக்கொண்டு அவ் வுருத்திராக்க மணியின் மகிமையைச்சொல்லச் செய்தால் நானே உனக்கு மனைவி, நீயே எனக்குக் கணவனாவாய்'' என்று ஊழ் வினையின் வலிமையால் அறிவில்லாமற் கூறினன். காலஞானியும் அதற்குடன்பட்டாள். இராக்காலமும் ஒழிந்தது. அரசன் கொலு மண்டபத்தையடைந்து சதுர்வேத முணர்ந்த வேதியர்களோடும் வீற்றிருந்தான். அப்போது காலஞானி இன்னோர் கூறின் அதனைத்

தெரிவேனென்று நீ குறிப்பித்த அவரைக் காட்டுவாயென்று வினவ, அவன் சுவரில் எழுதியிருந்த திருமாலைக் காட்டி "இவரைக்கொண்டு நீ சொல்லுவிப்பாய்" என்று கூறினன். அப்போது அப்பெண்மணி சிறிதும் அஞ்சாது சொல்லுவிப்பதற்குச் சம்மதித்து நின்று, பாற் கடலில் பள்ளிகொண்டிருக்கின்ற திருமாலை உருத்திராக்கமணியின் மகிமையைக் கூறும்படி கட்டளையிட்டருள வேண்டுமென்று சிவ பெருமானைநோக்கி,

வெண்ணீ றணிந்த விமலா! விரிசடைமேல்
தெண்ணீர் பொறுத்த சிவானந்த வெள்ளமே!
பண்ணீர் மொழியொருத்தி பங்கா! கடுவொடுக்கும்
ஒண்ணீல கண்டா! வுயிர்க்குதவ வேண்டுமால்.

ஏனப் பொருப்பா யனமா யிருநிலனும்
வானத் தளவு மருண்டார்க்கும் வந்திலாய்!
ஊனொக்க வன்பர்க் குடனிற்பா யென்பதெலாம்
கானக் குழல்பங்கா! வித்தலையிற் காண்பேனால்.

மையார் களத்தாய்! மறியாய்! மழுப்படையாய்!
பையா டரவணைய பாய்விடையாய்! அன்பிலர்க்குப்
பொய்யாய்! பிறந்திறவாப் புண்ணியா! வென்போல்வார்
மெய்யாய் நினைத்தேன் முடித்தருள வேண்டுமால்.

என்று பிரார்த்தித்தனள். அப்போது அச்சுவரில் எழுதியிருந்த அறி ஞயில் கூர்பவராகிய திருமால் எழுந்துநின்று கண்களை இமைத்தனர். அவ்வாறு கண்களிமைத்தலைக் கண்ட காலஞானி தோத்திரங்களைப் பாடினாள். தன்மனதில் அதுவரையிலிருந்த நடுக்கம் நீங்கினாள். கரங்களைச் சிரசிற் சூட்டினாள். திருமாலைச் சமீபித்தாள். சமீபித்த அக்காலஞானி திருமாலை வணங்கி, "ஓ சுவாமீ! எனதுயிர் போன்ற வர்க்கு உருத்திராக்க மணியின் சிறப்பைக் கூறியருளவேண்டும்" என்று பிரார்த்தித்தலும் திருமால் சௌமியனென்பவனது பெருந் தவமே! சொல்லுகின்றேனென்று கூறுகின்றனர்.

"சிவபெருமானது உருத்திராக்ஷ மணியின் சிறப்பை யானே கூறவல்லேன்? எனக்கும் எளிமையாய் விட்டதோ? என்னாற் கூறவொலாது! அவ்வுருத்திராக்க மணியைத் தரித்தவர்களைத் தரிசித்தவர்கள் கைலாய பதியின் திருவுருவமைந்து தேவர்கள் வணங்க வீற்றிருப்பார்கள். பிறந்த நாள் முதலாகத் துன்மார்க்கத்தில் நடந்து கடினசித்தமுடையவர்களாய்க் கொலைகளவு முதலியவற்றில் பயின்றவர்களும் ஓர் உருத்திராக்க மணியைத் தரித்தால் அவர்கள் பெறும்பேறு என்போன்றவர்கட்கும் கிட்டுவது அரிது. உருத்திராக்கமணியை யணியாமல் எத்தவம் புரியினும் அத்தவம் பொய்யே. அத்தகைய உருத்திராக்கமணியின் மகிமை என்னால்அளவிட்டுரைப்பதற் கரிதாம். அம்மணியின் மகிமைகள் உன்னைப்போல் யாரறிந்தார்கள்?" என்று திருமால் பலவும் எடுத்துக்கூறி, சேஷயனத்தின்மீது அறிதுயில் கூர்ந்தனர். அப்போது வேதியர்களும் மன்னவர்களும் திருமகளையொத்த காலஞானியைத் துதித்தார்கள்.

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# உருத்திராக்க விசிட்ட சூசனம்.

இவ்வுருத்திராக்க விசிட்ட நூலிற் கூறப்படாதனவாய் வேறு சிவாகமாதிகளில் கூறப்பட்டுள்ளனவற்றில் சண்டைக்கு இன்றியமையாதன சிலவற்றைச்சுருக்கி விளக்குதும்: —

இவற்றை மேற்படி நூலில் இயைபுநோக்கி ஆங்காங்குக் கூட்டிக்கொள்க.

சந்திர நேத்திரத்து உதித்த நீரில் பதினாறுவித வெண்ணிற உருத்திராக்க மரங்களும், சூரியநேத்திரத்து உதித்த நீரில் பன்னிருவிதச் செந்நிற உருத்திராக்க மரங்களும், அக்கினி நேத்திரத்து உதித்த நீரில் பத்துக்கருநிற உருத்திராக்க மரங்களுமாக முப்பத்தெட்டு மரங்கள் தோன்றின. அவற்றுஉதித்த அம்மணிகளில் உன்னதமுடைய முகமும் உன்னதம் இல்லாத பக்கமே அடியும் ஆம். முககணிதங்களை இரேகைகளைக்கொண்டே அறியவேண்டும். அவற்றின் மூலம் பிரமதேவரும், நாளம்விஷ்ணுமூர்த்தியும், முகம் உருத்திரமூர்த்தியும், கேசரங்கள் சகல தேவதைகளுமாம். அவை பதினாறுமுகம் வரையும் உண்டு. அவற்றுள், ஒருமுக மணி தரிக்கில் சிவபெருமானுக்கும், இருமுகமணி தரிக்கில் சிவசத்திக்கும், மூன்று முகமணி தரிக்கில் மும்மூர்த்திகளுக்கும், நான்கு முக மணி தரிக்கில் பிரமதேவருக்கும், ஐந்துமுக

மணி தரிக்கில் சதாசிவ மூர்த்திக்கும், ஆறு முகமணி தரிக்கில் சுப்பிரமணியக் கடவுளுக்கும, ஏழு முகமணி தரிக்கில் சத்தமாதர்களுக்கும், எட்டு முக மணி தரிக்கில் அட்ட வித்தியேஸ்வரர்களுக்கும், ஒன்பது முக மணி தரிக்கில் கங்கை முதலிய நவ தீர்த்தங்களுக்கும், பத்து முக மணி தரிக்கில் பத்துத்திக்குப் பாலர்களுக்கும், பதினொரு முக மணி தரிக்கில் பதினொரு உருத்திரர்களுக்கும், பன்னிரு முக மணி தரிக்கில் விஷ்ணு மூர்த்தியாகிய வாசுதேவர் முதலிய பன்னிருவர்களுக்கும், பதின்மூன்று முக மணி தரிக்கில் சதருத்திரர்களுக்கும், பதினான்கு முக மணி தரிக்கில் அசுவினி தேவதைகளுக்கும், அஷ்ட வசுக்களுக்கும், பதினைந்து முக மணி தரிக்கில் சந்திரன் வருணன் முதலியவர்களுக்கும், பதினாறு முக மணி தரிக்கில் முப்பத்து முக்கோடி தேவர்கள்—பிரமதேவர்—விஷ்ணுமூர்த்தி—சிவபெருமான் என்னும் அனைவர்க்கும் பிரீதியாகும்.

இம்மணி தரிக்கப் பெறுவோர் எத்தகையரோ ஆயினும் அவர் சிவன் முத்தரே ஆவர். ஒரு சுணங்கன் தரிக்கப் பெறினும் நற்கதி பெறுவது திண்ணம். பற்பல தெய்வ நதிகளின் மூழ்குதல், பரிமேதம் முதலிய யாகம் இயற்றுதல் ஏழு கோடி மகாமந்திரங்களையும் எண்ணுதல், ஐந்தழலி னிடை வதிந்து அருந்தவம் புரிதல் ஆதிய பலன்களையும் எளிதின் நல்கும். முப்புரிநூல் இன்றி வேதம் ஓதின் அது பயன்படாதவாறு போல, விபூதியோடு உருத்திராக்க வடமு மின்றிச் செய்யும் நீராடல் ஓதல் ஈதல் தென்புலத்தார்க்கு உதவல், சிவனைப்பூசித்தல் முதலியவை சிறிதும் பயன்படா வாம். சிகையிற்றரித்து எந்நீரில் மூழ்கினும் சிவ கங்கையில் மூழ்கிய பலன் சித்திக்கும். ஒருவர் ஆயிர மணி தரிக்கப் பெறின் சிவனெனவே தேவரும் வழிபடத்தக்கவராவர்.

பஞ்சாக்கர உச்சாரணத்தோடு இம்மணிகளை அணியப் பெற்றவர்பால் சிவபெருமான் என்றும் சாந்நித்தியராயிருப்பார். அவர் உறையுந் தலம் முத்தித்தலம் ஆகும். அவரைத் தரிசித்தவரும் தேவர் ஆவர். இன்னும் இவ்வுருத்திராக்க விசிட்ட நூலில் விதந்தருளிய பலன்களை அளிப்பதுமல்லாமல் ஐந்து முக மணி புணர்தற் குரியரல்லாத பிற மகளிரைப் புணர்ந்த பாவத்தையும் போக்கும். ஏழு முக மணி கோவதைதையையும் போக்கும், எட்டு முக மணி பொற்களவு துலாதான முதலிய தானம் ஏற்றல், பிறர் அன்னம் கவர்ந்துண்ணல் ஆகியவற்றின் பாவத்தையும் போக்கும். ஒன்பது முக மணி ஆயிரம் உயிர் வதைதையையும் நூறு பிரமவதைதையையும் பூதம் பிசாசம் சர்ப்பம் முதலியவற்றால் ஆகும் விக்கினங்களையும் போக்கிச் சித்தி முத்திகளைக் கொடுக்கும், பதினொரு முக மணி ஆயிரம் அசுவமேத பலத்தையும், நூறு வாசபேய பலத்தையும் இலக்கம் கோமேத பலத்தையும் நல்கும். பன்னிரு முக மணி கோமேத பலத்தையும் அசுவமேத பலத்தையும் சுவர்னதான பலத்தையும் அளிக்கும்.

இத்தகைய மணிகளுள்ளே சிகைக்கு ஏக முக மணியும் சிரசுக்கு இரண்டு முகம் அல்லது பதினொரு முக மணிகளும், காதுகளுக்கு ஐந்து—ஏழு—பத்து முக மணிகளும், கண்டத்துக்கு எட்டு முக மணிகளும், உதரத்துக்கு நான்கு முக மணிகளும், வாகுகளுக்குப் பதின்மூன்று முக மணிகளும், மணிக்கட்டுகளுக்கு ஒன்பது முக மணிகளும், உபவீதத்திற்குப் பதினான்கு முகமணிகளும், மார்பிற்கு எம்முக மணிகளும் உரித்து ஆகும். ஆறுமுக மணி வலப்புயத்தினும், ஒன்பது முக மணி இடப்புயத்தினும், பதினொரு முக மணி சிகையினும் பன்னிரு முக மணி காதுகளினும், பதினான்கு முக மணி சிரசினும் தரிப்பதுஉத்தமமே. ஒன்று

ஐந்து பதினொன்று பதினான்கு முக மணிகள் தினமும் பூசித்தற்கு மிகச் சிறந்தனவாகும். சயனத்தினும், மல சல மோசனத்தினும், புணர்ச்சியிலும், நோயினும், சனன ஆசௌசம் மரணாசௌசங்களிலும் உருத்திராக்க தாரணம் கூடாது. இக்காலத்தினும் அணிந்திருத்தல் வேண்டும் என ஆங்காங்குக் கூறுவது பீடையின் நிவிர்த்திப் பொருட்டாகவின், சிகையினும் காதுகளினும் உபவீதத்தினும் எப்பொழுதும் தரித்துக்கொள்ளலாம். இவ்வாறன்றி நீக்கமில்லாதிருக்கும்படி கண்டத்தில் முப்பத்திரண்டு மணியேனும் அல்லது ஒரு மணியேனும் தரித்திருக்கவேண்டும் என்பதும் விதியாம்.

இனிச் செபத்திற்கு விரல்களுள்ளே அங்குஷ்டத்தினால் மோக்ஷமும், தர்ச்சனியால் சத்துரு நாசமும், மத்திமையால் அர்த்த சித்தியும், அநாமிகையால் சாந்தியும், கனிஷ்டையால் இரக்ஷணையும் ஆம், மணிகளுள்ளே சங்க மணிகளால் ஐசுவரியமும், படிக மணிகளால் மோக்ஷமும், பதும மணிகளால் புஷ்டியும் இலட்சுமீகரமும், புத்திர தீபமணிகளால் புத்திரர் பசு தானியாதி அபிவிருத்தியும், பவள மணிகளால் வசியமாதிகளும், முத்து மணிகளால் சர்வசித்தியாதிகளும், மாணிக்க மணிகளால் உலக வசியமாதிகளும், மரகத மணிகளால் சத்துருசய முதலியவைகளும், குசக்கிரந்தி மணிகளால் பாவ நாசமும் வித்தியாபிவிர்த்தியும், பொன் வெள்ளி மணிகளால் காமிய கன்மாதிகளும், மாதிருகாக்ஷர மணிகளால் வாக்சித்தியும், ரசமணிகளால் சர்வ கார்ய சித்தியும், உருத்திராக்க மணிகளால் போக மோக்ஷங்களுமுண்டாம். ஆகலின், இவ்வுருத்திராக்க மணி கொண்டு ஒருருச் செபிக்கினும் ஒன்று கோடி ஆம் என நூல்களிற் கூறப்படுதலால் உருத்திராக்கமே செபத்திற்கு எவற்றினும் சிறந்த சாதனம் என்று தெளிக.

***

இச்செபமாலை கொண்டு செபிக்குங்கால் நூற்றெட்டு அல்லது எண்பத்து நான்கு முதலியவாகக் கூறப்படும் யோகாசனங்களுள் பத்திராசனம், முத்தாசனம், மயூராசனம், சித்தாசனம் (அல்லது சிங்காசனம்) பத்மாசனம், சுவத்திகாசனம், வீராசனம், கோமுகாசனம், சுகாசனம் என்னும் நவ ஆசனங்களும் செபத்திற்கு யோக்கியம் எனப் படுதலின் இவற்றுள் இயன்றதொன்றில் வதிந்து ஆபிசாரம் கிரகம், உச்சாடனம் முதலியவற்றின் சித்திக்குக் கருநிறமாகவும், வசியமாதியவற்றின் சித்திக்குச் செந்நிறமாகவும், முத்தியாதியவற்றின் சித்திக்கு வெண்ணிறமாகவும், உபாசனு மூர்த்திகளைத் தியானித்து செபிக்கவேண்டும். அகோராதி உக்கிரமூர்த்தி தியானத்தினால் உடனே பாவம் ரோகம் முதலியவற்றின் நாசமும், சதாசிவாதி மிசிர மூர்த்தி தியானத்தினால் சிலகாலத்தின் பின்னர் சகல சித்திகளும், சாம்பசிவாதி சாந்தமூர்த்தி தியானத்தினால் விரைவும் தாமதமும் இன்றிச் சாந்தி ஞானம் முதலியவைகளும் உண்டாகும்எனக் கொள்க. இந்நூலிற் கூறியபடி அன்றி வசியம், வியாதி, ஆபிசாரம், துவேஷம், தனலாபம், ஆகர்ஷணம், சாந்தி, மோக்ஷம் எனப்படும் இவ் எண்வித பலன்களை நாடி முறையே கிழக்கு ஆதி எண் திக்குகளையும் நோக்கியிருந்து செபித்தலும் உண்டு. ஓசை உண்டாயிற் பாவம் மிகும். ஆகலின் செபமாலையில் ஓசையுறாமல் செபிக்க வேண்டும். இன்னும் விரிக்கிற் பெருகும். ஏனையவற்றையும் இதுபற்றிய சரித்திரங்களையும் உபதேச காண்டம், பிரமோத்தர காண்டம், சிவரகசியம், கடம்பவன புராணம் ஆகியவற்றிற்காண்க.

உருத்திராக்கவிசிட்ட சூசனம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள்.

---

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், சனாசௌசம் மரணாசௌசத்தோடு போதல், எச்சிலுமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர்சிந்துதல், அபானவாயுவிடுதல், பாக்குவெற்றிலை யுண்டல், தாம்பூலமுமிழ்தல், போசனபானம் பண்ணுதல், நித்திரை செய்தல். க்ஷௌரம்பண்ணுவித்துக்கொள்ளுதல், எண்ணெய்தேய்த்தல், தலைபார்த்தல், மயிர்கோதிமுடித்தல், சூதாடல், சிரசிலே வேட்டிகட்டிக்கொள்ளுதல், தோளிலே யுத்தரீயமிட்டுக்கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், சட்டையிடுதல், வாகனமேறிச்செல்லுதல், குடைபிடித்துக்கொள்ளுதல், தீவர்த்தி பிடித்துக்கொள்ளுதல், உன்னததானத்திருத்தல், ஆசனத்திருத்தல், தூபி துசத்தம்பம் பலிபீடம் இடபம் விக்கிரகம் என்னும் இவைகளின் சாயையை மிதித்தல், விக்கிரகத்தையும் நிர்மாலியத்தையும் தீண்டுதல், திருவிளக்குச்சாயையிலும் சிவலிங்கச்சாயையிலும் தன்னிழலிடுதல், பெண்களைப் புகழ்தல், பெண்களைத் தீண்டல், பெண்களை இச்சித்துப் பார்த்தல், பெண்களைப் புணர்தல், தெற்குநோக்கிய சந்நிதியிலும் கிழக்குநோக்கிய சந்நிதியிலும் இடப்பக்கத்தில் நமஸ்காரமும் செபமும் பண்ணுதல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் வலம் வருதல் ஓடி வலம்வருதல், சிவபெருமானுக்கும் இடபதேவருக்கும் குறுக்கே போதல், அவர்களுக்குப் புறங்காட்டுதல், ஒருகை குவித்தல், அகாலத்திலே தரிசித்தல், சிவபெருமானுக்கும்

பலிபீடத்துக்கும்இடையே நமஸ்கரித்தல், வீண்பேசுதல், அசப்பியம் பேசுதல், அசப்பியங்கேட்டல், சிரித்தல், வீண்கீதம்பாடல், வீண் கீதம் கேட்டல், தேவத்திரவியத்தை இச்சித்தல், கீழ்மக்களைப் புகழ் தல், மேன்மக்களை இகழ்தல், துர்த்தேவதைகளை வழிபடுதல், சிவ பெருமானை முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் இடப்பக்கத்தும் நின்று வணங்குதல், திருவிளக்கவியக் கண்டும் தூண்டாதொழிதல், திரு. விளக்கில்லாதபொழுது வணங்குதல், உற்சவங்கொண்டருளும் பொழுது அங்கேயன்றி உள்ளேபோய் வணங்குதல், குரவர் முதலி யோரை வணங்குதல் முதலியனவாம். சிவ தீர்த்தம் திருநந்தன வனம் திருமடம் என்னும் இவைகளினும் மலசலங்கழித்தல், எச்சிலு மிழ்தல், மூக்குநீர்சிந்துதல், புணர்ச்சி முதலிய அசுசிகளைச் செய்த லாகாது. இக்குற்றங்களுள் ஒன்றை அறியாது செய்தவர் உருத் திரஞ் செபிக்கின் அக்குற்றம் நீங்கும். உருத்திரத்துக்கு உரியரல் லாதவர் அகோர மந்திரத்தில் ஆயிரம் உருச்செபிக்கின் அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்துசெய்தவர் நரகத்தில் விழுந்து வருந்துவர். அவருக்குப் பிராயச்சித்தம் இல்லை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சோமவார கற்ப சூசனம்.

இச்சோமவாரவிரதம் சிவராத்திரி போலப் பகல் முச்சந்தியும் முடித்து இரவிலே நான்கு யாமமும் பூஜோபகரணங்களைக்கொண்டு விதிப்படி அர்ச்சித்து ஊண் உறக்கம் ஒழிந்திருந்து மற்றைநாள் சந்தி இரண்டையும் முடித்தபின் அந்தணர் அருந்தவர் ஆதியரை அமுது செய்வித்து அதன் பின்பு தான் சுற்றத்தவரோடு இருந்து பாரணம் செய்து, நித்திரை விடுத்திருப்பதும்; பகற் சந்தி மூன்றும் முடித்து இரவில் நான்கு யாமமும் மானதமாகச் சிவபெருமானை வழிபட்டுக்கொண்டு ஊண் உறக்கம் ஒழிந்திருந்து மறுதினம் முற்கூறியபடி பாரணம் புரிந்து பகல் நித்திரை ஒழிந்திருப்பதும்; பகற்சந்தி மூன்றையும் முடித்து இரவிலும் உணவு ஒழிந்து மறுதினம் முற்கூறியபடி பாரணம் பண்ணிப் பகல் நித்திரை ஒழிந்திருப்பதும்; பகல் முச்சந்திகளையும் முடித்து இரவிலே முற்கூறியபடி அந்தணாதியர்க்கு அமுதூட்டிச் சுற்றத்தவரோடு அருந்துவதும்; பகல் இருசந்தி முடித்துப் பதினைந்து நாழிகைக்குமேல் நிழல் திரும்பும் சமயம் அறிந்து அந்தணாதியர்க்கு அமுது ஊட்டிச் சுற்றத்தவரோடு அருந்துவதும் என ஐவகைப்படும். இவற்றின் இயல்பும், இவற்றிற்குரிய உத்தியாபனமும், அனுட்டிக்க வேண்டிய கால வரையறையும், அனுட்டித்தார் பேறும், அனுட்டித்த

**
**

வர் இன்னவர் என்பதும், இச்சோமவாரத்திலே சிவசந்நிதியில் இயற்றும் கைங்கரியப்பேறும் இக்கற்பத்திலும்; திருவிளையாடற் புராணத்திலும், மற்றும் பேறு பெற்றார் சரித்திரங்களை உபதேசகாண்டம் பிரமோத்தரகாண்டம் கடம்பவனபுராணம் முதலியவற்றிலும் காண்க. விரிக்கிற் பெருகும்.

சோமவார கற்ப சூசனம் முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சிவராத்திரி கற்ப சூசனம்.

முன்னொரு கற்ப இறுதியிலே, பிரமதேவர் முதலிய பிரபஞ்சம் அனைத்தும் சிவத்தில் ஒடுங்க, அவ் இரவிலே உமாதேவியார் சிவபெருமானை வேதாகம விதிப்படி நான்கு யாமமும் அருச்சித்து, அவ் இரவு புலர்ந்தபின் அப்பெருமானை இறைஞ்சி, "யான் வழிபட்ட இவ் இரவு சிவநிசி என வழங்கவும் இந்நிசியிலே நான்கு யாமமும் பூசை புரிந்தவர் முத்தி எய்தவும் அருளவேண்டும்" என வேண்டி வரம் பெற்றனர். இதுவே 'சிவராத்திரி வரலாறு' என்பர்.

இஃதன்றியும், மற்றொரு கற்ப இறுதியிலே பிரளய வெள்ளத்து ஆழ்ந்த உலகைத் திருமால் வராக உருக்கொண்டு தூக்கி நிறுவி, மேரு வாதிய மலைகளை அதற்கு ஆதாரமாக நாட்டி, பின்னர் தமது நாபிக்கமலத்து உதிப்பித்த பிரமதேவருக்கு உலகைப் படைக்குமாறு பணித்து, தாம் திருப்பாற்கடலை அடைந்து அறிதுயில் அமர்ந்திருக்க அப்பிரமதேவர் முன்போல யாவும் படைத்துத் தாமே இறைவர் எனத்தருக்கித் தம்மால் ஆக்கப்பட்ட அனைத்தையும் நாடி வருங்கால், அத்திருப்பாற்கடலை எய்தி, ஆங்குள்ள திருமாலை எழுப்பி, நீயாவன் என வினவினர். அவர் யானே யாவும் நல்கும் பரம்பொருள் எனறார், பிரமதேவர் யாவும் நல்கும் பரம்பொருள் யானே யாக நீ இங்ஙனம் இசைப்பது

ஏன்? எனக் கலாம் விளைத்தனர், இவ்வாறு இருவரும் கலாய்த்து அஸ்திர சஸ்திரங்களால் போர் புரியுங்கால் இருவர்க்கும் இறுதி எய்தாவாறு இடையே சிவபெருமான் அனல் திரட்சி வடிவாய்ச் சிவலிங்க உருக்கொண்டு திகழ்ந்தனர். திகழ்ந்த அவ் இலிங்கோற்பவ காலம் ஆகிய அம்மாசிமாத அபரபக்கச் சதுர்த்தசியோடு கூடிய நடு இரவே சிவநிசி எனப்பட்டது. பின்னர் அவ் இருவரும் அச்சோதிலிங்க ரூப வடிவின் அடிமுடி காண்பான் தொடங்கி, இயலாமை யின் மீண்டு, அப்பெருமானை வழிபட்டு, அக்கடவுள் அருளிய வாறே ஆதியில் அம்பிகை நோற்ற அச்சிவநிசி விரதத்தைத் தாமும் நோற்றல் உடையராய் நாலு யாமமும் பூசித்து, வரம் பெற்றுத் தேவிமார்களோடு தம் பதவிகளை அடைந்து வாழ்ந்து இன்புற்றனர் என்பதும் ஒன்று, இவ்விரு சரிதமும் வேதாகம புராண சித்தமே.

இச்சிவராத்திரி மகா சிவராத்திரி, மாத சிவராத்திரி, பக்க சிவராத்திரி, வார சிவராத்திரி, நித்ய சிவராத்திரி என ஐவகைப்படும். அவற்றுள் மகா சிவராத்திரி உத்தமோத்தமம்—உத்தமம்—மத்திமம்—அதமம் என நான்கு வகைப் படும். இந்நான்கனுள் இரவிலே திரயோதசி திதி மிக்கிருப்பச் சதுர்த்தசி குறைந்து வருவது உத்தமோத்தமம். திரயோதசி குறையச் சதுர்த்தசி மிக்கு வருவது உத்தமம். இரவு முழுமையும் சதுர்த்தசியே வருவது மத்திமம், சதுர்த்தசி அமாவாசையோடு கூடி வருவது அதமம் என்பதே இந் நூலாசிரியர் தாம்கொண்ட நூற்றுணிபு.

இவ்வாறன்றி, சூரியோதயந் தொடுத்து அஸ்தமயன பரியந்தம் திரயோதசி இருக்கப்பின் சதுர்த்தசி வந்து அற்றை இரவும் மறுநாட் பகல் அஸ்தமயன பரியந்தமும் இருப்பது

உத்தமோத்தமம். சூர்யாஸ்தமயனத்திற்குப் பின் சதுர்த்தசி கூடி மறுநாள் அஸ்தமயனத்துக்குப் பின்னும் நிற்பது உத்தமம். சூர்யோதயம் தொடுத்து மறுநாட் சூரியோதயம் வரையில் பொருந்தி நிற்கும் சதுர்த்தசியும் அஸ்தமயனத்துக்கு முன் கலக்கும் சதுர்த்தசியும் அஸ்தமயனத்துக்குப் பின் ஏழு நாழிகை அல்லது பத்து நாழிகைக்கு மேல் கூடும் சதுர்த்தசியும் மத்திமம், இரவிலே இருபது நாழிகை அல்லது பதினறரை நாழிகை வரை சதுர்த்தசி நிற்க அப்பால் அமாவாசை வந்து கூடுவது அதமம் என்பதும் நூற்றுணிபே.

அற்றேல், அஃதாகுக. விநாயக சதுர்த்தி மத்தியான்ன வியாபகமும், பார்வண சிரார்த்த திதி அபரான்ன வியாபகமும், பிரதோஷம் சாயங்கால வியாபகமும், சிவராத்திரி பிரதோஷ அர்த்த ராத்திரிகளின் வியாபகமும், நரக சதுர்த்தசி அருணோதய வியாபகமும் பெறுவதே முக்கியம் என்றும், சிவராத்திரிக்குச் சதுர்த்தசி வியாபகம் வேண்டப்படும் காலம் இரண்டனுள் பூசா ஆரம்ப காலமாகிய பிரதோஷ கால வியாபகம் இல்லாதொழியினும் இலிங்கோற்பவ காலம் ஆகிய அர்த்தராத்திரி வியாபகம் அவசியகம் வேண்டும் என்றும், அர்த்தராத்திரியே இலிங்கோற்பவ விசேடகாலம் ஆகலின் அதில் ஒரு கலையளவேனும் சதுர்த்தசி வந்துகூடும் ஆயின் அதுவே சிவராத்திரி என்றும், அர்த்தராத்திரிக்குப் பின் சதுர்த்தசி வந்து மற்றைநாள் அர்த்தராத்திரி வரையும் இருக்க, அதற்குமேல் அமாவாசை வந்து கூடினும் பிந்திய இரவே கொள்ளத்தக்கதென்றும் ஆகமாதிகள் விதித்தலானும்; திரயோதசியோடு சதுர்த்தசி கூடுவதே சிவராத்திரி என்பது ஆகமாதிகளின் கருத்தாயின் அங்ஙனம் கூறுவதே மரபு ஆக அவை அங்ஙனம் கூறாது, உத்தமோத்தமம் உத்தமம் மத்திமம் அதமம் என்னும் சிவராத்திரிகளின் பகுப்

.....

புக்களையும் இலக்கணங்களையும் அவைகளை அனுட்டிக்கும் முறைமைகளையும் தனித்தனி சாற்றுதலானும் "அர்த்த ராத்திரிக்கு முன்னும் பின்னும் சதுர்த்தசி எவ் இரவில் வியாபித்திருக்கின்றதோ அவ்விரவே சிவராத்திரி; அதிற்றானே சிவனைப் பூசித்தல் வேண்டும்" என்று **காமிகத்தும் குமார தந்திரத்தும்** கூறப்பட்டிருத்தலானும், திரயோதசியோடு கூடினும் அமாவாசையோடு கூடினும் எவ்விரவில் அர்த்தராத்திரி வியாபகமாகச் சதுர்த்தசி இருக்கின்றதோ அவ்விரவே சிவராத்திரி என்று **சுவாயம்புவ** ஆகமத்தும் **கிரண** ஆகமத்தும் துணிபு கூறலானும், அர்த்தராத்திரிக்குள்ளேயாவது அதனளவாவது சதுர்த்தசி இருக்க அர்த்தராத்திரி வேளையில் அமாவாசை வந்து கூடுவதுதான் பிரமகத்தியாதி தோஷங்களைத் தரும்; பின்னர் ஒரு நாழிகை கழித்து வரினும் அதற்கு அத்தோஷம் இல்லை என்று **சிந்தியம்** முதலிய ஆகமங்களில் விளக்கலானும், திரயோதசியோடுகூடிய சதுர்த்தசியில் தானே சகல பிரயத்தனமும் செய்து சிவபூசை முதலியன செய்தல் வேண்டும் என்பது திரயோதசியோடு கூடிய சதுர்த்தசி முக்கிய காலத்திருப்ப அதனைவிட்டு அமாவாசையோடு கூடியதில் செய்தல் ஆகாது என்னும் கருத்துப் பற்றியதே ஆகலானும், பிறவாற்றானும் சிவராத்திரிக்கு இலிங்கோற்பவகாலத்துச் சதுர்த்தசி வியாப்தியே பிரதானம் என்று ஏற்படுகின்றது.

அங்ஙனமாக, இந்நூலாசிரியர் சிவாகமாதிகளில் மிகத் தேர்ந்தவராய் அவற்றின் வழியே பரமததிமிரபானு, சங்கற்ப நிராகரணம், சைவசமய நெறி, இறைவனூற் பயன் முதலியவும் சர்வோத்தம் என்னும் மூல சிவாகமத்தின் உப ஆகமங்கள் ஐந்தனுள் ஒன்றாகிய சிவதருமோத்தரமும் தமிழில் அருளிச் செய்தவராயிருந்தும் இவர் இரவிலே

இருபத்தொன்பது நாழிகைக்குமேல் சதுர்த்தசி ஒரு நாழிகை கலப்பினும் அதுவே உத்தமோத்தம சிவராத்திரி என்னும் வாக்கியம் விதி விலக்கு துதி என்னும் மூவகை வாக்கியத்துள் துதிவாக்கியமே ஆகவும் அதை விதிவாக்கியமாகக் கொண்டது மாறன்றோ? எனின், மாறன்மை காட்டுதும் :—

இரவில் இரண்டாம் மூன்றும் யாமங்களே மகாநிசி எனப்படும் என்று பராசர ஸ்மிருதி யாதிகளினும், அதனுள்ளும் பதினைந்து நாழிகைக்குமேல் பதினேழரை நாழிகைக்குட்பட்ட காலமே மகாநிசி என்று **சுவாயம்புவ** ஆகமத்தினும் கூறப்பட்டிருக்கின்றன.

மேலும் இக்கருத்தே பற்றி இரண்டாம் மூன்றும் யாமங்களே மகாநிசி ஆம். அதன் மூன்று பாகத்துள் இரண்டாம் பாகம் வரை திரயோதசி இருக்கப் பின் சதுர்த்தசி வருவதும் அத்தகைய திரயோதசியோடு சதுர்த்தசி இத்தகைய மகாநிசியில் வியாபித்திருப்பதுவுமே **உமாசிவ ராத்திரி** எனப்படும். அதுவே உத்தமோத்தமம் என்று முறையே '**விஜய**' ஆகமத்தினும், '**சிவரகசிய**'த்தினும்; அர்த்தராத்திரிக்கு முன் திரயோதசியும் சதுர்த்தசியும் கலந்து வருவது உத்தமத்தில் மத்திமம் என்று **கிரண** ஆகமத்தினும்; அஸ்தமித்து நாலு நாழிகை வரை திரயோதசி இருக்கப் பின் சதுர்த்தசி வருவதும் பகல் முழுவதும் திரயோதசி இருக்க இரவில் சதுர்த்தசி வருவதும் உத்தமத்தில் அதமம் என்று முறையே **காரணம், விஜயம்** என்றும் ஆகமங்களினும்; பகலும் இரவும் சதுர்த்தசியே இருப்பது மத்திமத்தில் உத்தமம் என்று **சூக்கும** ஆகமத்தினும்; இரவில் எட்டாம் பாகத்தில் சதுர்த்தசி வருவதும் இரவில்

இருபத்தொன்பது நாழிகைக்குமேல் சதுர்த்தசி வருவதும் இரவில் திரயோதசியே இருக்கப்பின் சதுர்த்தசி ஒரு கலை அளவேனும் வருவதும் மத்திமத்தில் மத்திமம் என்று முறையே **விஜயம், வாதுளம், காமிகம்** என்னும் ஆகமங்களினும்; உதயத்தில் திரயோதசியும் பின் சதுர்த்தசியும் இரவின் அந்தத்தில் அமாவாசையுமாகத் திதித்திரயம் சேர்ந்து வருவது மத்திமத்தில் அதமம் என்று **இலளிதம், சுப்பிரபேதம்** என்னும் ஆகமங்களினும், **சிவரகசியத்தினும்;** அமாவாசையோடு கூடியதில் ஆராதித்தலாகாது என்பதால் அதுவே அதமம் என்று **வாதுளம், காமிகம், சந்தானம், யோகஜம்** என்னும் ஆகமங்களினும்; அமாவாசையோடுசேர்ந்ததின் இழிவு புலப்படுத்தற் பொருட்டே இங்ஙனம் சிவராத்திரிகள் எழு கூறாகப் பிரித்து விளக்கப் பட்டிருக்கின்றன.

இம்மட்டோ! இன்றும் திரயோதசி சத்தி ரூபமும் சதுர்த்தசி சிவ ரூபமும் ஆகலின் இவ்விரண்டின் சேர்க்கையுடைய இரவே சிவலிங்க ஆகாரம் எனப்படுதலால் அத்தன்மைய திரயோதசியோடுகூடிய சதுர்த்தசியில் விரதம் அநுட்டித்தல் சிவலிங்கபூசை செய்தல் நித்திரை விழித்தல் முதலியவை இயற்றின் கோடி யாக பலமும் சகல போகங்களும் முடிவில் மோக்ஷமும் சித்திக்கும் என்று மேற்கூறிய **விஜயம்** முதலிய ஆகமங்களினும், **காந்தம், பாத்மம்** முதலிய புராணங்களினும்; அமாவாசையோடு கூடிய சதுர்த்தசியில் மேல் இயம்பியவற்றை இயற்றின் பூர்வ புண்ணியத்தைக் கெடுத்துவிடும் என்று **வாதுள** ஆகமத்தினும்; சனங்களுக்குப் பயத்தையும் அரசனுக்குக் கெடுதியையும் செய்யும் என்று **காமிக** ஆகமத்தினும்; ஒரு கலா மாத்திரம் அமாவாசையோடு கூடினும் அது அதிற் பூசிப்போர்க்குப்

பூர்வ புண்ணியநாசம் 'பிராணஹானி' ரௌரவ நரகப்பிராப்தி எய்துவிக்கும் என்று **சந்தான** ஆகமத்தினும்; அமாவாசையோடு கூடிய சதுர்த்தசி ஆன்மா நீங்கப்பெற்ற சரீரத்துக்கு ஒப்பு, அன்றிரவு விழிப்பவர்களுக்குப் பிரமகத்தியாதி தோஷமும் நரகப்பிராப்தியும் உண்டென்று **யோகஜ** ஆகமத்தினும்; பிரதோஷ வியாப்தி அர்த்தராத்திரி வியாப்திகளைப் புகழ்ந்து கூறியது உத்தமோத்தம உத்தம சிவராத்திரிகளைச் சுட்டியே ஆகலின் மத்திம பக்ஷத்தில் அவ்வேளையில் சதுர்த்தசி வியாப்தியில்லா தொழியினும் குற்றமின்று என்பது தோன்ற மகாநிசியில் திரயோதசியோடு வியாபித்திருப்பதே முக்கியம் என்று **சிவரகசியம்** ஆதியவற்றினும்; பிறவற்றினும் இங்ஙனம் திரயோதசியோடு கூடியதற்கே உயர்வு உண்மையும் அமாவாசையோடு கூடியதற்கே இழிவு உண்மையும் விளங்க இசைக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் ஒற்றுமைப் படுத்து ஒருங்கி ஆராயலுறின் 'இரவின் முடிவில் சதுர்த்தசி ஒரு யாமமேனும் ஒரு நாழிகையேனும் ஒரு கலையேனும் வியாபித்திருப்பினும் அத்திரயோதசியினன்றே கொள்க' என ஆங்காங்கு வருவது அதிவாக்கியமேனும், அடுத்த தினத்தில் பிரதோஷ வியாப்தியோடு அர்த்தராத்திரியின் வியாப்தியும் அமையச் சதுர்த்தசியே தனித்து நில்லாது அமாவாசைக் கலப்பும் வரப்பெறும் ஆகலின் அது நிஷேதம் உடைத்தாய் முடிதலான் ஆண்டு அம்முதற்றினமே கொள்ளல் வேண்டும் எனவும், திரயோதசியோடு கூடிய சதுர்த்தசியே எவ்வாற்றானும் நிர்த்தோஷம் உடையது எனவும் ஏற்படுதலால் சதுர்த்தசி அர்த்தராத்திரி வியாபகமாக வாராது மேற்கூறிய மகாநிசியின் மூன்றும் கூற்றில் கலக்கினும் அதுவே உத்தமோத்தமம் எனக்கொள்ளல் வேண்டும் என்பார் அதனது

......

பெருமை தோன்றத் திரயோதசியோடு ஒரு நாழிகை சதுர்த்தசி கலக்கினும் உத்தமோத்தமம் என்று நாட்டியும் அம்மகாநிசி சம்பந்தத்தினும் இயையாவழி மற்றை உத்தம மத்திம அதமங்களைக் கொள்ளல் வேண்டும் என்பார் அவற்றின் இலக்கணங்களைத் தனித்தனி விதந்தும் அனுட்டிப்பவர் அனைவர்க்கும் தோஷம் அணுகாவாறு குறிக்கொண்டு ஆகமவாக்கியங்களைத் தழுவிப் பொதுநிலையில் நிலவி நால்வகைச் சிவநிசியையும் உடன்பட்டு நன்கு விளக்கிப்போந்தார் ஆகலின் இது மாறுவது யாங்ஙனம்? என்பது.

இக்கூற்று மிக நன்று: அர்த்தராத்திரி வியாபகமாகச் சதுர்த்தசி இருக்கவேண்டும் என்பதும் அர்த்தராத்திரிக்கு முன் அமாவாசை வரின் அதுவே பிரமகத்தியாகி தோஷங்களைத்தரும் அன்றிப் பின்னர் ஒருநாழிகை கழித்து வரினும் அதற்கு அத்தோஷம் இல்லை என்பதும் மேற்கூறிய ஆகமாதிகளின் வாக்கியங்களே ஆகவும் அவற்றைக்கொள்ளாது திரயோதசியோடு கூடிய சதுர்த்தசியை வியந்த வாக்கியங்களை மட்டுமே ஈங்குப் பிரமாணமாகக் கொண்டது யாதுபற்றி எனிற் கூறுதும்:—

அர்த்தராத்திரி வியாபகமே முக்கியமாக வேண்டும் என்பது ஆகமாதிகளின் கருத்தாயின் இரவில் இரண்டாம் மூன்றும் யாமங்களே மகாநிசி என்றும், அதனுள்ளும் பதினைந்து நாழிகைக்குமேல் பதினேழரை நாழிகைக்கு உட்பட்ட காலமே மகாநிசி என்றும், அம்மகாநிசியின் மூன்றும் கூற்றின் சதுர்த்தசிவரினும் அதனையே கொள்க என்றும், இவ்வளவும் வற்புறுத்தி இரவின் மத்திய இரு யாமங்களையும் அர்த்தராத்திரியாகப் பாராட்டிக் கூறவேண்டியது இல்லை ஆகலானும் திதி விரதங்கட்கு எல்லாம் அவ்வத் திதி அந்தத்

தில் பாரணம் செய்தல் வேண்டும் என்பதே விதியாகவும் ஆகமங்களினும் காலாதரிசம் முதலிய நூல்களினும் சிவராத்திரி ஒழிந்தவைகட்கே இந்நியமம் என்று கூறி அனுட்டிக்கும் திதியாகிய சதுர்த்தசியிலேயே அச்சிவராத்திரிக்குப் பாரணம் விதித்தது நோக்கின் திரயோதசிக்கலப்புடைய முதற்றினம் கோடற்பொருட்டே என்பது தெள்ளிதின் அறியக்கிடத்தலானும், திதித்திரயம் சேர்ந்து வருங்கால் வேறுதினம் இல்லை ஆகலின் அனுட்டித்தற்கு உரியதினம் அதுவே ஆகவும் அதில் அனுட்டித்தாலும் அமாவாசை சேர்ந்த தோஷ நிவிர்த்திக்காக அகோராஸ்திர மந்திரத்தினால் சிவாக்கினியில் நூறு முறை ஓமம் செய்யவேண்டும் என்று அவ் அமையின் இழிவு தோன்றச் **சுப்பிரபேத** ஆகமத்தில் விதந்து கிளத்தலானும், திரயோதசியின் அந்தத்தில் சதுர்த்தசி கலக்கப்பெற்றதற்கு இத்தகைய நிசிதம் யாண்டும் காணப்படுதல் இன்மையானும், அர்த்தராத்திரிக்குப் பின் சதுர்த்தசி வரினும் திரயோதசிக் கலப்புடையதே சைவாதியர்க்கு உரித்து என்றும், அர்த்தராத்திரிக்குமுன் சதுர்த்தசி ஒரு கலை அளவேனும் வாராது பின்வந்து மறுதினம் அமாவாசையோடு கூடினும் பின்னிரவே கொள்வது வைதிகருக்கும் விரதருக்குமே உரித்து என்றும், திதித்திரயம் சேர்ந்து வருவது அனைவர்க்கும் பொது என்றும், சைவாயுள்ளோர் அத்தினத்தில் அமாவாசை வந்து கலத்தற்கு முன்னரே பூசையை முடித்துவிடல் வேண்டும் என்றும் மேற்படி ஆகம புராணாதிகளே விதித்தலானும் திரயோதசியோடு கலந்த சதுர்த்தசியே சர்வோத்தமம் என்பது பெறப்படுதலான் அதனைச்சாதித்தற்குரிய வாக்கியங்களையே ஈண்டு முக்கியமாகக் கொண்டது என்க. இன்னும் விரிக்கிற் பெருகும்.

## மாத சிவராத்திரி

இனி, மாத சிவராத்திரியாவன :—மாதந்தோறும் வரும் சிவராத்திரிகளாம். மாசி மாதத்தில் ஈண்டு விதந்து கூறிய அபரபக்க சதுர்த்தசியும், பங்குனியில் அபரபக்கத் துதியையும், சித்திரையில் அபரபக்கத் திரயோதசியும், வைகாசியில் அபரபக்கப் பஞ்சமியும், ஆனியில் பூர்வ பக்கத் திரிதியையும், ஆடியில் பூர்வபக்க அட்டமியும், ஆவணியில் பூர்வ பக்கத் துவாதசியும், புரட்டாசியில் பூர்வபக்கப் பஞ்சமியும், ஐப்பசியில் பூர்வபக்கச் சத்தமியும், கார்த்திகையில் இரு பக்கத்து அட்டமியும், மார்கழியில் இருபக்கத்துத் துவாதசியும், தையில் பூர்வபக்கத்து அட்டமியும் ஆம். இம்மாத சிவராத்திரி மற்றொரு வகையாகக் கொள்வதும் உண்டு. அவற்றைச் சிவராத்திரிபுராணச் செய்யுட்களானுணர்க.

## பக்க சிவராத்திரி

தை மாதத்து அமரபக்கப் பிரதமை முதல் பதின் மூன்று நாள் ஒரு பொழுது உண்டு விரதம் அனுட்டித்துப் பின்பு பூசித்தற்குரியதாகிய சதுர்த்தசி வரப்பெறும் பதினான்காம் நாள் இரவாம்.

## வார சிவராத்திரி

சோமவாரத்து உதயம் தொடங்கி விடியல்வரை அமாவாசை இருக்கப் பெறுவது. சோமவாரத்து இரவில் நான்கு யாமமும் அபரபக்கச் சதுர்த்தசி இருக்கப் பெறுவதும் ஆம். இவை யோக ராத்திரி எனவும் பெயர் பெறும்.

## நித்திய சிவராத்திரி

பன்னிருமாதத்து இருபக்கங்களினும் வரும் இருபத்து நான்கு சதுர்த்தசிகளும் ஆம். இவ் ஐவகைச்சிவராத்திரியுள் ஈண்டுக் கூறிய மூன்றே மிகச்சிறத்தலின் இவற்றை மட்டும் இவ்வாசிரியர் தனித்தனி ஒவ்வோர் கற்பமாக விதந்து கிளந்தருளினர் என்க.

சிவராத்திரி கற்ப சூசனம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

## சர்வஜித்து வருஷ

# மாசி மகாசிவராத்திரி நிர்ணயம்.

## (9—3—48 செவ்வாய்க்கிழமை)

சர்வசித்துஹூ மாசிமீ 25உ திங்கட்கிழமை திரயோதசி திதி 43-48க்கு மேல் சதுர்த்தசி வந்து செவ்வாய்க்கிழமை 48-49வரையில் வியாபித்திருக்கிறது. திங்கட்கிழமை 4-53 முதல் அவிட்ட நக்ஷத்திரம் செவ்வாய்க்கிழமை 11-13 வரையில் வியாபித்திருக்கிறது. இந்நிலையில் சிவராத்திரி அநுட்டானம் திங்களன்று செய்வதா? செவ்வாயன்று செய்வதா? என்ற சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான விளம்பரங்கள் பத்திரிகை மூலமாகவும் தபால் மூலமாகவும் வந்துள்ளன.

திங்கட்கிழமையை ஆதரிப்பவர்கள் திரயோதசியுடன் சதுர்த்தசி சேர்ந்திருப்பதையும் சோமவாரத்தின் விசேஷத்தையும் காரணமாக எடுத்துக்கூறுகிறார்கள். மறுதினம் சதுர்த்தசி 47-49க்கு மேல் அமாவாசை சம்பந்தமிருப்பதை அந்த தினத்திற்கு (செவ்வாய்)தோஷமாகக் கருதுகிறார்கள். பிரமாணங்களைப் பரிசிலனை செய்து பார்த்தால் இந்தக்காரணங்கள் துர்ப்பலமானவை என்று எளிதில் அறியக்கூடும். இரு தினங்கட்கும் சதுர்த்தசிக்கு மகாநிசா வியாப்தி என்பது சமமாக இருந்தாலும் பிரதோஷகால வியாப்தியும் செவ்வாய்க்கிழமைக்குத்தான் இருப்பதால் அன்றுதான் சிவராத்திரி அனுஷ்டிப்பது முறையாகும்.

**குமார தந்திரம் :**

रात्रौ यामद्वयादर्वाक् घटिकैका महानिशा ।
तस्यां चतुर्दशी यस्मात् तद्रात्रिशिवरात्रिका ॥

*'இரவு இரண்டு யாமத்துக்குமேல் ஒரு நாழிகை மகா நிசா காலம்; அந்தக்காலத்தில் சதுர்த்தசி யிருப்பதுதான் சிவராத்திரியாகும்.*

**காமிகாகமம் :**

महानिशायाः परतः त्रयोजशियुतं तु चेत् ।
कमाचतुर्दशी पूजा न दोषमिति कीर्तितम् ॥

*'மகா நிசிக்குப்பிறகு (முதல்நாள்) திரயோதசி இருப்பின் (மறுதினம்) அமாவாசையோடு கூடின சதுர்த்தசியில் சிவராத்திரி பூசை செய்தல் தோஷமில்லை.'*

*இப்பிரமாணங்களால் மகாநிசாகால வியாப்தியின் அவசியமும், திரயோதசி சம்பந்தத்தின் ஔதாசீந்யமும், அமாசம்பந்தத்தின் தோஷமின்மையும் வெளியாகிறது. மேலும்,*

**உத்தரகாரணாகமம் :**

हरि श्रविष्ट वारिश ऋषसंयुक्ततद्दिने ।
तद्रात्रौ शिवपूजायाः अमादोषो न विद्यते ॥

*'திருவோணம், அவிட்டம், சதயம் என்ற மூன்று நக்ஷத்திரங்களுடன் சம்பந்தப்பட்ட அமாதிதிக்கு தோஷமில்லை' என்ற பிரமாணமும் இங்கு சிறப்பாகக் கருதத்தக்கது. செவ்வாயன்று 48 - 49-க்குமேல் அமாவாசை வந்தாலும் அப்போது சதய நக்ஷத்திரத்தின் வியாப்தி யிருப்ப*

தால் இந்த அமாசம்பந்தமானது அந்தராத்திரிக்குத் தோஷமாகாது என்பது மேற்கண்ட பிரமாணத்தினுல் வியக்தமாகிறது. மற்றும் முக்கியமாக எடுத்துக்கொள்ளவேண்டியது பிரதோஷவியாப்தி.

**விமலாகமம்:**

प्रदोषव्यापिनी ग्राह्या शिवरात्रि चतुर्दशी ।
रात्रौ जागरणं यस्मात्तस्मात्तां समुपोषयेत् ॥

'சிவராத்திரி விரதத்திற்குரிய சதுர்த்தசியானது பிரதோஷ காலத்தில் வியாபித்ததாக இருக்கவேண்டும்; உபவாசமும் பூஜையும் அன்றே செய்தல் வேண்டும்'

திங்கட்கிழமையில் சதுர்த்தசிக்குப்பிரதோஷ வியாப்தியில்லை. செவ்வாய்க்கிழமையில்தான் இருக்கிறது. மற்றும்,

**சுவாயம்புவாகமம்:**

अमावास्या युतावापि त्रयोदश्या युताऽपिवा ।
चतुर्दश्यधिका रात्रिश्शिवरात्रिरिति स्मृता ॥

'சதுர்த்தசி, அமாவாசையோடு கூடியிருப்பினும், திரயோதசியோடு கூடியிருப்பினும், சதுர்த்தசி அதிகமாயிருக்கும் தினமே சிவராத்திரி செய்தல்வேண்டும்.'

இப்பிரமாணம் இச் சர்ச்சைக்குச் சரியான விடையளிப்பது கவனிக்கத்தக்கது. நடைமுறையில் திங்கட்கிழமையில் சதுர்த்தசியின் வியாப்தி 16-14 தான். செவ்வாய்க்கிழமையிலோ 18-49 நாழிகை வியாபித்திருக்கிறது. இவ்விதம் ஆராய்ந்த அளவில் மேற்கூறியபடி மகாநிசா வியாப்தியும் பிரதோஷகால வியாப்தியும் அமாசம்பந்தத்தின் தோஷமின்

மையும் சந்தேகமறத் தெளிவுறுவதால் செவ்வாய்க்கிழமை தினமே சிவராத்திரி அனுஷ்டிக்கப்படவேண்டுமென்பது சித்தாந்தமாயிற்று. கீழ்க்கண்ட பிரமாணங்களும் இதனை வலியுறுத்தும்.

**சந்தானுகமம் :**

यामद्वयं यदा भूता कुहू यामद्वयं भवेत् ।
दोषस्तत्रैव विज्ञेयो नकुर्याच्छिव पूजनम् ॥

'இரவு 15 நாழிகை சதுர்த்தசியும் அதன்பின் 15 நாழிகை அமாவாஸையும் இருக்குமானால் அதுதான் அமா தோஷமாகும்'

**சிவராத்திரி நிர்ணயம் :** (நிகமஞானசிவாசாரியர்)

अतः पूर्वोक्त कुहूवेध निन्दा वचनानि
निशीथ व्याप्तकुहुवेध पराणि इति मन्तव्यम् ॥

'ஆகையினால் நடுநிசி சம்பந்தப்பட்டுள்ள அமாவாஸைக் குத்தான் தோஷம் சொல்லப்பட்டுள்ளது'

மேலும் அவர்;

अस्य व्रतस्य वारविशेष योगविशेषाभ्यां नफलाधिक्यम् ॥

'வாரம் யோகம் இவைகளால் விசேஷமான பலன் கிடையாது'.

என்று கூறியிருப்பதிலிருந்து வார நிர்த்தாரணம் தேவையில்லையென்பது புலனாகும். திரயோதசிப்பிரதானத் தைப்பற்றிப் பார்க்குங்காலத்தில் மேலும் அவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

वेदाननुसारि सोम पाशुपतादि तंत्रांतर प्रविष्ट केवल तांत्रिक विषयाणि ॥

*'வேதத்தை அனுசரிக்காத சோமம் பாசுபதம் முதலிய தந்திரங்களைப்பற்றி ஒழுகும் கேவல தாந்திரிக விஷயமாகும்.'*

**வாதுளாகமம்:**

निशीथात्परतो यत्र कलामात्रं कुहूर्भवेत् ।
न पूजयति तत्रेशं तन्त्रमात्रानुसारिणः ॥

*'நிசிகாலத்துக்குமேல் கலையளவு அமாவாசை யிருப்பினும் கேவலம் தந்திரமார்க்கத்தை அனுசரிப்பவன் அப்போது சிவனைப் பூசை செய்யலாகாது.'*

*இதுகாறும் கூறிவந்ததிலிருந்து இவ்வருஷ மாசிமாத மகா சிவராத்திரி அனுட்டானம் 26ம் நாள் (9—3—48) மங்களவாரத்தன்றுதான் செய்யவேண்டும் என்பது சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தின் முடிபாயிற்று.*

இங்ஙனம்,
(ஒப்பம்) **S. சுவாமிநாத சிவாசாரியார்,**
ஆசிரியர்,
தருமபுர ஆதீன வேதசிவாகம பாடசாலை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவராத்திரி விரதகால நிர்ணயம்.

## சர்வஜித்து வருஷம்.

---

மகாசிவராத்திரி விரதம் மாசி-மீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் அநுஷ்டிக்க வேண்டுமென்று ஆகமங்களெல்லாம் கூறுகின்றன. அந்த சதுர்த்தசி திதியானது அர்த்தராத்திரிக்கு முன் ஒரு நாழிகையும் பின் ஒரு நாழிகையும் ஆகிய நிசீதகால வியாப்தியுடையதாக இருத்தல்வேண்டும்.

சிவராத்திரி கால நிர்ணய விஷயமாகப் பல நூல்கள் வெளி வந்திருக்கின்றன. எனினும். ஆகமவாக்கியங்களுக்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகக் கருத்துக்கொள்ளுகின்றனர். நிகமஞான சிவாசாரியார், லோகநாதாச்சாரியார் முதலிய பெரியோர்களெல்லாம் "சைவ விவேகம்" "சகலாகமசார சங்கிரக பிராயச்சித்த தீபிகை" முதலிய கிரந்தங்களிலே சிவராத்திரிகால நிர்ணயம் தெளிவாகச் செய்திருக்கிறார்கள்.

திருநெல்வேலி சின்னண்டி தீக்ஷிதர், தில்லைக்குருக்கள்ஐயா இருவரும் சேர்ந்து அச்சிட்டதும், ஆசிரியர் பெயர் இல்லாததும், அரதத்தாச்சாரியர் சிஷ்யராகிய வித்தியாவிருத்திகாரர் என்று பெயர் போடப்பட்டு வெளியிட்டதுமாகிய வைதிக சைவ மகாசிவராத்திரி காலநிர்ணயம் என்ற நூல் இது விஷயத்தில் பிரயோசனப்படமாட்டாது.

இப்போதுள்ள விவகாரமெல்லாம் 26-உ செவ்வாய்க்கிழமை அமாவாசை சம்பந்தப்படுவதனால் அன்றுஅநுட்டிக்கலாமா? என்பது தானே! அமாவாசை சம்பந்தப் படக்கூடாதென்பது முன்னே சொல்லிய நிசீத காலத்திலேதான். இந்த வருஷத்திலே 25-உ நிசீதகாலத்திலும் சதுர்த்தசி இருக்கிறது. 26-உ நிசீதகாலத்திலும் சதுர்த்தசி இருக்கிறது. அமாவாசை சம்பந்தமில்லை.

சிலவருஷங்களிலே திதியினுடைய கூடுதல், குறைவுகளாலேயே இரண்டு நாட்களிலும் நிசீத காலத்திலே சதுர்த்தசி இல்லாமல்போம். அந்த வருஷத்திலே சிவராத்திரி விரதத்தை இப்படித்தான் அநுட்டிக்க வேண்டுமென்று பூர்வாச்சாரியர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள்.

ஒரு கலைகூட அமாவாசை சதுர்த்தசியுடன் இருத்தலாகாது என்றது வைதிக சைவத்துக்கு இன்று. இதற்கு வாக்கியம் வாதுளாகமத்திலே இருக்கிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? என்றால்:— 59-நாழிகை 59-விநாடி சதுர்த்தசியிருந்து 1-விநாடி அமாவாசையிருந்தாலும் கூடாது என்பது—"லாதுளம், பாசுபதம் சோமம், பைரவம், வாமம் முதலிய கேவலம் தந்திரங்களை மட்டும் அநுட்டிக்கின்றவர்கட்கு மாத்திரம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த வருஷத்திலே சிவராத்திரி அநுஷ்டிக்க வேண்டியகாலம் பிரதோஷ வியாப்தியுடையதும், நிசீதகாலம் வியாப்தியுடையதும், நிசீதகால அமாவாசை சம்பந்தமில்லாததும்,

முன்தினத்தைவிட ராத்திரியில் சதுர்த்தசி அதிக வியாபகம் உடையதுமாகிய 26-உ செவ்வாய்க்கிழமையென்றே நாம் தீர்மானிக்கின்றோம்.

இங்ஙனம்,

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்து உத்தரவுப்படி

(ஒப்பம்) **ஒடுக்கம்—சுப்புக்குட்டித்தம்பிரான்,**

திருவாவடுதுறையாதீனம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 1. மகா சிவராத்திரி கற்பம்.

சிதம்பரம்,

ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மகா சிவராத்திரி கற்பம்.

உலகம் புரிய வுமைபெற்ற வைங்கை
மலையினடி வாரஞ்சேர் வாம். (1)

உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி
இலகுமம லன்சிவமென் பேம், (2)

அனைத்துயிரு நீங்கா வமலனைநீங் காளென்
மனத்திலுமுள் ளாள்குறையென் மற்று. (3)

கந்தனடி பந்தனடி கட்டுரைவேந் தன்முதலோர்
தந்திருத்தா ளும்பணிவாந் தாழ்ந்து. (4)

ஆகமத்து மாராய்ந் தமலசிவ ராத்திரியின்
மாகத்திற் பூசனைசொல் வாம். (5)

மாகத் தபரதிர யோதசியோ டேபதினன்
கேகவா ரத்தினிசை யின். (6)

அற்றைநிசி யிற்சிவன்று ளர்ச்சிக்க பாசவிதம்
அற்றமலன் பாதமடை வார். (7)

சத்திமய மேபதின்மூன் றும்பிற் சதுர்த்தசியச்
சத்திமான் மேனியே தான். (8)

இரவுதிர யோதசிநா லேழொன்றி னேடே
யொருநா ழிகைபதினன் குள். (9)

ஒன்றியுறி னுத்தமத்தி னுத்தமமே சத்திமயம்
குன்றியுறி னுத்தமமாக் கொள். (10)

ஒன்றுடனு மொன்ருச் சதுர்த்தசியி னர்ச்சிக்க
மன்றவது தான்மத்தி மம். (11)

ஒன்றிற் சதுர்த்தசியி னேடே யமாவாசை
மன்றவது தானதம மாம். (12)

கூடினமா வாசைபதி ளுன்கிறுதிக் கூறுதனிற்
கூடுமதற் குப்பேர் குகு. (13)

புரிந்தார் குகுப்புணர்ந்த பொல்லாநாட் பூசை
எரிந்தார் நிரயத் திழிந்து. (14)

வைதிகர்க்கே பாங்கமா வாசைச் சதுர்த்தசிதான்
சைவர்க் கதன்முன்னுட் சால்பு. (15)

திதித்திரயஞ் சேர்ந்த சிவராத் திரிதான்
மதிக்கிலிரு வர்க்கும் வரம். (16)

அற்றைநிசி யந்தத் தமாவாசை தான்வந்து
பற்றுதன்முன் பூசையினைப் பண், (17)

தந்தமக்குத் தக்கசம யத்தினருச் சித்தார்க்குச்
சிந்துமிடர் வாய்க்குஞ் சிறப்பு. (18)

அருச்சனையில் லாருறங்கா தற்றைநிசி முற்றும்
சரிக்கசிவன் ருள்வணங்கித் தாம். (19)

தரிக்க கவுதுகமுன் ளுளதன்பின் ளுளிற்
பிரிக்கவுண லாதி பிற. (20)

ஆடிநீர் வேண்டுமுப யோக விதமனைத்தும்
தேடிச் சிவபூசை செய். (21)

புரிகயா மந்தோறும் பூசைநிசி வேலை
பரிவுறவே நூல்விதியைப் பார்த்து. (22)

ஆட்டிடுக கவ்வியம்பஞ் சாவமிர்தந் தேனிக்கின்
ஈட்டியநீர் யாமமுறை யின். (23)

சர்க்கரைதேன் பானெய் ததியென்ற வோரைந்தும்
அற்புதனுக் காட்டுமமிர் தம். (24)

தாவித்துக் கவ்வியத்தைப் போலத் தனித்தனியே
ஆவித் தரன்முடிமே லாட்டு. (25)

சாத்துக வில்வமரை சாதிநந்தி யாவர்த்தப்
பூத்தனையும் வேலைமுறை புக்கு. (26)

முறையுறவே முற்கான்னம் பாயசந்தி லான்னம்
இறைமுன்சுத் தான்னமுநீ யேற்று. (27)

பரிவுறவே பாத்திய மாதி யனைத்தும்
புரிகவிதி பார்த்துணர்ந்தின் போடு. (28)

பசிக்கழிந்தால் நீரலது பால்பழந்தா னற்பம்
புசிக்கமுதல் யாமம்பூ சித்து. (29)

அற்றை நிசியுறங்கா தர்ச்சித்துப் பாரணத்தை
மற்றையநாட் செய்கை வரம். (30)

ஆரணனை யர்ச்சித் தமுதருத்தி யன்பர்க்குப்
பாரணத்தை நீபின்பு பண். (31)

பாரணஞ் செய்தான் பகலுறங்கி னூற்றுவரை
ஆரணரைக் கொன்றபழி யாம். (32)

உறங்கினன் சாந்தியெனு மோமம் புரிக
மறைந்துகெடு மேயந்த மாசு. (33)

அங்குர மாதி யியற்ற வகவினையும்
மங்குமுறை செய்நூன் மதித்து. (34)

அக்கால மாகச் சதுர்த்தசியி னர்ச்சித்துப்
புக்கான்வே டன்மேற் புரம். (35)

தூர்த்தன் சுகுமாரன் அந்தணன்மா கப்பூசை
பார்த்தான்கி தத்தாசைப் பட்டு. (36)

அற்றான்முன் செய்த வவல வினையனைத்தும்
பெற்றான் சிவபுரத்தைப் பின். (37)

நின்மலனை நூல்விதியி னர்ச்சித்த நேசர்க்குப்
பன்னவல்லா ராரே பலம். (38)

கடனுறவிக் கற்பத்தைக் கற்றவர்கேட் டாரும்
அடைவரம லன்சிவலோ கம். (39)

*திருச்சிற்றம்பலம்.*

**மகா சிவராத்திரி கற்பம் முற்றிற்று.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 2. மாத சிவராத்திரி கற்பம்.

---

சிதம்பரம்,

ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனார்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்

# 2. மாத சிவராத்திரி கற்பம்.

மாதசிவ ராத்திரியுஞ் சொல்வா மலமறுக்கும்
போதகன்பா தத்தார்வம் பூண்டு. (1)

பங்குனிக்குஞ் சித்திரைக்கும் வைகசிக்கும் பாங்கபர
திங்களென வேநீ தெளி. (2)

இரண்டுபதின் மூன்றைந் தெனுந்திதியிற் பூசை
இரண்டற வீசற் கியற்று. (3)

முந்தியுறும் பக்கந்தா னுனிமுத லைப்பசியே
அந்தமிவற் றிற்பாங்கே யாம். (4)

மூன்றெட்டு முந்நான்கைந் தேழு முறையுறவே
ஆன்றதிதி நாளருச்சி யாங்கு. (5)

இருபக்கங் கார்த்திகைக்கு மார்கழிக்கு மேய்க்கும்
இருநான்கி ருறுதிதி யெண். (6)

புரிகசிவ பூசையினைப் பூருவபக் கத்தின்
இருநான்கிற் றைமாதத் தின். (7)

இட்டலிங்கந் தன்னிற் பரார்த்தத்து மிம்முறையே
இட்டமுறப் பூசை யியற்று. (8)

பாரணத்தை மற்றைநா டன்னிற் பகற்பனுக
பூரணனைப் பூசை புரிந்து. (9)

இரண்டு படினே திதியிரவி னேற்றம்
திரண்டதிதி தானே சிறப்பு. (10)

இந்தமுறை மீன மெழுவாய் மகரந்தான்
அந்த மிவற்றனைத்து மாம். (11)

அற்றரே பாவ மருச்சித்தா ரிந்தமுறை
பெற்றார் சிவலோகம் பின். (12)

அங்குர மாதி விதியறிந்தே யாகமத்தில்
இங்கியற்றி னன்றென்றே யெண். (13)

இந்த வியலை யெழுதிற் படித்திடினும்
பந்தவினை போமுறுமின் பம். (14)

*திருச்சிற்றம்பலம்.*

**2. மாத சிவராத்திரி கற்பம் முற்றிற்று.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 3. சோமவார சிவராத்திரி கற்பம்.

சிதம்பரம்

ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனர்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# 3. சோமவார சிவராத்திரி கற்பம்.

தந்திமுகன் றுணிணைவாம் தானே தருமெம்முட்
சிந்தனை செய்வ சிறப்பு. (1)

சொல்வா மினிச்சோம வாரசிவ ராத்திரியும்
எல்லாஞ் சிவமென் றெணி. (2)

சந்திரவா ரத்துதயந் தங்கியமா வாசைநிசி
அந்தியயா மத்தினுமுற் றுல். (3)

ஒருமூன்று கோடிசிவ ராத்திரியோ டொக்கும்
பரமசிவ னைப்பூசை பண். (3)

அந்தியயா மத்தி னரைநா ழிகையுறினும்
அந்தியயா மத்தினிறை வாம். (5)

அற்றிடினே யந்தியயா மத்தினமா வாசைசிறி
தற்றநிசி பூசைவர மன்று. (6)

மற்றையநாட் பூசை முடித்து மறையவர்க்கும்
நற்றவர்க்கு மோதனத்தை நல்கு. (7)

அருந்தியதன் பின்னுறங்கா தன்றுபக லெல்லாம்
இருந்துசிவன் பாதமல ரேத்து. (8)

அருச்சித்தா ரிவ்வா றரித்துமல மெல்லாம்
பரித்திருப்ப ரீசன் பதம். (9)

உத்தரபக் கத்திற் சதுர்த்தசிமுன் னேதுமுறை
ஒத்துறினே யவ்வாரத் துள், (10)

அற்றை நிசியு மரியசிவ ராத்திரியாம்
பற்றறுப்பா னைப்பூசை பண். (11)

பண்ணிடுக மற்றைநா ளைப்பகலிற் பூசனையைப்
பண்ணியதன் பின்பா ரணம், (12)

அருத்தித் தவத்தார்க்குப் பின்ரு மருந்திற்
பரிப்பார் விரத பலம். (13)

புரிந்தார்க ளிந்தநிசி யிற்சிவனைப் பூசை
பிரிந்தான் சிவலோகம் பெற்று. (14)

அண்டமனைத் தும்மொடுங்கும் போதகநோ யற்றமலம்
கண்டுதிளைப் பார்சிவபோ கம். (15)

உறுவ ருகந்தாரு மிந்நோன் புளத்தே
அறுவர்கா மாதிகல கம், (16)

ஓர்ந்தார்க ளிந்தவியல் தத்தமுளத் தூனமலம்
தீர்ந்தே திளைப்பார் சிவம். (17)

*திருச்சிற்றம்பலம்.*

**3. சோமவார சிவராத்திரி கற்பம் முற்றிற்று.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 4. சோமவார கற்பம்.

சிதம்பரம்

ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 4. சோமவார கற்பம்.

எல்லாந்தா மென்னவுறு மீச னிறைவியருள்
பொல்லார்நல் லாரெமக்கிப் போது. (1)
இனிச்சோம வார விரத மிசைப்பாம்
உனிச்சோம நாதனடி யும், (2)
உமையுடனே யொன்றி யுறுஞ்சிவன்பேர் சோமன்
உமைசிவன்வா ரம்மதுவென் றோர். (3)
எட்டெட் டருள்விளையாட் டீச னியற்றினனென்
றிட்டமுறக் கூறுமிய லின். (4)
எக்கடவு ளோர்களினு மேற்றமிகுஞ் சோமசுந்த
ரக்கடவு ளுக்குரித்தி ஃதாம். (5)
ஆய்ந்தறிந்திவ் வார விரத மனுட்டிக்க
மாய்ந்துவிடப் பாச வலி. (6)
கண்ணுதன்முன் கார்த்திகைமுற் சோமவா ரந்தன்னிற்
பண்ணுக சங்கற் பனை. (7)
மற்றுமுள மாதமுதற் சோமவா ரந்தன்னிற்
பற்றுக சங்கற் பனை. (8)
ஆண்டொன் றிரண்டாதி யாறிரண்டல் லாலென்றும்
ஈண்டியற்று வாம்விரத மென்று, (9)
விண்ணப்பஞ் செய்து விமல னிறைவியையும்
எண்ணியுளத் தின்கணுமுற் றின்பு, (10)
முந்திய சந்தி முடித்து முறையாமச்
சந்தி தனையுஞ் சமைத்து. (11)
கூவிளத்தின் மண்கோ மயமெள் குசையறுகு
மேவமுறை யிட்டுடலின் மேல். (12)

உத்தம நீர்த்தத்தின் மூழ்கி யுகளவெள்
வத்திரம் விக்கிவர முற்று (13)
முடித்தந்தி சந்தி முனிந்தைம் புலனும்
ஒடித்தைந் தெழுத்தையுளத் தோர்ந்து. (14)
இந்த விரத மிடையூ றறநிறையத்
தந்திமுகன் பூசை சமைத்து. (15)
சிவனையருச் சிக்க சிவராத் திரிபோற்
சிவவாக் கியமுந் தெரிந்து. (16)
ஐந்துமுக மைம்மூன்று கண்ணை யிருபுயமும்
சிந்தனைசெய் துள்ளிலிங்கத் தின். (17)
திருவுருவந் தெண்பளிங்குஞ் செஞ்சடையி னிந்து
மருவுமிரு பாதமுமற் றும். (18)
எண்ணுன் குறுப்பும் வயதெண் ணிரண்டுமுற
எண்ணிச் சதாசிவருக் கே. (19)
ஆட்டுகவா னைந்து மமிர்தவித மோரைந்தும்
ஆட்டுகபான் முப்பழமு மார்ந்து. (20)
ஆட்டுகபின் னெல்லிக்காப் பாதிசிறு சூட்டறலும்
ஆட்டுகநெய்ச் சிக்குமற வாய்ந்து. (21)
ஆட்டுகபின் னேல மளவிய சீதநீர்
ஈட்டுநவ கும்பத் தினும். (22)
துய்யநவ வத்திரத்தா லீரந் துடைத்திடுக
மைய மனுவும் பகர்ந்து. (23)
சிறக்கவே யாவா கனுதியெலாஞ் செய்க
மறப்பை ஒழித்தே மற்று. (24)
சாத்துகபட் டாடை தபனியப்பூ ணூலணியும்
வாய்க்க வணிக மகிழ்ந்து. (25)
சாத்துக சாந்துபனி நீர்பளிதங் குங்குமமும்
சேர்த்தியுளத் தாதரவு செய்து. (26)
வில்வமும் வெண்கமல மாதிவித வெண்மலரும்
மல்கமுடி வைக்கமல ரால். (27)
எழுத்தைந்து மந்திரத்து ளேற்றம்வில் வத்தின்
முழுக்கிளையும் பச்சிலையுண் முன். (28)

பைசாசத் தும்பை பழிப்பென் றொழித்திடுக
பைசாச மெல்லாம் பழிப்பு. (29)
நீர்ப்பூக் கொடிப்பூ நிவந்த மரத்தின்பூப்
பார்ப்பூவுஞ் சாத்தறிந்து பாங்கு. (30)
அருச்சிக்க வாயிரம்பே ரால்வில்வத் தாலே
நெரிந்த கிளைதன்னை நீத்து. (31)
பாயச நெய்சர்க் கரைபயின்ற பாகவிதம்
தூயவன் முன்னே தொகுத்து. (32)
பொரித்த கறியு மபூப விதமும்
நிரக்க வதன்மே னிறைத்து. (33)
செய்க நிவேதனந் திவ்விய முத்திரையால்
பைய மனுவும் பகர்ந்து. (34)
பாத்திய மாதி பகர்விதியாற் றூபாதி
வாய்த்துறவே செய்க மதித்து. (35)
பவானிபவ னென்று பகரிருபத் தாறும்
பவானி பவனுக்குப் பாங்கு. (36)
பாதங் கணைசானு வூருப் பரியவரை
ஓர்தலுறு நாபியுர மும். (37)
திரடோள் களம்வாய் சிறந்தகுள முச்சி
உருமுழுது மர்ச்சிக்க வோர்ந்து. (38)
அணிக வதன்பி னறுகரிசி வில்வம்
எணியஞ் செழுத்து மிறைக்கு. (39)
அதன்பினருச் சிக்கவி ராறு மனுவால்
அதன்பினி ரெட்டுமனு வால். (40)
எட்டுடன் நான்குமா தேவாதி யாகுமீ
ரெட்டுஞ் சிவாதியென வெண். (41)
இயற்றுக மற்றை விதியினை யெல்லாம்
அயர்ச்சி மனத்தி லறுத்து. (42)
ஒன்றாய்ச் சிவஞ்சத்தி யென்றிரண்டா யுற்றுயிருள்
என்றுமுள னுயிரண்டற் றே. (43)
நிற்பானே போற்றி நிலனிறுவாய்த் தத்துவத்து
நிற்பானே போற்றி நிறைந்து. (44)

ஆக்கி நிறுத்தி யடக்கி மறைத்தருள்செய்
நோக்கினனே போற்றியுயிர் நோய்க்கு. (45)
அனுதிமல முத்தனே யாதியந்த மில்லா
வெனுதியே போற்றிசய வென்று. (46)
துதித்து வலமாகச் சூழ்ந்து பணிந்து
விதித்ததிற மெல்லாம் விளைத்து. (47)
வாக்கினாற் சொல்ல நினைக்க மனத்தினால்
ஆக்கையினாற் றீண்டவும்பெற் றும். (48)
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்ன குறையுமிலோம்
இங்குமென வுள்ளத் தெணி. (49)
இயற்றுகயா மங்தோறும் பூசையினை யீசர்க்
கயர்ச்சியற முன்முறையி னல். (50)
மற்றையநாட் சந்தி யிரண்டினையும் வாய்க்கவே
முற்றிக் குரவனடி முன். (51)
பணிந்தலர் தூவியவன் பாதந் தலைமேல்
அணிந்தவனாற் பெற்றே யருள். (52)
இட்டப் படியருத்தி யந்தணர்க்கு மீசனுக்காட்
பட்டதவத் தார்க்கும் பரிந்து. (53)
அருந்துவித்தே யாதுலர்க்கு மற்றை யவர்க்கும்
அருந்துகதாம் பின்னை யனம். (54)
அதன்பின்பு துஞ்சா தமலன் புராண
விதந்தன்னைக் கேட்க விழைந்து. (55)
இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனத்தி லறுத்து. (56)
சென்று சிவபுரத்துட் செல்வத் துடனிருப்பார்
ஒன்றுமொழி யாதொடுங்கு நாள். (57)
விடமூல நோயும் விமல மயமாய்
உடனுறைவர் பேரின் புற. (58)
தாமுள் ளளவுந் தவறா தனுட்டித்தார்
தாமமலன் றன்புரத்தைச் சார்ந்து. (59)
அகர்த்தச் சிவன்கர்த்தா வஞ்ஞாதா ஞாதா
செகத்தினுதிப் புக்குமெனத் தேர்ந்து. (60)

தம்முளிரண் டற்றவன் சாதகத மன்றனக்குத்
தம்மைக் கரணமெனத் தாம். (61)
தெருண்டிருந் தெல்லாச் செகமுமொடுங் கும்போ
திருண்டமல முந்நீர வே. (62)
அழியா வளவிலாப் பேரானந் தத்தின்
ஒழியா துறைவ ருகந்து. (63)
இவ்வா றியற்றவரி தென்னினித னின்னெளிய
அவ்வா றறிகவறை வாம். (64)
முடித்தற் றையநாளைச் சந்தியொரு மூன்றும்
ஒடித்தூ ணுறக்க மொழித்து. (65)
இயற்றிடுக வந்தரியா கம்யாமந் தோறும்
அயர்ச்சி மனத்தி லறுத்து, (66)
மற்றையநாட் பாரணத்தைச் செய்க விதிவழியே
அற்றிடுக துஞ்சுமவ லம், (67)
இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனத்தி லறுத்து. (68)
நீர்ந்திடுவர் நிவினைக ளெல்லாஞ் சிவபுரத்தைச்
சேர்ந்திருப்ப ரின்பந் திளைத்து. (69)
பிறப்பரோ மண்ணிற் பிறவார் பெருநோய்
அறுப்பர் அமலமய மாய், (70)
இதுவு மரிதே லிதனி னெளிய
அதுவு மறிகவறை வாம். (71)
முற்றியே யற்றைநாட் சந்தியொரு மூன்றினையும்
அற்றே நிசியூ ணது. (72)
மற்றையநாட் பாரணத்தைச் செய்க விதிவழியே
அற்றிடுக துஞ்சுமவ லம். (73)
இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனத்தி லறுத்து. (74)
பாவ விதங்கள் பறிந்து விடப்பரம
தேவன் புரியைச் செறிந்து. (75)
அங்குள்ள போக விதங்க ளருந்திடுவர்
அங்கரி தேதே யவர்க்கு, (76)

கணிப்பரிய கற்பங் கழிய வதன்பின்
மணிற்பிறப்பர் முன்வரத்தால் வந்து. (77)
முடிப்பர்முன் சொன்ன முதல்விரதந் தன்னை
ஒடித்தூ ணுறக்க மொழித்து. (78)
பற்றுவ ரீசன் பரம சிவபுரத்தை
உற்றிருப்பா ரின்ப முகந்து. (79
பேரிலயந் தன்னிற் பிரியப் பெருநோயும்
ஓருருவ மாவர்சிவத் துற்று. (80)
இதுவு மரிதே லிதனி னெளிய
அதுவு மறிகவறை வாம். (81)
சந்தி யொரு மூன்றுஞ் சமைத்து நிசிதன்னில்
அந்தணர்க்கு மூட்டி யனம். (82)
அருந்துக சுற்றத் தவரோ டதன்பின்
அருந்தும் விதியும் அறிந்து. (83)
இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனத்தி லறுத்து. (84)
இருப்பர் பெருவளத்தோ டிப்பாரிற் பாவம்
அரிப்பரதன் பின்சிவலோ கத்து. (85)
சேர்வர் திளைப்பர் சிறந்தபல போகவிதம்
சார்வரதன் பின்னித் தலம். (86)
இயற்றுவருண் ணுதுமுறங் காதுமிறை பாதத்
தயர்ச்சியற வர்ச்சனையன் பால். (87)
கட்டார்ந்த விண்டை கமழ்தூப மாதியான்
முட்டாம லென்று முடித்து. (88)
சேர்வர் சிவபுரத்தி னின்பந் திளைத்திருப்பர்
சார்வரதன் பின்னமலன் முள். (89)
இதுவு மரிதே லிதனி னெளிய
அதுவு மறிகவறை வாம். (90)
முடித்திரண்டு சந்திபகன் மூவைந் ததன்பின்
அடித்திரும்பும் வேலை யறிந்து. (91)
அருந்துவித் தன்பர்க் கதன்பி னுறவோ
டருந்துக தானு மனம். (92)

இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனத்தி லறுத்து. (93)
இட்டமுறப் பாரி லிருப்ப ரதன்பின்பு
சிட்டன் சிவலோகஞ் சேர்ந்து. (94)
அங்குள்ள போக மருந்தி யதன்பின்பும்
இங்கே வருவ ரிழிந்து. (95)
முற்றுவ ருண்ணு வுறங்கா முதற்பூசை
எற்றுவர் பாச மெலாம். (96)
செறிவர் சிவபுரத்தி னின்பந் திளைப்பர்
அறுவர் இருளமலத் தாய். (97)
முடித்திடுக சங்கற் பனைநாண் முடிவிற்
படித்த விதிவிதத்தைப் பார்த்து. (98)
முடிக்கும் வினையிலைத்தம் மெய்ம்முடிவு காறும்
எடுத்தவிர தம்மியற்று வார்க்கு. (99)
இடைவிடு வாரு முடிவியற்று தாரும்
அடையார் பலமென் றறிந்து. (100)
இடையில் விடாதே முடிவு மியற்றல்
கடனே பலன்கொள்வார் காண். (101)
ஒருபான் கனிட்டமுப் பானுத் தமமே
இருபான் கடிஞ்சிடையென் றெண். (102)
வெள்ளி விசிட்டம் விமலர் திருவுருவுக்
கல்லது செம்பினு மாம். (103)
ஒருமுகங் கண்மூன் றொருநாற் புயத்துத்
திருவுருவஞ் செய்கசிவ னுக்கு. (104)
மழுமான் வரத மபயங் கரத்தின்
எழுமதியும் பின்னுசடை யின். (105)
உமைக்குந் திருமுக மொன்றுற மேனி
அமைத்தோ ளிரண்டென் றறி. (106)
உற்பலந் தன்னை வலக்கையுற வோங்குவிக்க
மற்றையகை தாளொடுற வை. (107)
அருந்திப் பகலிலொரு போதருண வாரத்
தருந்தா திரவி லனம். (108)

மற்றையநாட் சந்தி யொருமூன்றும் வாய்க்கவே
முற்றிக்கா மாதி முனிந்து. (109)
வேதா கமமுணர்ந்த வேதியனைத் தேசிகனைப்
பாதார விந்தம் பணிந்து. (110)
செய்வித் தவனுற் சிறக்கவிதி மண்டபத்தை
நெய்சமிதை மற்று நிறைத்து. (111)
மண்டலமுஞ் செய்வித்து வன்னிக்கு நால்வழியிற்
குண்டமுஞ்செய் வித்துக் குறித்து. (112)
அருச்சித்து மண்டலத்திற் கும்பத்தி லல்லால்
உரித்தாஞ் சிவலிங்கத் தும். (113)
ஆட்டுகவா னைந்து மமிர்தைந்து மார்வத்தாற்
சூட்டுகவில் வாதி தொடுத்து. (114)
வைத்திடுக சந்நிதிமுன் செய்த வடிவிரண்டும்
பத்தியுற வேவிதியைப் பார்த்து. (115)
ஆட்டிடுக விங்குமா னைந்து மமிர்தைந்தும்
சூட்டுகவில் வாதி தொடுத்து. (116)
இயற்றிடுக மற்றைய வெல்லா வினையும்
அயர்ச்சி மனத்தி லறுத்து. (117)
அங்கிதனி லாகுதியுஞ் செய்க வறிந்துவிதி
சங்கரற்கு மம்பிகைக்குந் தான், (118)
நெய்சர்க் கரைநெய் நிறைந்ததிலம் பாயசம்பின்
செய்கவவை யாகுதிசெந் தீக்கு. (119)
இயற்றிடுக யாமந் தொறுமிந்த வாறே
அயர்ச்சி மனத்திலறுத்து. (120)
மற்றையநா ளிற்சந்தி யோரிரண்டும் வாய்க்கவே
முற்றி மொழியின் வழி. (121)
ஆக்குவித்துக் கும்பம் பதின்மூன்று வின்பாலைத்
தேக்கி யவற்றுட் செல. (122)
வைத்திடுக வேதிகையின் மேலிவ் விரண்டாகப்
பொத்திடுக வத்திரமன் புற்று. (123)
மூங்கிலினுற் பெட்டி முடைவித் தவற்றன்னம்
ஓங்கப் பெய் தேகறிக ளும். (124)

முன்னு ளுபவசித்த வந்தணர்முன் வைத்தவர்க்கே
அந்நாள் கொடுக்கபரி வான். (125)
கொடுத்திடுக வெண்ணிறந்த கோதனமுந் நான்கொன்
றடுத்த பரிவோ டவர்க்கு. (126)
தெண்டு கரகஞ் செருப்புக் குடைகொடுக்க
உண்டுசிவ னென்பார்க் குகந்து. (127)
தேசிகனைத் தாள்பணிந்து செய்த திருவுருவம்
தேசிகனு லர்ச்சனைசெய் வித்து. (128)
கொடுக்கவணி யோடே குரவனுக் கென்னை
யெடுத்தாள்வாய் கைக்கொள்க வென்று. (129)
தேசிகனை யர்ச்சிக்க தேசிகன்றன் றேவியொடும்
ஈசன் இறைவியிவ ரென்று. (130)
பட்டாடை யாபரணம் பாரூர் பரியிரதம்
இட்ட முறக்கொடுத்துற் றின்பு. (131)
கொடுத்திடுக கோதனமும் கொம்புக்குப் பொன்னும்
அடிக்குவெள்ளி தானு மணிந்து. (132)
கஞ்சக் கலசங் கொடுக்க கறக்கப்பால்
அஞ்சலெனுந் தேசிகனுக் கார்ந்து. (133)
ஆக்கும் பலத்தைச் சிறக்கவம லர்க்கணிந்த
பூக்கமல மற்றும் புரிந்து. (134)
உதவிடிற் றூன முகந்தவற்றுக் கெல்லாம்
உதவலுமா மாளென் றுகந்து. (135)
ஏந்திழையார் தாமு மியற்றிடுக விந்நோன்பு
காந்த னனுமதித்தக் கால். (136)
தேசிகனை யின்றியே செய்யேற் பலம்வேண்டில்
தேசிகனுற் செய்கவிதி தேர்ந்து. (137)
ஆயும் பிதாவு மமல னெனும்பழைய
தாயும் குரவனே தான். (138)
அவன்வாக் கியத்தை யநாதிமல முத்த
சிவன்வாக் கெனவே தெளிந்து. (139)
விதியைப் பணுக விடுக நிசிதம்
பதியை யடைவார் பரம். (140)

அர்ச்சனையில் லாரனைத்தும் அந்தத்திற் செய்விக்க
சற்குரவன்தன்னாலே தாம். (141)
திருமா லயன்றேவர் சித்தர் முனிவர்
தரணிமனு மற்றையருந் தாம். (142)
முன்னந் தொடங்கி முடித்தார்க ளிவ்விரதம்
தன்னை விதியறிந்து தாம். (143)
சிவராத் திரிசோம வாரசிவ பூசை
சிவவிரதந் தம்முட் சிறப்பு. (144)
காசி மதுரைதிருக் காளத்தி மன்றுரூர்
ஈசரெலை யுள்விசிட்ட மே. (145)
வில்வத்தின் மிக்க விசிட்டமிலை பத்திரத்துள்
இல்லை யலர்வித்து மீங்கு. (146)
மரிக்குநாள் வில்வத் தடிமனுடற் பூசில்
இருப்பர் சிவபுரத்துற் றின்பு. (147)
மரிக்குநாட் காசி மதுராதி வைகில்
இருப்பர் சிவபுரத்துற் றின்பு. (148)
மரிக்கும்போ துன்னும் வடிவினை யர்வி
பரிக்கும் நினைவு பரித்து. (149)
ஆதலினுற் சுற்றத் தவரைஙனை யாதமலன்
பாத நினைக பரிந்து. (150)
அப்பொழு து கேட்க வமலன்வே தாகமங்கள்
அப்பா லுறச்சுற்றத் தார். (151)
அப்பொழுது கேட்க வமலனருள் பெற்றவர்வாக்
கப்பா லுறச்சுற்றத் தார். (152)
நனவிற் பயின்றதனை நாளுரு மாவி
கனவிற் பயிலுமே காண். (153)
நனவென விம்மையினை நாடுக வம்மை
கனவெனக் காணவெனின் கண். (154)
அனுபா டணத்தறைந்தா மாக்கமுயிர் போம்போ
தினுமுற் றொடர்ச்சியிசைப் பேம். (155)
தானே முளைக்கு மிலிங்கஞ் சயம்புவது
தானே வரந்தா வரத்து. (156)

ஆட்டுவித்தா ரவ்விலிங்கத் தவ்வாரத் தாலைந்தும்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (157)
அரிப்பருறும் பாவ மனைத்து மதன்பின்
இருப்பர் சிவபுரத்துற் றின்பு. (158)
ஆட்டுவித்தார் தாமு மமிர்தவித மைந்தினையும்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (159)
ஆட்டுவித்தார் தாமிளநீர் முப்பழமு மார்வத்தால்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (160)
ஆட்டுவித்தா ருஞ்சந் தனத்தினறுங் கற்பூரம்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (161)
ஆட்டுவித்தா ருங்கலச மாயிரத்தி னுதகம்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (162)
ஆட்டியரிட் டம்பட் டரைசாத்து வித்தாரும்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (163)
பூட்டுவித்தாரும் பொன்னின் பூணு விழைவிதமும்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (164)
கூட்டுவித்தா ரும்பளிதங் குங்குமஞ்சாந் தம்பனிநீர்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (165)
சூட்டுவித்தா ரும்வில்வத் தின்றொடை மாலைகளும்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (166)
காட்டுவித்தா ருங்கமழுந் தூபதி பாதிகளும்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (167)
ஊட்டுவித்தா ருஞ்சாலி யோதனமும் நெய்ப்பொரிப்பும்
நிட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (168)
வெண்மை யரிசி விதஞ்சால்பாம் வெண்மையினை
அன்மைவிதம் பூரியவா மால். (169)
கோதி யுழுந்து குளமிளகு சீரகநெய்
ஆதி யபூபவமிர் தம். (170)
விதியா னிவேதனஞ் செய்வித் தவரும்
அதியா யமலனே யென்று. (171)
வெள்ளியகற் பூரந்தாம் பூல மிசைவித்த
வொள்ளியர் தாமு முகந்து. (172)

வெண்முத்தின் சத்திரமும் வெண்கவரி யோரிரண்டும்
உண்ணயந்து செய்வித்தா ரும். (173)

நாட்டுவித்தா ருந்திருமுன் ஞடவுருக் கண்ணுடி
நீட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (174)

ஆட்டுவித்துக் கன்னியரை யாட்டுவித்தா ருந்திருமுன்
நீட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (175)

பாட்டுவித்துக் கன்னியரைப் பாட்டுவித்தா ருந்திருமுன்
நீட்டும் விதிதன்னைத் தேர்ந்து. (176)

தேசிகன் றீண்டுக தொண்டாற் சிவன்முன்னே
வேசியின் கூந்தன் மிசை. (177)

நீண்டுதலாற் றெண்டாற் சிரோதண் டியரெனும்பேர்
ஆண்டபிரான் ருதியருக் காம். (178)

தாளங் குழன்மொந்தை தக்கை கிணைவீணை
காளங் கொடுத்தவருங் காண். (179)

பற்றுவர் முன்னம் பகர்ந்தபலம் பாவவிதம்
அற்று விடுமே யவர்க்கு. (180)

சென்றந்த வாரந் தனிற்சிரத்தி ஞல்வணங்கி
நின்றமல லிங்கத்தி னேர். (181)

கண்டு களிகூரக் கண்ணினுற் கண்டடி
கொண்டிதயத் துள்ளே குறிப்பு. (182)

ஆட்டிநீர் சந்துமணிந் தார்வத் தலர்சூட்டி
ஊட்டிநல் லன்ன முகந்து. (183)

கமழ்தூப மாதி யனைத்துங் கருத்தால்
திகழவே செய்க தெளிந்து. (184

அதன்பின்னர் முன்னரன்ன மாதி நிவேதித்
ததனை யருந்துகதா மார்ந்து. (185)

இப்படியே நாடோறு முட்டா தியற்றினர்
இப்படியி லின்புற் றிருந்து. (186)

புக்குச் சிவபுரத்துட் போக விதமருந்தி
எக்குணனு மெய்கண் டிருந்து. (187)

எரிக்குநா ளீசனுல கெல்லாந்தம் பாசம்
அரித்தருந்து வார்பேரின் பம். (188)

தானே முளைத்த சயம்பு முடிக்காட்டும்
ஆனைந்து மன்பா லருந்து. (189)
அற்றுவிடும் பாவவிதம் ஆகார தோடமும்
அற்றுவிடும் என்றறிக வாங்கு. (190)
அந்தவிலிங் கத்தி னுட்டிய நீரருந்த
வெந்தறும் பாவ விதம். (191)
அருந்துக வார்வத் தமல விலிங்கம்
அருந்திய சேட வனம். (192)
தீர்ந்து விடவே திளைத்த சிறிதன்னம்
ஈர்ந்துவிடும் பாவ மெலாம். (193)
அடைந்தந்த வாரத்தி னுலயத்தின் முன்னும்
படர்ந்தபுல்லு மற்றும் பறித்து. (194)
ஒறுப்புமற வூரும் உயிர்க்கலகு மிட்டுக்
கறுப்பு மெடுத்துக் கழித்து. (195)
நீராலுங் கோமயத் தாலுநிதஞ் சுத்திசெய்வோர்
சீரார் சிவபுரத்தைச் சேர்ந்து. (196)
ஆண்ட வமல னருளாற் றிளைத்திருப்பர்
வேண்டிய போக விதம். (197)
அணுவள வேதேனு மாதரவாற் காலம்
எணியுதவிற் பல்கி யிடும். (198)
பருதியுப ராகம் விதிபாத மாதி
கருதுங்காற் காலத்துட் கற்பு. (199)
அறிந்துவிதி காலவித மாதரவி னேடே
சிறந்த சிவதருமஞ் செய்து. (200)
ஈண்டு மடைந்தார்த மிட்ட பலம்பலரே
ஆண்டுமடைந் தாரிட்ட மார்ந்து. (201)
விதிகாலம் பாத்திர மாதரவு வீருர்
பதியும் பெரும்பயனின் பாங்கு. (202)
கற்றறிந்திக் காரணங்கள் செய்தார் கருமங்கள்
பற்றிடுவ ரிட்ட பலம். (203)
கற்றுணர்ந்தா ரிந்நூலைக் காசினியுள் வாழ்ந்ததன்பின்
உற்றிருப்பர் சைவபுரி யுள். (204)

இந்த விரதத் தியலியம்பக் கேட்டவர்தாம்
அந்தவரன் கிங்கரரா வார். (205)
பரிவுறப்பார்த் தாரும் பரித்தவரும் பின்கேட்
டிரவியற்றும் பூசை யிறைக்கு. (206)
இந்திர லோகத் திருப்பர் பதினால்வர்
இந்திரர்நா ளெல்லாமுந் தின்பு. (207)
எழுதி யிதழினு மிந்நூலை மையால்
அழகுறச் செய்தா ரவர். (208)
மண்ணுலகில் வாழ்வர் மகிழ்ச்சியுறப் பின்றிளைப்பர்
விண்ணுலகிற் போக விதம். (209)
ஆத்திகருக் கிந்நூல் அறைகவறி விக்கவவர்
பாத்திர மென்று பரிந்து. (210)
நாத்திகர் முன்னே நவிலே லறிவியேல்
பாத்திரமன் றென்றவரைப் பார்த்து. (211)
உண்டு வினையு முயிர்க்கு வினையூட்டு
கண்டனுமென் பாராத்தி கர். (212)
உண்டோ வினையு முயிர்க்கு வினையூட்டு
கண்டனுமென் பார்நாத்தி கர். (213)
நாத்திகர்க்குப் போதிக்கு நாத்திகரும் நைந்துழிவர்
பாத்தி நிரயத்துட் பட்டு. (214)
ஆத்திகர்க்குப் போதித்தார் தாமுமவ ராலறிந்த
ஆத்திகரும் பாவவித மற்று. (215)
இருப்பர் சிவபுரத்து ளின்புற் றுளத்துட்
பரிப்ப ரமலன் பதம். (216)

*திருச்சிற்றம்பலம்.*

**4. சோமவார கற்பம் முற்றிற்று.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 5. வருத்தமற வுய்யும் வழி.

---

சிதம்பரம்

ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனார்.

உ

சிவமயம்.

*திருச்சிற்றம்பலம்.*

# 5. வருத்தமற வுய்யும் வழி.

செம்பவள மெய்யன் சிவன்சுத னைங்கரனை
நம்பவள மாமே நமக்கு. (1)

கருத்தினுங்கண் டீசனடி கட்டுரைப்பாம் பத்தர்
வருத்தமற வுய்யும் வழி. (2)

உதயத் தருக்க னுருவனைய லிங்கம்
இதயத் தலர்மே லிருத்து. (3)

ஆட்டுகவான் பாலாதி பட்டணிந்தா ரக்குழம்பும்
சூட்டுகவில் வாதி தொடை. (4)

நிகழுமரன் பாற்போன மாதி நிவேதி
கமழ்தூபந் தீபாதி காட்டு. (5)

அஞ்செழுத்தாற் சொன்னவனைத்தினையுஞ்செய்யடைவே
அஞ்செழுத்தே மந்திரமெல் லாம். (6)

பாவனையிற் பட்ட கருடனுற் பாம்பொழியும்
பாவனைமெய் செய்யும் பலம். (7)

உள்ளேவல் செய்வானைக் காந்தன் மிகவுவப்பன்
உள்ளேசெய் பூசை யுகந்து. (8)

அல்லாக்கைக் கில்லை யருவருப்பு மில்லை
கொலையுமிலை யுட்பூசை கூடு. (9)

நெஞ்சத்துன் னிச்சிவன்று ணிண்டவடங் கைப்பூண்டே
அஞ்செழுத்தை நாவினுஞ்சொ லாய்ந்து. (10)

சிவன்சத்தி யான்மாத் திரோதந் திமிரம்
சிவன்முதலைந் திற்சிந்தை செய். (11)

நெற்றிநடு மன்று ணிருமலன்று னின்றுடும்
பற்றறுப்பா னுன்பாலன் பால். (12)

அருக்கன் சிவனென் றலரிணு லர்ச்சி
இருப்பாய் சிவபுரத்துற் றின்பு. (13)

தூபியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழு
பாபமறும் வாய்த்துறுமின் பம். (14)

நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
என்றுஞ் சிவன்று ளிணை. (15)

அரிப்பா யவல வினையனைத்து மார்வத்
திருப்பாய் சிவபுரத்துற் றின்பு. (16)

வருத்தமற வுய்யும் வழிமொழிக பத்தர்க்
கிரக்கத்தா லாசா ரியன். (17)

*திருச்சிற்றம்பலம்.*

**5. வருத்தமறவுய்யும்வழி முற்றிற்று.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 6. திருக்கோயிற்குற்றம்.

---

சிதம்பரம்

ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனர்.

வ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# 6. திருக்கோயிற்குற்றம்.

திருக்கோயில் தன்னில்மலம் சலம்விடுதல் உமிழ்தல்
திருவிளக்குச் சாயையிலிங் கச்சாயை கடத்தல்
ஒருக்காலாய் வலம்வருதல் ஓடிவலம் வருதல்
ஒண்டொடிவே சியர்ப்புணர்தல் உற்றவரை நினைத்தல்
மருக்கமழ்நின் மாலியத்தைச் சிவன்றனைக்கோ முகையைய
வழிகடத்தல் ஆடையின்றி மருவுதல்கான் றுமிழ்தல்
பெருக்கநீ றணியாமை பெலிப்பற்று மிதித்தல்
பெலிபீடங் குறுக்கிடுதல் பெருமான்சந் நிதியில். (1)

எறுடனே தூபிதுச தண்டுபலி பீடம்
இலிங்கமிவை சாயைமிதித் தேகுதல்பொய்ம் மொழிதல்
பேறிழவே அசுசிபிறர் தாரத்தை விரும்பல்
பெரும்புனலால் இருபாதம் கழுவாமை சயனம்
தேறுபா கிலைதினல்தம் பலமுமிழ்தல் திருடல்
திருக்கோயில் நியமத்தைச் செய்தவத்தோர் தங்கட்(கு)
ஆறணியும் சடைமுடியார் ஆகமத்திற் சொலுமிவ்
வாறைந்தோ டிரண்டுகுற்றம் ஆகா அன்றே. (2)

பேறும் இழவும் எனக்கொள்க.

திருக்கோயிற்குற்றம் முற்றிற்று.

## சூசனம்.

இம் முப்பத்திரண்டு குற்றங்களுள்ளே சிலவற்றைக் கொள்ளாது வேறு சிலவற்றைக் கொள்ளுவதும் சில நூற்றுணிபு. அவையும் எவரும் ஒப்ப முடிந்தன என்பார் அம்முப்பத்திரண்டையும் இவ்வாசிரியர் அருணகிரிபுராணம் வலம்புரிச் சருக்கத்தில் (90) வது செய்யுள் முதலியவற்றில் விளக்கி இங்ஙனம் கோடலை இவ்விரு செய்யுளின் விளக்கியருளினார். ஆகலின், அத்தொகையினடங்கிய பிறவும் ஆலயத்தில் இயற்றத்தகாதனவே எனக்கொள்க. ஸ்நானம் செய்யாமலும் ஆசௌசத்துடனும் செல்லுதலாகிய ஏனைக்குற்றங்கள் இவ்விருதிறத்துள்ளே அசுசி முதலியவற்றிலடங்கும். விரிப்பிற் பெருகும்.

இக்குற்றங்கள் அபுத்தி பூர்வமாக நேரின் வேதத்திலுள்ள உருத்திர மந்திரத்தை ஆயிரம் உருச் செபிக்கின் முற்றும் அகலும். அவ்வேத வாக்கிய மந்திரங்களை உச்சரித்தற்கு அருகரல்லாதவர் அகோர மந்திரத்தை ஆயிரம் உருச் செபிக்கக்கடவர். இக்குற்றங்களைப்புத்தி பூர்வமாகவே இயற்றின் தப்பாது எரிவாய் நிரயத்தில் அழுந்துவது திண்ணம். இவற்றிற்குப் பரிகாரமும் இல்லை என்பது வேதாகம புராணாதிகளின் துணிபு. ஆகலின், ஆலயத்திலே புண்ணியத்தை நாடிப்போய் இத்தகைய செயல்களால் பாவத்தைத் தேடிக்கோடல் முறை அன்று. ஆகையால், இவற்றுள் ஒன்றனையும் இயற்றாது தத்தமக்கு விதித்தவாறே அவ்வவ் வெல்லையில் நின்று சுவாமி தரிசனம் செய்து திருவருளைப்பெற்று மீள்வதே கடமையாம்.

திருச்சிற்றம்பலம்.

**6. திருக்கோயிற்குற்றம்-சூசனம் முற்றிற்று.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 7. பரமோபதேசம்.

---

சிதம்பரம்

ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 7. பரமோபதேசம்.

ஆரணத்தி னுட்பொருளும் ஆராய்வ ராம்பவள
வாரணத்தின் தாள்கள்நினை வார். (1)
முத்தன் அநாதிசுத்தன் தாள்வணங்கி ஆதிமுத்தர்க்
குத்தமப்பே ரின்பமுரைப் போம். (2)
அநாதி அமலன் சிவனவன் பாரி
அநாதி அமலைபிரி யாள். (3)
அநாதி சமலர் அணுக்களவர் பாரி
அநாதிமல சம்பந்தத் தார். (4)
ஆக்கியுடல் ஆவிக் கறிவிப்பன் கன்மபலம்
நீக்கமற நின்மலனுள் நின்று. (5)
பரிபாகத் தின்மலத்தைப் பாற்றியுயிர்ச் சத்திக்
கருளால் இலக்குவனின் பார்ந்து. (6)
அந்தப்பே ரின்பம் திளைத்திருப்பன் ஆதிமுத்தன்
அந்தச் சிவனொடிரண் டற்று. (7)
சிவசத்தி யைத்திளைப்பர் ஆதிமுத்தர் என்னும்
அவசத்தம் மாயா தகம். (8)
அநாதிசுத்த சிற்சத்தி யிற்பேரா னந்த
அநாதிசுத்த னேதிளைப்பன் ஆர்ந்து. (9)
சாத்துவி யென்றபரா சத்திதனைச் சாற்றுமியல்
ஆர்த்த சிவாகமத்து ளாய். (10)

*சாத்துவி யென்றபெயர் தான்கற் புடையளுக்கு*
*வாய்த்தபெயர் என்றே மதி.* (11)

*கற்புடையா ளைத்திளைப்பன் காணவள்காந் தன்னவளை*
*மற்றையர்திண் டார்காண் மணின்.* (12)

*கண்ணகிதந் தோளையவள் காந்தன் கலந்தணைவன்*
*நண்ணவலார் மற்றார் நவில்.* (13)

*அணைவன் வசிட்டன் அருந்ததி தன்னை*
*அணையவல்லார் மற்றார்சொல் லாய்.* (14)

*கனியினும் கட்டிக் கரும்பினும் முத்தர்க்*
*கினியன் சிவனென்றார் என்.* (15)

*சகளசிவ னைத்திளைப்பர் சாந்தபர முத்தர்*
*அகளனரி யானவரும் ஆங்கு.* (16)

*திளைப்பர் பரமுத்தர் தன்சித்தின் செல்வம்*
*ஒளித்திடுகோள் அண்டன்மற்றுள் ளூன்.* (17)

*கருத்தின் களிப்பினைக்கண் காணாது காணா*
*தொருத்தன்பே ரின்பமுயி ரும்.* (18)

*ஆதிமுத்தன் இன்பமும் அநாதிமுத்தன் இன்பமும்*
*ஓதும்விரித் துப்பா ரிடத்து.* (19)

*கேளாய் உபநிடற்றா கப்பிரம கீதையினும்*
*ஆளாயர்ந் தார்க்கவர்வாக் கால்.* (20)

*முத்தர்க் கனுபூதி நானுன்கு மோத்ததனுட்*
*பத்தாறு சுலோகத்தும் பார்.* (?) (21)

*இருட்டறை மூலை யெனுமியலான் மூலன்*
*தெருட்டினன் முத்தான்மாச் சீர்.* (22)

*இருட்டறை மூலை யிருக்குமுயிர்ச் சத்தி*
*இருட்டறையில் லைச்சிவசத் திக்கு.* (23)

*தாயுமா னார்பல் லுயிர்க்குமெனும் சம்பந்தர்*
*வாயிலங்கு பாடல் மதி.* (24)

*தாயவன் காணால குக்கென்றார் தற்பரனைப்*
*பாயபுகழ் நாவரையர் பார்.* (25)

தந்தைதாய் பல்லுயிர்க்குந் தாமேயென் றூர்கடவூர்
நந்திதனைச் சுந்தரரும் நாடு. (26)
தாயே யென்றுன் சரணடைந்தேன் என்றனர்தம்
வாயால் மணிவா சகர். (27)
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறமென்றார் பார். (28)
திருவிசைப்பா வின்முத லைச்செய்யு ளாயின்
ஒருவுங்காண் உன்கொள்கை ஊன். (29)
அக்காலத் தாயே எனஅழைத்தான் அன்பினுல்
நக்கனைக் கீரனது நாடு. (30)
தாயவனே யாவான் என்றான் சதாசிவனை
ஆயன் புகழறிவித் தான். (31)
பேசற் கரியவுயிர் பெற்றான் பராபரையென்
றூசிலரு ணந்தியுஞ்சொன் னான். (32)
ஈசன் பிதாமாதா வாமெவ் வுயிர்க்குமெனப்
பேசினன்பே தைக்கெம் பிரான். (33)
அநாதிமல முத்தன் பிதாவமலை யன்னை
அநாதிமல பெத்தர்க் கெலாம். (34)
மைந்தர் அநுபவிப்பர் மாதாத் தனையென்னும்
நிந்தனைநீ சேதனன்வழு நீக்கு. (?) (35)
எழுநான்கு நான்கறுமூன் றென்பவற்று ளில்லை
வழுவான நின்கொள்கை வாக்கு. (36)
பெருநூலில் இல்லாப் பிழைபிதற்றும் பித்தர்
ஒருவார் நிரயத்து ளூற்று. (37)
ஆதலினின் கொள்கை யவலத் தினையகற்றிக்
கோதறுமென் கொள்கையினைக் கொள். (38)
விருப்பாலிந் நூலாய்ந்தார் மெய்வெறுத்து மெய்கண்
டிருப்பார் தினைத்துப்பே ரின்பு. (39)
விலங்கெனத்தம் மூனை வெறுத்தார்க்கிந் நூலை
இலங்கவிரிப் பார்க்காம்பே ரின்பு. (40)

*செறிமா செறியும் பரமோப தேசம்*
*மறைஞான சம்பந்தன் வாக்கு.* (41)

*திருச்சிற்றம்பலம்.*

**7. பரமோபதேசம் முற்றிற்று.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 8. ஐக்கியவியல்.

---

சிதம்பரம்
ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனார்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# 8. ஐக்கியவியல்.

பவளத் திருவன் பசுபதி மைந்தன்
கவளக் களிற்றான னத்தான்—குவளைப்பூம்
பாதம் பணிவாம்பூ சிப்பாம் சிரத்துளத்தும்
போதமெமக் கோங்குதற்கிப் போது. (1)

உள்ளான் சிவனுயிர் இல்லான் மலமென்றும்
விள்ளான் மலக்குமே லானன்—நள்ளுமாம்
ஆருயிரைத் தானூர்ந் தடைந்திரண்டு மாயையினும்
பாரிறுவாய்த் தன்னினுநிற் பான். (2)

அந்தாதி யற்றசம வாயமுயிர் கட்கன்ன
செந்தா மரைப்பாதம் சிந்தனைசெய்—தந்தாதி
அற்றசம வாயமா மைக்கம் பகருவாம்
கற்றுணர்வார் கற்றவுட் கட்டு. (3)

உத்தம ஞதிசம வாயமனந் தத்தொடுறும்
மத்தி மசமவாய மாமற்றை—யத்தம்(?)
ஆதிசம வாய மயிக்கியமு மிம்முறைமூன்
றோதுவமவ் வாறுவித மும். (4)

உதித்துடலின் நின்றொடுங்கும் ஆருயிர்கா டோறும்
உதிப்புநிலை ஈறுஞ்செய் வோனுண்—டுதிப்பீறும்
இல்லான் அமலன் இரண்டற்று......முயிர்
அல்லான் முதலயிக்கி யன். ? (5)

அத்துவயம் ஆவிசிவன் என்னும் அருக்கன்கண்
அத்துவச் சொற்பொருள் ஒன்றென் றறைகுவார்
பித்தருயிர்க் கன்னியமற் றுதி பகவனே
கத்தின்ன..............மின்று. ? (6)

ஈசனுக்குண் டேகவிடை யென்போ ரயிக்கியம்வே
றீசனுக்குண் டேதுவய வேறுமெனப்—பேசுவரோ
ஒன்றென்ன வொன்றிற் பிறிதிரண்டுற் றுலதனுக்
கொன்றிடுமிப் பேர்களிரண் டும். (7)

சையோகம் என்றும் சமவாயம் என்றும்
எய்தும்சம் பந்தமிரண் டெப்பொருட்கும்—எய்துமிவை
ஆதியும் அநாதியும்பெற் றுகுமே நான்குவிதம்
ஆதியந்த மற்றதனே டைந்து. (8)

ஆதிசை யோகமப் போடு மளவியவுப்
பாதிசம வாயம்பா கத்தவைய—நாதிசை
யோகமுமி யோடரிசி யெண்ணெய்க் கநாதிசம
வாயமெனும் சம்பந்த வாய்ப்பு. (9)

அமலன் அநாதி அனந்தசம வாயன்
சமலர்க்கு முந்தயிக்கி யன்றுன்—றமலத்தைத்
தீர்ப்பாரே இந்தநிலை தன்னைத் தரிசித்தார்
பார்ப்பாரே தம்முணர்வின் பம். (10)

தன்னைத்தான் பார்த்தலே தன்னுளிலங் கும்பிரமம்
தன்னையுந்தான் நோக்குதலா குந்தரையுள்—வன்னிமரம்
கண்டேனென் பார்புறங்கண் டுட்காணு ராவியுமுள்
ளண்டனுமிவ் வன்னியனை யான். (11)

உடலுயிர் கூடி யொருவ னவனுன்
உடல்கண் டதனுளுயிர் காணன்—படரவயற்
கண்டே னொருவனை யென்பா னவனைப்போல்
கண்டானுட் பேருயிர்கண் டான். (12)

நீட்டேல் இதழிலுற இந்நூலைத் தீட்டிடினும்
காட்டேலூன் காயமுவ ரார்கண்ணில்—காட்டிடுக
ஆதிசம வாயவிலங் காக்கையிருள் ஆணவம
நாதிசம வாயநஞ்செசன் பார்க்கு. (13)

அரவம் அருந்தியநீர் ஆர்க்கும்விடத் தைப்பரவம்
பரப்பருற் பாலா மரியவிந் நூல்வீட்டும்
கீழ்கற்றால் வீடம் பரையுண்டே யப்பொருளைக்
காட்டுமதி பக்குவர்க்கே காண். ? (14)

மெய்யன்பர்க் கிந்நூல் விளம்பினன்மெய் யன்பரும்போய்
மெய்யன் புரம்புகுந்து வீற்றிருப்பார்—மையலரித்
தின்புறு...... தஞ்சித்தி தன்னிலை யத்தினுயிர்க்
கன்பன் மலரடிசேர்ந் தார்ந்து. (15)

திருச்சிற்றம்பலம்.

8. ஐக்கிய வியல் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 9. உருத்திராக்க விசிட்டம்.

---

சிதம்பரம்

ஸ்ரீ மறைஞானசம்பந்த நாயனர்.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

திருச்சிற்றம்பலம்.

சாற்றினனே கண்டிவார் தன்னையெண்ணிச் சம்பந்தன்
ஆற்றினையுஞ் செஞ்சடைமே லார்வித்தான் — கூற்றினைக்கொன்
றந்தணனைக் காத்தா னமர்ந்திலங்கு தில்லைவனத்
தந்தமிலான் றண்ணருளா லாய்ந்து.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 9. உருத்திராக்க விசிட்டம்.

### விநாயகர் காப்பு.

செக்க ரிரவித் திருவுருவ ளானைமுகன்
விக்கினங்கள் வீட்டுந்தன் மெய்யன்பர்க்—கெக்கணும்
காட்டு மமலன் கமலவடி தன்கண்ணால்
ஓட்டுமல மூலத் துரம். (1)

### சபாநாயகர்.

இயலின் வழிவழுவா தீசனையர்ச் சித்து
முயலு முனிவார்முற் றேன்றி—அயன்முதலோர்
காணமணி மன்றுணட மாடுங் கடவுளடி
பேணிமற வாமலிருப் பேம். (2)

### சிவகாமசுந்தரியம்மையார்.

பேருயிருள் நீங்காவச் சிற்றுயிரைப் பெற்றுளைப்
பாரிறுவா யாக்கிப் பரித்தடக்கி—ஆருளும்
செய்யுமக ளங்க சிவகாம சுந்தரிதாள்
கையினலர் தூய்ப்பணிவாங் கண்டு. (3)

### விநாயகக்கடவுள்.

செய்யன் கரிமுகன்வெண் கோட்டன் றிகழைந்து
கையுடைய னன்பர் இடர்கடிவான்—மையலினை
மாற்றுவான் பாதம் வணங்குவமெம் முள்ளத்தும்
தேற்றுவா மேலாஞ் சிவம். (4)

### சுப்பிரமணியக்கடவுள்.

*உதைத்துத் தயித்தியரை வானோர் துயரைச்*
*சிதைத்தவர்க்கு விண்ணளித்த தேவன்—மதர்த்தவிழி*
*வள்ளிமண வாளன் மலர்த்தா ளிணைபணிவாம்*
*விள்ள வினையாம் விடக்கு.* (5)

### நந்திதேவர் முதலியோர்.

*நந்திபத சந்திமா காளர் நறுமலர்த்தாள்*
*பந்த விடையின் பதமலரும்—தந்தைபதம்*
*துண்டமிடு சண்டியடி யுந்தொழுவாம் தூய்மலர்கைக்*
*கொண்டுளத்திற் பேரன்பு கூர்ந்து.* (6)

### காரைக்காலம்மையார்.

*அனைத்துயிர்க்குந் தோன்றாத் துணையமல னென்னா*
*நினைப்பொடுமண் ணின்க ணிகழ்ந்து—வனத்தாலின்*
*மும்மலமு மெம்மைவிட முன்னோனை யாட்டுவித்த*
*அம்மையடி யெம்முடிவைப் பாம்.* (7)

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

*வெந்துறு மென்பை வியக்க வுலகெல்லாம்*
*சந்தவிய லாற்பெண் ணெனச்சமைத்தான்—வந்தெதிர்த்த*
*சாவகரை வென்று தறிநுதியின் வைத்தவிறற்*
*சேவகன்றாள் வைப்பாம் சிரத்து.* (8)

### திருநாவுக்கரசு நாயனார்.

*மன்னதிகை யீசன்முன் கூற்றா யினவாறே*
*என்னுமிசை பாடி யிசையுடனே—அன்னவனால்*
*இந்நிலமேல் வாகீச னென்னும் பெயர்பெற்றான்*
*தன்னடிவைப் பாமெந் தலை.* (9)

### சுந்தரமூர்த்தி நாயனார்.

*முதலை விழுங்கி முடிந்தன்றே போன*
*மதலைவரப் பாடியமெய் வாக்குக்—கதலிவனம்*
*சூழ்ந்ததிரு நாவலூர்ச் சுந்தரன்பா தந்தொழுவாம்*
*ஆழ்ந்தழுந்தாம் யாங்களவ லத்து.* (10)

### மாணிக்கவாசக சுவாமிகள்.

*ஞானக் கணிஞலே நாடு சிவன்மனிதர்*
*ஊனக்கண் காண வுலகிதனுண்—மானப்*
*பரிமேல் வரப்பனுவல் பாடினன்பா தத்தை*
*உரிமையுற வைப்பா முளத்து.* (11)

### நாயன்மார்கள்.

*தன்கழுத்தைத் தானரிந்துந் தாரந் தனைக்கொடுத்தும்*
*அன்பருக்கு மைந்தன் கழுத்தரிந்தும்—வன்புறவே*
*கண்ணிடந்துங் கைதடிந்துங் காண்டற் கரியனடி*
*நண்ணினர்தா ளும்பணிவா நாம்.* (12)

### திருவிசைப்பா அருளினோர்: மெய்கண்டதேவர்.

*மதுரகவி மாளிகைத்தே வன்முதலோர் செய்ய*
*பதமலர்க டம்மைப் பணிந்தே—இதமுறவே*
*தேங்குபுனல் வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனடி*
*தாங்குகவெம் முள்ளந் தனில்.* (13)

### வாழ்த்து.

*மாதவரு மந்தணரும் வாழ்க மழைபொழிக*
*கோதனமும் வாழ்க குடிதம்மைத்—தாதையென*
*ஓம்புமன்னர் வாழ்க வொறுக்குமன்ன ரற்றாரமும்*
*தேம்புகவுய்ந் தோங்க செகம்.* (14)

### நூல்வந்தவழி.

*புத்திக்கு முத்திக்கு மேதுமுனைப் புண்ணியர்க்குச்*
*சித்திக்குங் கண்டி யதன்சிறப்பைப்—பத்தரெணக்*
*கண்டுரைப்பா மாகமத்துங் காந்தபுரா ணத்தினும்*
*தண்டமிழ்வெண் பாவினாற் றான்.* (15)

### பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

வானோர் வணங்கி மலவயிரி தாண்மலரிற்
றேனார் நறுங்கொன்றைச் செஞ்சடையாய்—கானாடி
முப்புரத்தா ரெம்மை முரணழித்தார் மாலயனும்
அப்புரத்தார்க் கொல்கினர்போ ரால். (16)

அழித்தவரை யெல்லாமெம் முள்ளத்தி லல்லல்
ஒழித்தருள்செய் வார்மற்று முண்டோ—சுழித்தபுனல்
சூடிமாறர்க் கண்டேயன் றுஞ்சாமற் கூற்றுவனைச்
சாடிசாற் றன்னையல்லாற் றான். (17)

என்றியம்பக் கேட்டிரங்கி யஞ்சேலஞ் சேலவரை
அன்றிப் பொருதழிப்பா மென்றருளிக்—கொன்றைமலர்
சூடினன் றுஞ்சா வரத்தார் தமைத்துணிக்க
நாடினா னத்திரமந் நாள். (18)

அம்பகங்கண் மூன்றினையு மாங்கலர்த்தித் தானமர்ந்தான்
உம்பரவ ராண்டா யிரமுறலும்—நம்பன்கண்
நீருதித்த தந்நீரிற் கண்டி மரநிகழ்ந்த
தாருதிக்க வுய்வா ரகத்து. (19)

கலித்தருக் காம்பகத்தி னீரிற் கபிலை
கலித்ததவெண் கண்டிமதிக் கண்ணிற்—கலித்தநீர்
தன்னிற் கரியவுருக் கண்டி தழல்விழிநீர்
தன்னிலுதித் தோங்கிற்றுத் தான். (20)

அருக்கவம்ப கத்துதித்த கண்டி யதனில்
இரத்தவுருக் கண்டி யெழுந்த—தருத்திகழ்பொற்
கண்டியுந்தோன் றிற்றதனிற் காளவிட முண்டமணி
கண்டன் கருணையாற் காண். (21)

உருத்திரன்கண் ணீரில் உதித்தலினு கும்பேர்
உருத்திராக் கமென் றுணர்க—தரிக்குமுறை
தன்னை யிவற்றை முறையுறவே சாற்றிடுவாம்
உன்னியம வன்று ளுளத்து. (22)

அருந்தவள மேயந் தணர்க்காகும் வேந்தர்க்
குரிமைகபி லஞ்சிவப்பென் றோர்க—உரிமையதாம்
பொன்மை வயிசியர்க்குப் பூண்பதற்குச் சூத்திரர்க்கு
நன்மை கருமையென நாடு. (23)

அரிதாகில் வெண்மைதா னந்தணர்க்குச் செம்மை
உரிமை யெனவே உணர்க—அரிதாகிற்
செம்மையும் பொன்மைதகும் தேடவரி தேலதுவும்
நன்மை கருமையென நாடு. (24)

தம்மிலிழிந் தார்மணியைத் தாங்கலுயர்ந் தோர்க்குரித்தே
தம்மிலுயர்ந் தார்மணியைத் தாந்தரிக்கின்—வெம்மைமிகும்
என்றெண்ணி யேதரியே லெண்ணமிழந் தேதரிக்கை
நன்றல்ல தீங்கென்றே நாடு. (25)

ஏகமுக மாதிபதின் மூன்றுமுகந் தானிறுவாய்
ஆகும் விதத்தையதி தெய்வத்தை—ஆகுலங்கள்
தீர்த்துக் கொடுக்குஞ் சிறப்பினையுந் தேர்ந்துரைப்பாம்
கூர்த்தெழுந்த வாஞ்சையுளங் கொண்டு. (26)

ஏகமுகத் துக்கிறைவ னேக பரமசிவன்
போகும் பிரமவதை பூண்டவர்க்கு—மாகத்தார்
ஏத்துமணி கண்ட னிரண்டுமுகத் துக்கிறைவன்
தீர்த்திடுமா வின்கொலையின் றீங்கு. (27)

மூன்றுமுகக் கண்டிக் கழன்மூன்றுந் தெய்வமாம்
ஆன்றபரி வோடே யணிவார்க்குக்—கீன்றவினை
தீருந் தெரிவைகொலை மற்றைச் சிறுகொலையும்
தீரும் எனவே தெளி. (28)

நான்குமுகக் கண்டிக் கதிதெய்வம் நாலுமுகன்
தாங்கினர்க்குத் தீருநரர் தம்வதைதான்—பாங்குபெறும்
ஐந்துமுகக் கண்டிக்குக் காலாங்கி யோங்குபதி
சிந்துமிது தாங்கினர்க்கூண் தீங்கு. (29)

ஆறுமுகக் கண்டியினுக் காறுமுக னேயதிபன்
மாறும் பிரமவதை மற்றனைத்தும்—ஏறுபுகழ்
ஏழுமுகக் கண்டியினுக் கீசன னங்கேசன்
பாழிரணி யத்திருட்டின் பாங்கு. (30)

எட்டுமுகக் கண்டியினுக் கீசன் விநாயகனே
கட்டினருக் கெட்டுமுகக் கண்டியினை—விட்டொழியும்
தேசிகன்றன் பாரித்தனைத் தீண்டிய தீவினைபொற்
காசினைக்கொள் கள்ளமும்போங் காண். (31)

வாய்த்தமுக மொன்பதுக்குத் தெய்வம் வயிரவனே
சேய்த்திடுவன் கொன்றவினைத் தீங்கனைத்தும்—ஏத்துமரி
பத்துமுகத் துக்குப் பதிபேய் பயந்துபோம்
இத்தையணிந் தார்க்கரவு மின்று. (32)

ஏகா தசமுகத்தை யேற்றிலங்குங் கண்டியினுக்
கேகா தசருத் திரரிறைவர்—வாகாரும்
இக்கண்டி பூண்டாருக் கேயுய்யா கங்களெலாம்
விக்கினங்கள் வீடும் விரைந்து. (33)

ஆறிரண்டு வாய்முகத்துக் காதித் தியர்தேவர்
கூறும்பெறக் காதுதனிற் கோத்தணிவார்க்—கூறுகள்போம்
துட்டமிரு கங்கள் சுழன்றுவிரைந் தோடுமுளத்
திட்டபல மும்வருமென் றெண். (34)

ஏழொடிரு மூன்றுமுகக் கண்டியரி தாமதுமுன்
ஊழின் னலத்தார்க் குறுமதனைத்—தாழ்வறவே
சென்னிமிசைத் தாங்கிடுக தெய்வம் பரமசிவன்
உன்னுநல புத்திமுத்தி யுண்டு. (35)

சிகையிற் சிரத்திற் செவியிற் களத்தில்
தகைமையுறு மார்பு தனிலும்—வகைபெறவே
வாகுமணிப் பந்தத்தும் வாய்க்க வணிந்திடுக
ஊகமுறு வெண்ணுமுரைப் போம். (36

தரிக்கைசிகை தன்னிலுற வொன்றீசா னத்தால்
தரிக்கசிரந் தன்னிலா முறு—தரிக்கசெவிக்
கவ்வாறு தற்புருடத் தாற்கண்டத் தெண்ணன்கும்
அவ்வா றகோரத்தி னல். (37)

செம்பொன்னி னலே செவிக்கொவ்வொன் றுஞ்செறிக்க
செம்பொனரி யார்வெள்ளி யாற்செறிக்க—செம்பினுமாம்
உத்தமமே செம்பொன் ஒளிர்வெள்ளி மத்திமமே
கைத்தசெம்பு தான்கனிட்டங் காண். (38)

ஒன்றுமே ழேழு முரத்தி னணிந்திடுக
என்றும் வியோம வியாபினியே—ஒன்றியுறும்
மந்திர மெண்ணிரண்டு வாகுவினீ ராறுமணி
பந்தந் தனக்கென்று பார். (39)

மந்திரமுன் கைக்கும் பிராசாத மேமதிக்கின்
ஐந்தொருமூன் றேடொருநா முமாலை—முந்தைவினை
மாயவரம் வாய்க்கமணி மார்பி னணிந்திடுக
காயுங் கருத்தார் கரு. (40)

ஆசையினே டொன்றுமுத லாயிரமந் தந்தரித்தார்
ஆசறவாய்ந் தங்கமறை யாகமும்—ஆசறுக்கும்
தெய்வஞ் சிவனென்று தேறினர்க்குத் தேனுவினை
அவ்வளவீந் தார்பிறப்பற் றார். (41)

† (42)

கண்டி யினைப்பூண்டார் காதலித் துள்ளிமுதல்
உண்டிடுதல் செய்யா தவர்த்தொழிக்க—துண்டரெனப்
பட்டாருண் டேன்மதுவும் பாதாளக் கீழ்க்குழியுட்
பட்டாழ்ந் தழுவர் பதைத்து. (43)

அயனுதற்கட் டோன்றியவற் காக்குமுறை நல்கு
நயனங்கண் மூன்றுடைய நம்பன்—வியனுடைய
கண்டிப் புடையுறைவ னென்றே கருதிடுக
உண்டிப் பிறப்புமொழிப் போர். (44)

ஒருமுகத்தி னோடே யொருமுகமே யேயும்
இருமுகத்தி னோடிரண்டே யேயும்—இருமுகத்திற்
சேர்க்க திருமுகத்தைச் செப்பியவிவ் வாற்றினாற்
சேர்த்திடுக மற்றதனைத் தேர்ந்து. (45)

அடியினடி யொன்றமுடி யந்தத்தி னொன்ற
இடையிற் பவளமுத் தேயத்—தொடைசெய்க
அன்றிப் பிரமக் கிரந்தியா வின்பந்தம்
ஒன்றவிழை யான்முடிக வோர்ந்து. (46)

உத்தமமே யாமலகத் தின்கனிக்கொப் பானகண்டி
மத்திமமா கும்மிலந்தை வண்கனிக்கொப்—பித்தலத்துள்
நீசஞ் சனாவித் தினையென்ன வேயினைக
பாசவிதம் பாற்றினைப் டார். (47)

முத்திக்கை யைந்தினன் முற்றுஞ் செபமாலை
புத்திக்கு நூற்றெட்டா கும்பகலின்—அத்தமுமாம்
பாதமுமா முச்சிதனில் நாயகந்தன் னைப்பதிக்க
ஓதுமதொட் டேமுடியை யும். (48)

இலங்கித்தா னுயகத்தைப் பாவந்தா னேயும்
இலங்கியா தேதொட் டெணுக—பலம்பெருகு
மேருவினை யின்றியே நோக்கலுமா கும்வியனார்
மேருவினெவ் வாது வீறு. (49)

இரண்டுமுகங் கண்டிசெப மாலைக் கிசையா
திரண்டட னென்று மிசையா—திரண்டனே
பத்துமுக மும்பதின்மூன் றும்பழுது மற்றனைத்தும்
உத்தம மாமென் றுணர். (50)

ஆறைந்து வெற்றியினை யாதரிப்பார்க் கையைந்தோ
டாறமறி வாதரிப்ப ருக்கருகம்—ஆறுடனே
பத்துமா ணத்திற் பதினைந்து மற்றையன
குத்திரத்தின் மாலைமணி கொள். (51)

குணிதமிரு நான்கங் குலியினிரே கைகாங்
குணிதமொரு நூற்றெட்டுக் கூடும்—துணிசங்கின்
புத்திரதீ பிக்குச் சதத்திரயம் புண்டரிக
வித்தினுக்கைந் நூறாய் விடும். (52)

மூன்றயுத மாகும் பவளந் தனின்முறையால்
ஊன்றுபடி கத்தொருநூ றாயிரஞ்சங்—கின்றிலங்கு
முத்தினுக்குக் கோடி குசைமுடிச்சீ ரைங்கோடி
இத்தனையென் றெண்ணிலகண் டிக்கு. (53)

வித்துப் பலாசின்வெண் சந்தனஞ்செஞ் சந்தனத்தின்
வித்துஞ் செபிக்கை விதியாமுன்—வைத்த
குசைக்கிரந்திக் கொக்குமெனக் கொள்க விவற்றைப்
பசைக்கேது வென்றெணிப்பார் யார். (54)

அரிதாகிற் கண்டி குசைக்கிரந்தி யாதி
உரிமை யெனவே புணர்க—விரலினாற்
செய்யிற் செபம்பிணிகள் சேருமத னாற்செய்யேல்
செய்கசெப மற்றவற்றாற் றேர்ந்து. (55)

இந்திரதிக் காதியினை நோக்கியிருந் தேசெபிக்க
சிந்தனைசெய் வார்போகந் தீப்பிணக்கம்—இந்திரனூர்
மோகன மாகருட முச்சா டனமுத்தி
சாகுமர ணம்முறையாற் றாம். (56)

படிகவொளி போலப் பரமனைப்பா விக்க
விடுவார்கள் பாச விதத்தைத்—தொடுவாரும்
புத்திவிதத் தைச்செருக்கும் போதுபுரி தீவினையைக்
கைத்துவிடு வார்தாமுங் காய்ந்து. (57)

மாரணத்தைச் செய்வாதன் மைநிறம்போ லேநினைக
காரணனைப் பொன்போற் கருதிடுக—பேராதே
நிற்கும் படிநினைவார் கிஞ்சுகம்போ லேநினைக
வற்கமுற வாக்கு மறிந்து. (58)

செவ்வாத்தம் போமெனவே சிந்திக்க வெற்றியினை
எவ்விடத் தங்கொண் டிடவெணுவார்—கௌவையுடன்
உச்சா டனம்புரிவார் தூமநிறம் போமெனவே
இச்சித்துத் தெய்வத்தை யீங்கு. (59)

தரிக்கவடந் தர்ச்சனியி லாகருட ணத்தில்
தரிக்கவசிக் குற்றநடுத் தன்னில்—தரிக்கவடம்
புத்திக்கு முத்திக்கும் பூணு ரனுமிகையில்
இத்தகையங் குட்டங்தொட் டெண். (60)

மாரணத்தி னுச்சா டனத்தின்மற் றைப்பிணக்கின்
காரணமா குங்கனிட்டத் தங்குட்டம்— ஆருறவே
நித்தியகன் மத்தி லனுமிகையி னங்குட்டம்
வைத்துச் செபிக்கை வரம். (61)

மாலையினை யின்றிச் செபிக்கை வரமலவெக்
காலையினு மென்றே கருதிடுக—மாலைக்
கிழையிருபத் தேழுவெண் பட்டிற் பருத்தி
யிழையும் வழுவலவென் றெண். (62)

முத்திக்குப் பிங்கலையி னேடினுயிர் தான்மொழிக
புத்திக் கிடையிற் புகன்றிடுக—ஒத்தியங்கில்
இவ்விரண்டி னும்புத்தி முத்திபெறு வாரிசைக்க
எவ்வழிநன் மைக்குமிது வேது. (63)

அந்தணர்முன் மூவருமோங் காரத்தோ டார்வத்தால்
ஐந்தெழுத்து முச்சரிக்க வன்புளூற—ஐந்தெழுத்தும்
பாங்கே யெமக்கென்று சூத்திரர் தாம்பகர்க
ஓங்காரந் தன்னை யொழித்து. (64)

மந்திர மானத மந்தமொலி யென்றுமூன்
றிந்தவிதத் துண்மா னதமெனத்தான்—மந்திரத்தை
உச்சரிக்கை மந்தம் பிறருணரா தேநாவால்
உச்சரிக்கை யென்றே யுணர். (65)

அந்நியருங் கேட்க அறையுமது தாமொலியே
இன்னவொலி தானந் தணரியற்றும்—நன்னிலைமை
யானயா கத்தி னருக மெனவறிக
ஊனவினை யோட்டவுனு வார். (66)

மானதந்தான் முத்திக்காம் புத்திமுத்திக் காமந்தம்
ஏனையொலி குத்திரங்க ளெட்டினுக்காம்—மானதத்தை
யோதகமே லேற்றிவட மற்றையொலி மந்தமிவை
யோதுகவீ ழோடவட மோர்ந்து. (67)

அகற்பஞ் சகற்பமென வாகுமிரு பேதம்
அகற்பந் தியானமற வாக்கல்—சகற்பந்தான்
உன்னிக் கடவுளடி யுச்சரிக்கை மந்திரத்தை
இன்னசெப மேவாமென் றெண். (68)

அங்குட்டந் தர்ச்சனியு மாகு மொலியினுக்கே
அங்குட்ட மத்திமையு மந்தத்தாம்—அங்குட்டம்
தன்னோ டநாமிகையுந் தான்மா னதத்தாகும்
இன்னுமொரு மாலையிசைப் பேம். (69)

ஆடகத்தாற் பண்ணுவிக்க வங்குட்ட மாலையினை
ஈடுபெற வெள்ளியினு மாமியற்றன்—மாடில்லார்
செம்பினுஞ்செய் தேகா தசக்கண்டி யைச்செபிக்க
நம்பி னநாமிகையி னல். (70)

மடிதுயில் வாத மங்கத மாதி
விடுக செபஞ்செய்யும் வேலை—கடிதொடேல்
சோம்பு முரியேல் துரிசரைப்பா ரேல்சொல்லேல்
வேம்பனைய சொல்லின் விதம். (71)

தரியேல் சிரங்களந் தன்னிற் படத்தைத்
தரியேல்மெய்க் கஞ்சுகந் தன்னை—இருளிலிரேல்
ஆதரவி னெட்டகமே யாடுகரம் நாயெருமை
ஏதமுள பன்றியும்பா ரேல். (72)

மந்திரத்தை யல்லாத மற்றொருசொல் லைச்சொலினும்
மந்திரமாங் கண்டி யடங்காத்திற—பந்தித்தே
இல்லறத்தை யோம்புவோன் முனியற்றி னல்விரத்தன்
சொல்லுகமுன் சொன்னபடி சூழ்ந்து. (73)

கண்டியுடன் சந்திதொறுங் கைதனிற்கொண் டேகணிக்க
எண்டிகழ்வி னுத்தமமோ ராயிரமே—விண்டதனிற்
பாதிபா தஞ்செபிக்கை மத்திமப்பாங் காக்கனிட்டம்
ஓதிடுெரு நூற்றெட்டென் றோர். (73)

வத்திரத்தி னாலே மறைக்க வலக்கரத்தின்
வைத்தசெப மாலைதனை வாய்க்கவாம்—மெய்த்தலையிற்
பாதமலர் வைத்தாண்ட பண்டிதன்முன் பார்த்திடினும்
சேதப் படுஞ்செய் செபம். (75)

திண்ணிலத்திற் கைதவறி வீழிற் செபமாலை
கண்ணிற் படுத்துதக கந்தத்தாற்—பண்ணுறவே
ஆட்டியருச் சித்துக்கா யத்திரிநூற் றெட்டெணுக
ஓட்டிடுவார் வீழ்த்துற்ற வூறு. (76)

அறினே கயிறுசெப மாலை யதனைக்
குறைவறமுன் போற்கோவை யாக்கி—முறையுடனீர்
ஆட்டியருச் சித்தே யகோர மொருநூற்றை
நாட்டியவன் முனு ணயந்து. (77)

கண்டியினைத் தீண்டிற் கரிசரு நொய்யாரும்
விண்டிடவே புன்மைவியன் கௌவியத்தைக்—கொண்டுவிதி
ஆட்டியணி யாய்பூத்தா ளந்தியருந் தீண்டியிடின்
வீட்டிடுக வுண்ணுெந்து வேறு. (78)

வரைச்சிகரந் தன்னில் வனத்தி னதியின்
கரைக்கணம லன்கோயிற் கண்ணு—முரைத்திடுக
சைவரெலை தன்னிலழற் சாலைகோ சாலைதன்னில்
துய்யதன தாச்சிரமத் தும். (79)

ஒன்றொன்றே யாகு முருச்செபிக்கிற் றன்மாலையில்
ஒன்றுறா ருமாக்க ளொன்றுமலைக்—கொன்றுதான்
ஆயிரமா மாற்றின் கரையி லடைந்தான்
எயுங் கடற்கரைக்கென் றெண். (80)

குன்றத்தி னுச்சி குலவு தபோவனத்தின்
ஒன்று நியுத மெனவுணர்க—ஒன்றுமொரு
கோடிசிவ னாலயத்திற் சந்நிதிகு ணிப்பரிய
கோடியுறு மென்றுளத்திற் கொள். (81)

கருமா னுரிஞான விர்த்தியினைக் காட்டும்
வரிவேங்கைத் தோன்முத்தி வாய்க்கும்—உரமுடைய
கம்பளந் துன்பங் களையு மிழைக்கலிங்கம்
வெம்புமுடை னோயினைவீட் டும். (82)

மரப்பலகை யாக்கும் வறுமையினை வன்கல்
வருத்தும் பிணியால் வடிவை—உரத்தலம்
துன்பந் தருமிவற்றை யெல்லாந் துறந்துரைக்க
அன்படன்முன் சொன்னா தனத்து. (83)

முடக்கி முழந்தா ளிரண்டு முறையால்
அடக்கியடி தன்னோ டடியை—இடத்தொடையுள்
ஒன்ற வலப்புறத்தாள் வைத்தோங் கிடவுட்கண்
ணொன்றியுற நாசிநுனி யோடு. (84)

இருக்குமிது தன்னைவீ ராதன மென்றே
உரைக்குமிய லிவ்வா தனத்துற்—றருச்சிக்க
ஆதியடி தன்னைச் செபிக்கபது மாதனமும்
நீதியென வேநினையாய் நீ. (85)

ஆவாக னாதிசயம் புச்சிவலிங் கத்தினிலை
ஓவாதே நின்மலனுங் குற்றிடலாம்—ஓவாதே
கண்டியினு நிற்பன் கடவுளத னிதற்கும்
கண்டதிலை யாவா கனம், (86)

ஆயினுஞ்சொல் வாமிங் கருச்சிக்கும் பாங்கினையும்
வாயின் மனத்தின் மதிப்பரிய—தேயன்
சிவனமலன் செப்பிய வாகமத்திற் றேர்ந்தே
பவமுயிர்க்குத் தீரும் படிக்கு. (87)

சத்தியோ சாதத்தாற் கௌவியத்தைத் தானூட்டி
உத்தரத்தி னூற்பிசைந்தோண் மாலையினைச்—சுத்தநீர்
ஆட்டியகோ ரத்தால் அழற்றாபங் காட்டியே
யோட்டுகவீ ரம்புருடத் தோடு. (88)

தனித்தனியே யீசானத் தாலே சதகம்
எணிக்குறையா தேசெபிக்க வெங்கும்—கணித்திடுக
நாயகத்தைத் தொட்டே நலமார் பிரமங்கள்
ஏயச் சதங்குறையா தே. (89)

திகழச் சிவலிங்கந் தன்னிற் சிவனைப்
புகழப் புரிபூ சனைபோல்—நிகழவே
நாயகந் தன்னி லருச்சிக்க நாண்மலரால்
ஏயவுப யோகமினி தே. (90)

சிவபத்தர் கைக்கண்டி தானத்தைச் செய்தோர்
பவமற்று மேலே படர்வர்—சிவனுற்ற
நற்புரியும் புக்கிருந்து நம்பனரு ளாற்பாசம்
பக்கிடத்துய்ப் பார்பேரின் பம். (91)

தெரிசிக்கும் புண்ணியத்திற் றேரிலொரு கோடி
பரிசிக்கி னுகுமெனப் பார்க்க—பரிசுத்த
ராகியே தாங்கி னவற்றினதி கஞ்செபிக்கின்
ஆகும் பலமளப்பா ரார். (92)

கண்டியணிந் தார்தம்மைக் கண்டவுட னேபணியார்
பண்டை நரகிற் படிந்துழிவர்—கண்டியினைப்
பூண்பாரைக் கைதொழுது பூசிப்பார் மேற்புரியிற்
காண்பார் கடவுளடி கள். (93)

திருநீறு பெற்றி தரியானே யாகிற்
பரிவுறமெய்க் கண்டிபரி யானேல்—அருமறையின்
வாக்கியத்தி னாலே மகம்புரியு மந்தணன்றான்
நாய்க்கடுவான் கொள்ளான் நலம். (94)

துயிலும்போ துஞ்சலம லஞ்சொரியும் போதும்
டயிலும்போ தும்பரி பாயல்—அயர்வாக்கு
நோயிற் பிறப்பிறப்பா சூசத்தி னுந்தரியேல்
காயத்திற் கண்டியெனுங் காப்பு. (95)

காய மொருவும்போ தோர்கண் டியைவிழுங்கி
மாயுகர்தா மாய மனத்தின்றி—ஏய்வர்
உருத்திரலோ கத்தி னுநிப்பினுமீங் கேயா
சரித்தமலன் றாளையடை வார். (96)

கட்டி யிடினே கழுத்தினுறக் கண்டியினை
விட்டுடலை வீயும் பொழுதுயிர்தான்—கிட்டி
உருத்திர லோகத் துறையுமணி தானே
பரித்திடினோர் சொல்வார் பலம். (97)

நின்றுநெடு நீரில் நெருப்பிற் பொழிமழையில்
வென்று புலன்களைப்பே றூர்வெறுத்தும்—ஒன்றினர்கள்
புத்திமுத்தி கண்டியெளி திற்பூண் டவைபொருந்தாக்
கொத்தையருக் கேதுதுணை கூறு. (98)

பூணுமற் கண்டியினைப் பூசைபுரி வார்பலத்தைக்
காணு ரெனவே கழறுமறை—காணுதே
பூண்டுசிவ பூசைபுரி வார்புகுந்து மேற்புரத்துக்
காண்டிருப்பா ரீசன் கழல். (99)

புண்டரிகத் தோன்மாயன் புத்தேளிர் கோன்முனிவர்
அண்ட மரிக்குமர னைங்கரனுங்—கண்டியினைப்
பூண்டு தமக்குப் பொருந்ததிகா ரம்புரிந்து
காண்டிருப் பார்கிட் களம். (100)

நாய்க்குத் தவிசிட்ட தென்னநரார்க் குக்கண்டி
வாய்க்கவிது தன்னைமதி யாமனிதர்—நோய்த்துயரோன்
பாதகண் டத்துப் பரித்துமரித் துப்படிவர்
கூரிடரா ருங்கீழ்க் குழி. (101)

தரித்தே யுரத்தில் சதாட்சக மாலை
பரித்தே யமலன் பதத்தைக்—கருத்தில்
நடப்பவர் தாமடி தோறும் நணுவர்
படிப்பரிமா யாக பலம். (102)

சூட்டி யலரைத் தொழுதணிவார் கண்டிவடம்
வீட்டிவினைத் தீமை விதமனைத்தும்—கூட்டினையும்
இட்டுவிம லன்புரிக் கின்புற் றநாதிமலக்
கட்டறக்காண் பார்நிட் களம். (103)

கண்டியரி தாகின்மண் ணாலே பணிக்கண்டி
கொண்டணிவார் மூவேழ் குலத்தோடும்—பண்டைவினை
வீட்டிவிண் ணுள்வ ரெனின்வியன் கண்டிக்குக்
காட்டுவா ரார்பலத்தைக் கண்டு. (104)

வத்திரத்திற் சூழ்ந்திந்த மாலையினைப் பெட்டகத்து
வைத்தெடுத்துச் சந்திதொறும் வாய்க்கதே—சுத்தவுடற்
பூட்டிடுக பூட்டில் வினையனைத்தும் போக்கியே
காட்டிடுவா ரீசர் கழல். (105)

பொன்னுலகம் வெந்நரகம் புண்ணியபா வம்புரிவார்
நின்மலனு முண்டென்று நிச்சயித்தார்—இந்நிலைமை
ஆத்திகரே யார்கண்டார் அம்மைப் பலமென்பார்
நாத்திகரென் றேயுளத்து ணடு. (106)

நாத்திகர் கேட்க நவிலற்க விந்நூலை
ஆத்திகர்க்கா ர்வத்தா லறிவிக்க—ஆத்திகருக்
கன்பா லுணர்த்தினரு மாராய்ந்த வாத்திகரும்
இன்பார்ந் திருந்துநிலத் தின். (107)

சேர்ந்துசிவ லோகத்தை யங்குளபோ கந்திளைத்துத்
தீர்ந்தொடுங்கு நாளிற் செகமெல்லாம்—ஆர்ந்தவிருள்
நீங்காதே நீங்கி நிமலனரு ளாற்றிளைப்பர்
பாங்காற்றஞ் சத்தியினின் பம். (108)

திருச்சிற்றம்பலம்.

9. உருத்திராக்க விசிட்டம் முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்ட தேவர் மிளிர்கழல் வாழ்க,

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# குறிப்புரைகள்

## உருத்திராக்கவிசிட்டம்

1. மலமூலத்து என்பதனை மூலமலத்து எனமாற்றிக் கொள்க.

3. பேருயிர்— பரமான்மா எனப்படும் சிவம்.

5. வினையாம் விடக்கு—வினையாலாகிய வுடம்பு.

20. கலித்தது—பெருகியது. அருக்க அம்பகம்—சூரிய நேத்திரம். கபிலை- கருமை கலந்த பொன்மையது.

27. மணிகண்டன்—சிகண்டருத்திரன்.

28. அழல் மூன்று-சுசி, பவமானன், பாவகன்; அழிவிலாது இயல்பினுறையும் அழல்சுசி; அரணியில் எழும் அழல் பவமானன், முகில் மின்னில் தோன்றும் அழல் பாவகன் எனக் கொள்க.

29. காலாங்கி-காலாக்கினியுருத்திரன்.

35. பதின்மூன்று மணிக்குத்தெய்வம் சுப்பிரமணியக் கடவுள். அது மாதா, சகோதரர், புத்திரர் கருவாதிய வற்றின் கொலைப்பாவங்களைப்போக்கிச் சர்வாபீஷ்டத்தையும் சர்வசித்தியை யும் கொடுக்கும். பதினன்கு முக மணிக்குத் தெய்வம் சிவமும் சத்தியும். அது தேவர் முனிவர் முதலாயினரையும் வசமாக்கு வித்துச் சிவபதத்தைக் கொடுக்கும் என்பதும், பதின்மூன்று முக மணிக்குச் சிவனும் பதினன்கு முகமணிக்கு மனுக்களும் தெய்வங்கள் என்பதும் நூற்றுணிபே, இங்ஙனம் கூறுவது அம்மூர்த்திகளுக்கும் அவையுரித்தாதல் நோக்கி என்க.

36. எண்ணளவு எல்லையளவு என்னும் இருவகையுள் இந்நூலிற்கூறப்படுவது எண்ணளவு; எல்லையளவை "கரத்தி னளவுகர மாலைசிர மாலை—சிரத்தி னளவென்றே தேறு," "உரமாலை நாபியந்த மென்றுணர்க வன்றி—யுரமாலை புஞ்செயலாகும்," சைவ சமய நெறி.

37. சிரத்திற்கு ஈசானமந்திரமே யுரித்து ஆகலின் ஈசானத்தால் என்பது நடுநிலைத் தீபம் என்க. சிரசுக்கு நாற்பதும் ஆம்.

39. மார்பிற்கு ஐம்பத்து நான்கும் உதரத்துக்கு ஐம்பதும் கோடலும்உண்டு.

40. முன்கைக்கும் என்ற உம்மையால் வாகு மணிக்கட்டுகளுக்கும் பிராசாத மந்திரமே உரித்தென்ற தாயிற்று. மார்பில் ஐம்பதை மாலையாகவும், நூற்றெட்டை உபவீதமாகவும் தரித்தலும் ஆம்.

41. தரித்தார் ஈந்தாரும் பிறப்பற்றாரும் ஆவர் என்க.

42. கிடைத்த பிரதிகளில் இச்செய்யுள் சிதைவுற்று இறந்தது.

47. சணவித்து—கடலை.

48 அத்தம்—அரைப்பங்கு பாதம்—காற்பங்கு, நூல் மணியினைக் கயிற்றினடியினும் சூக்கும மணிகளை அவ்வவற்றின் முடியினுமாகக் கோபுரவடிவிற் கோத்து, ஆதியந்தங்களை யொருங்கு கூட்டி, அவ்வவ் விலக்கங்களுக்குப் பிரத்தியேகமாக மேருமணியைக் கோத்து இருமுடிச்சிட்டுத் தூலமணியாதியாகச் செபிப்பது உற்பத்தி திதி செபமென்றும், சூக்கும மணியாதியாகச் செபிப்பது சங்கார செபமென்றும் கூறப்படுமாகலின், சங்கார செபமும் செய்தலா மென்பார் "ஓதுக தொட்டே முடியை யும்" என்றார்.

49. இலங்கித்தல்—கடத்தல்.

51. ஐந்துமணி செல்வத்திற்கும், ஆறுமணி சாந்திக்கும், இருபத்தாறுமணி தனவிர்த்திக்கும், இருபத்தெட்டுமணி புஷ்டிக்கும்,முப்பது மணி தனலாபத்திற்கும், முப்பத்திரண்டு மணி வெற்றிக்கும், ஐம்பது மணி காமியகன்மப் பிரவர்த்திக்கும், நூற்றைந்து மணி போக மோக்ஷத்திற்கும் கொள்வது முண்டேனும் இவை தாம் கூறியவற்றுள் அடங்கலின் இந்நூலாசிரியர் வேறு விதந்திலர்.

52. குணிதம்—அளவு.

53. முத்தினுஞ் சிறந்தது பத்திராக்கமணி என்பது இலிங்க புராணம்.

54. பசை—இலாபம்.

56. போகமாதி எட்டையும் முறையாற் சிந்தனை செய்வார் இந்திர திக்காதியினை நோக்கியிருந்து செபிக்க என இயையும்.

58–59 யாம் சூசனத்திற் குறிப்பது போலன்றி இவ்வாசிரியர் தனித் தனி விதப்பதுபோல விதந்த நூல்கள் கிட்டாமையின் இவ்விரு செய்யுட்களும் வழுக்களையாது கிடைத்த பிரதியிலிருந்தவாறே அச்சிடப்பட்டன.

62. சூக்குமமான இழை இருபத்தேழு உத்தமம்; இருபத்தொன்று மத்திமம்; பதினைந்து அதமம் என்பது நூற்றுணிபு. ஆகலின் மணிகளது துவாரம் கொள்ளாவழி மத்திம அதமங்களைக் கொள்ளல் வேண்டும்.

65 மந்தத்தை உபாஞ்சு எனவும் ஒலியைவாசகம் எனவும் வழங்குவர்.

67. அட்டகன்மம்—மோகனம், உச்சாடனம், ஸ்தம்பனம். மாரணம், ஆகருடனம், வசியம், உன்மாதனம், வித்துவேஷணம் என்பனவாம். குத்திரம்—வஞ்சிக்கும் இழிதொழில்கள்; க்ஷுத்திரம் என்னும் வடமொழித்திரிபு.

69. அங்குட்டமும் மத்திமையும் ஒலிக்கும், அங்குட்டமும் தர்ச்சனியும் மந்தத்திற்கும், கொள்ளுதலும் சிலநூற்றுணிபு.

70. நம்பு—விருப்பம்.

71. புலையராதியரைக் காண்டலாதிய தோஷம் அணுகின் மும்முறை ஆசமனம் செய்து. நியாசம் புரிந்து சூரியனையும் அக்கினியையும் நோக்குவதுமன்றிப் பிராணுயாமத்தோடு சிவத்தியானமும் செய்தல் வேண்டும் என்பது வாயு சங்கிதை.

73, இயற்றினுல் மந்திரம் ஆம் என இயையும் இயற்றல் மணிகளைத்தள்ளுதல்.

77. உள்—உள்ளுக என்னும் பகுதி. அகோர மூர்த்திதானை உண்ணயந்து அகோரத்தைச் செபிக்க எனலும் ஆம். இப்பொருட்கண் நாட்டி என்பதனை முன்னிலை வினை முற்றுகவேனும், வியங்கோண் முற்றுகவேனும் கொள்க. வியங்கோள் இகர வீறு பெறுதல் "யாங்காண வகலங் காட்டி' என்பதன் உரையானும் உணர்க. (சீவக—கோவிந்—58 செ)

83. இவற்றை யெல்லாம்,என்னும் சொல்லாற்றலால் மற்றை வேணுவாசன முதலியவுங் கொள்க. வேணுவாசனம் தரித்திரம், திரணுசனம் கீர்த்திநாசம், பல்லவாசனம் சித்தமயக்கம், வஸ்திராசனங்களுள் கரிய வஸ்திராசனம் அபிசாரக்கிரியை, சிவந்த வஸ்திராசனம் வசியாதிக்கிரியை, வெள்ளை வஸ்திராசனம் சாந்தியாதிவிதி, மற்றை வஸ்திராசனம் வியாதி நிவர்த்தி, சித்திர கம்பளாசனம் தர்மார்த்த சித்திகள் அளிக்கும் என்பதும் நூற்றுணிபே.

85. வலத்தொடையுள் இடப்புறங்காலை வைப்பதும் வீராதனமேயாம். இதனை "அன்றியே வீரா தனமும் பாங்காமிடக்கால், தென்தொடைமேல் ஒன்றச் செறி" என்னும் சைவ சமய நெறித் திருக்குறளானு முணர்க. பதுமாசனமாவது—உள்ளங்கால்கள் மேற்றேன்ற இரண்டு புறங்கால்களையும் இருதொடைமீது மாறி வைப்பது. குதிகளைப் பீசத்திற்குக் கிழாக்கி

இருகைகளால் இருகாற் பெருவிரல்களைப் பிடித்திருப்பதும். இரு கைகளையும் சம்புடமாகச் செய்து மடியில் வைப்பதும் பதுமாசனம் எனப்படினும் செபகாலத்திற் கொள்வது முந்தியதையே என்க.

88. உத்தர திசையை நோக்கும் வாமதேவத்தை உத்தரமென்றார். பிசைதல்—ஈண்டு அலம்பிச் சுத்தம் செய்தல்.

91. மேல்—சுவர்க்காதி பதங்கள்.

92. தாங்கின் ஆயிரங்கோடிமடங்கு பலம் எனக் கொள்க.

94. நாய்க்கடுவான்—சண்டாளன் பிராமணியுடனேகூடிய வழிப்பிறந்தவன்.

101. ஊன் என்றது ஊனாலாகிய உடலை.

## சோமவாரகற்பம்

1. பொல்லார்—பொல்லாப் பிள்ளையார்; பொள்ளார் என்பது ளளஒற்றுமை பற்றிப் பொல்லார் என்றாயிற்று. உளியால் செய்யப் படாதவர் என்பதாம். எனவே, சுயம்பு மூர்த்தி என்றபடி,

20. வாழை, பலா, மா என்னும் முப்பழங்களையும் ரசபஞ்சாமிர்தத்துடன் கூட்டி ஆட்டுவதுமுண்டு. எலுமிச்சை. நார்த்தை, தமரத்தை, குளஞ்சி, மாதுளை இவற்றைத் தனித்தனி ஆட்டுவதே விதி.இவை ஐங்கனி ஆம்.

45. உயிர்களின் மும்மல நிவிர்த்திப் பொருட்டு ஐந்தொழில் இயற்றுபவன்.

61. பி—ம் சாதகதமந் தனக்கு.

113. குண்டத்தில்— (பி—ம்)

155. அனுபாஷணம்—சொல்லிவந்ததை அனுசரித்து மற்றொன்றைச் சொல்லுதல்.

170. கோதி—கோதுமை.

178. சிரோதண்டியர்—சிரசில் தண்டம் வைக்கப்பட்டவர்.

185. அதன்பின் முன் நிவேதிக்கப்பட்டுள்ள பொருள்களை அருந்துக என்பது.

199. உபராகம்—கிரகணம்.

202. பாத்திரமாவார்—பாவத்தினின்று மெடுத்துப் பரம பதத்தினிலை பெறுவிப்பர். பா—பாவம்; திரம்—அதினெடுத்து நிலை, பெறுவித்தல். பதி—க்ஷேத்திரம்.

205. கிங்கரர்—ஏவலர்.

212 கண்டன்—கண்டித்தலையுடைய தலைவன்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# 10. பதிபசுபாசப்பனுவல்.

---

சிதம்பரம்—கண்கட்டி

ஸ்ரீ மறைஞானசம்பந்தபண்டாரம்.

10

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதிபசுபாசப்பனுவல்.

## சிறப்புப்பாயிரம்.

காரூர் பொழிலும் தேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமும்
மாதவர் கூட்டமும் மீதுறை தில்லையில்
கனக சபையில் பனக முனிவனும்
போதம் மிகுத்த புலிக்கால் முனிவனும்
மாதவ இரணிய வருமனும் இறைஞ்சத்
திருமால் அயனிந் திரனிமை யோரும்
அருமா மறையால் அடிபணிந் தேத்தப்
பானு கம்பர் பணிலமும் வாணன்
ஆன குடமுழ வாதியும் முழக்க
மாண்டகு மதுர வாய்மொழி யிடமாத்
தாண்டவம் புரிவோன் சரண கமலம்
புந்தியின் நாளும் சிந்தனை பண்ணி
அப்பதி தன்னில் அருங்குகை மடத்தில்
எப்பதி யோரும் ஏத்தவும் இருந்தோன்
இகமது தன்னில் சுகனையொப் பானோன்
வெண்ணையம் பதியில் மெய்கண்ட தேவன்
மண்ணிடை மீண்டும் வருதலொப் பானோன்
அருந்தமிழ் உணர்வால் அகத்திய முனியெனத்
திருந்துதொல் காப்பியம் சிவமயம் செய்தோன்
ஆசில் வடநூல் போச ராசன்

ஆதி கமலா லயமுதற் புராணம்
ஓது மதியாற் சூதனை யொப்போன்
மூவர் முதலா முதியவர் பாடல்
ஆவ லுடனே அடங்கலும் உணர்ந்தோன்
நவமிகு நூல்கள் நாலு விதத்துடன்
சிவதரு மோத்தரம் தமிழாற் செய்தோன்
ஆகம பண்டிதன் அருந்தவர் புகலும்
மோகமில் சாத்திரம் முழுவதும் உணர்ந்தோன்
நண்ணிய தவ மறை ஞானசம் பந்தன்
எண்ணிய முன்னூல் இயல்வழு வாமல்
அதிக சைவ அளவைமுன் காணப்
பதிபசு பாசப் பனுவல்செய் தனனே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

---

குறிப்பு :— இஃது இயற்றினர் பெயர் காணப்படவில்லை.

# பதிபசுபாசப்பனுவல்.

## நூல்.

### பாயிரம்.

மலையான் மகள்பெற்ற வாரணத்தை வாழ்த்த
ஒலையாம்வீ டேனையமுன் றும். (1)

ஸ்ரீதல்வன் சிவனுயிர்க்க ஞதிமல முத்தன்
பதமலரென் சென்னியில்வைப் பாம். (2)

பெற்றூளைச் சிற்றுயிரைப் பேருயிரின் நீங்காளைப்
பொற்றுளிற் சூட்டுவநாட் போது. (3)

இந்த இருவர் புதல்வர் இணையடியும்
நந்திபத மும்பணிவாம் நாம். (4)

அநாதிமல முத்தனருள் ஆகமமும் தந்த
வநாசிரமா தாள்வணங்கு வாம். (5)

அமலனைக்கண் டாலவனத் தாட்டுவித்த வம்மை
கமலமலர்த் தாடொழுமெங் கை. (6)

என்பினைப்பெண் ணாக்குமியற் சம்பந்தன் ஏழிசைப்பாட்
டென்பிறப்பும் தீர்த்தளிக்கும் இன்பு. (7)

வாக்கியலால் வன்கதவை மாமறைக்காட் டில்திறந்த
வாக்கிறைவன் பாதநினை வாம். (8)

மோகநா மற்றேம் மொழிந்துனியும் வெள்ளானைப்
பாகனு ரூரன் பதம். (9)

திருவாத வூரர் திருவாக் கடியும்
ஒருவாதெம் வாயினுச்சி யும். (10)

நெஞ்சினுநீங் காதெமக்கு நிற்கும் அரதத்தன்
கஞ்சனூர் ஆள்வான் கழல். (11)

மதுரகவி மாளிகைத்தே வன்முதலோர் பாதப்
புதுமலரெம் சென்னியில்வைப் போம். (12)

வேதகனை வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனெனும்
போதகனைப் போதமும்வைப் போம். (13)

மெய்கண்ட தேவன் உரைவிளக்கும் வித்தகர்தாள்
கைகொண் டருச்சிப்போம் காண். (14)

பாசமற வெம்முளமைப் பார்த்துபதே சித்தாண்ட
தேசிகர்தாள் வைப்பாம் சிரத்து. (15)

வாழ்க மறையவரும் வானவரும் ஆனினமும்
வீழ்கபுனல் வாழ்கமுறை வேந்து. (16)

வாழ்க சிவாகமமும் வல்லார்கள் எல்லாரும்
சூழ்கசிவன் என்றுரைக்கும் சொல். (17)

ஊமன் தொழிலும் பொருளுணர்த்தல் ஓர்ந்துரைப்பாம்
யாமிறைவன் நூற்பயனை ஈங்கு. (18)

தொகுத்துப் பதிபசுபா சம்விளங்கச் சொல்வாம்
மதித்தமலன் வாக்கா கமம். (19)

வினைவினர் வேதமுத லிந்நூலின் குற்றம்
கனைவரெமக் குப்பரிந்து காண். (20)

பாயிரம் முற்றிற்று.

ஆகக் குறள் வெண்பா—**20.**

# பதிபசுபாசப்பனுவல்.

## முதலாவது பிரமாணவியல்.

சொல்வாம் பிரமாண மேயஞ் சுருதியும்சொல்
நன்மிதி மாதிருவு நாடு. (1)

சமீலன்சிற் சத்திதிரி வையமறின் மானம்
அமலனணுப் பாசமுமே யம். (2)

மிதிமான முன்பெற்ற மேயம்பின் பெற்ற
மதிமான மாதிருவான் மா. (3)

ஒன்றனை மற் றொன்றென் றுணர்கை திரிவையம்
ஒன்றினிரட் டுற்ற வுணர்வு. (4)

அனுபூத வாதனையான் ஆகும் மிருதி
அதுதானும் அல்லவிமா னம். (5)

உன்முகமா னங்கரணத் தோடுயிரம் மானத்தோ
டுன்முகமாய் வேறற் றுறும். (6)

காண்டலனு மானமுரை யொப்பொழிவ பாவமுமென்
றீண்டிருமூன் றுமான மெண். (7)

அந்தக் கரணம் புறக்கரணம் என்றிவற்றைப்
பந்தித் திலங்குமிவை பார். (8)

அவ்வியாத்தி தோடமிலை யத்தியக்க மாதியெலாம்
இவ்விலக்க ணம்பெறலா லே. (9)

அதிவியாத்தி யில்லைப் பதிபசுபா சார்த்தத்
திதுமீண் டிடுதலினா லே. (10)

அசம்பவமு மல்லவிமா னத்தறியப் பட்டே
துயங்கினர்மா னத்துண்டோ சொல். (11)

சிவமானம் சைவநூல் செப்புயிர்சிற் சத்தி
அவமானம் மற்றையமா னம். (12)

மானம் பிரமிதிக்குச் சாதனமென் றேமதித்தார்க்
கூனமுரைத் தீண்டுணர்த்து வோம். (13)

தீபாதி யும்மிதியைச் செய்யும் அவைமெய்யே
தீபாதி மானமோ செப்பு. (14)

இந்திரியம் அந்தக் கரணம் இவையுமல
வந்திடும்தோ டம்காட்டு வாம். (15)

கண்ணுருவம் காணும் அதன்விடயம் கந்தமுமன்
றுண்மனம்பற் றும் துணியு மோ. (16)

அத்தமுரு மூன்றினையும் தானிவற்ருல் ஆய்தலினுல்
சிற்சத்தி மானமெனத் தேறு. (17)

மறைந்துமலத் திற்கரணம் வாய்த்திடலும் அத்தம்
அறிந்திடுங்கா லங்காண்ட லாம். (18)

அவ்விகற்பம் சவ்விகற்பம் என்றிரண்டாம் அக்காட்சி
இவ்விகற்பம் காட்டுவம்பார் ஈண்டு. (19)

அவ்விகற்பம் அத்தமுள தென்றறிகை பின்பறிகை
சவ்விகற்பம் நாமாதி சார்ந்து. (20)

இந்திரியம் மானதமே யின்பெழுவாய் யோகமுமென்
றிந்தவிதம் ஈரிரண்டுண் டீண்டு. (21)

அவ்விகற்பம் இந்திரியக் காட்சியென ஆய்ந்தறியாய்
சவ்விகற்பம் மானதமே தான். (22)

வேதனைதான் இன்பத்துன் பத்தின் விளக்கமதன்
சாதனமே வித்தையது தான். (23)

ஒடுங்கப் புலன்கள் மலமும் ஒதுங்க
அடங்கலும்தோன் றும்யோகத் தால். (24)

இந்திரியம் அத்தத் தீணங்கும் பொழுதாறு
பந்தமுறும் பாரறிவிப் பாம். (25)

இந்திரியம் அத்தத் திணங்குதலே சையோகம்
அந்தப் பொருளுண்மை யாம். (26)

சாதிகுணம் தன்னிற்சை யோகசம வாயமாம்
போதமுளார் தாங்காணும் போது. (27)

சையுத்த வேத சமவாய சம்பந்தம்
எய்தும் குணத்துவத்தி லே. (28)

சத்தம் சமவேதத் தாலே செவிப்புலத்துக்
கத்தமாம் என்றே அறி. (29)

சத்தத்திற் சாமா னியத்தைத் தருமதனில்
வைத்தசம வேதசம வாய். (30)

தவாதசம வாயசம் பந்தம் தரும்காண்
அபாவ விசேடணத்து வம். (31)

ஏதுவினு லேதுமான் தன்னுயிர்க் கெண்ணுவிக்கும்
போதமனு மானமதன் பூண். (32)

அவ்விரண்டின் சம்பந்தம் காட்சியினுல் முன்னறிந்தே
இவ்வனுமா னந்தோன் றிடும். (33)

சாத்தியமில் லாவிடத்துச் சாதனமும் இல்லையெனப்
பார்க்கவெதி ரேகியிரு பால். (34)

இந்தவனு மானம் எணிற்றிருட்டா திட்டமெனும்
இந்தவிதப் பட்டிரண்டாம் ஈங்கு. (35)

புறக்கரணத் தந்தம் திருட்டம் பொறியின்
அகக்கரணத் தந்தமதிட் டம். (36)

சாமா னியத்தும் விசேடத்தும் சார்ந்திடநான்
காமோ ரிரண்டுமறி ஆய்ந்து. (37)

தன்னனுமா னம்பார்வாய்த் தான்கேட்டல் என்றிரண்டாம்
இன்னவிரண் டும்மறிவிப் போம். (38)

கண்டுபுகை யாதி யனலா வியைக்கருதிக்
கொண்டிடுதன் முந்தியதா கும். (39)

மற்றையனு மானமல மோசகனே தும்மேதுப்
பெற்றிலங்கும் போதமெனப் பேணு. (40)

பக்கமுதன் மூன்றுமுறுப் பைந்தும் பகர்வாம்
தக்கோர் பிறர்தெளியத் தாம். (41)

பக்கம் பொருட்கிடமுன் பார்த்த விடம்சபக்கம்
மிக்கவிடம் மீளுமிட மே. (42)

உண்டென்று பக்கத் துணர்த்தும் பொருளேதுக்
கண்டுரைப்ப மோர்ப்பிசைவும் காண். (43)

அன்னுவயி மற்றைவெதி ரேகி யவையிரண்டும்
என்னவிதம் மூன்ருகும் ஏது. (44)

காரியவே துக்கா ரணவேதுத் தன்மமுமென்
றேருறமூன் ருகுமுறை யெண். (45)

உரையினனு மானத்து முண்டனுமா னங்கள்
விரியுமினும் பாரிவ் விதம். (46)

ஐந்துருவுண் டன்னு வயவெதிரே கிக்கயலுக்
கொந்தொந்து குன்றுமுறை யுற்று. (47)

பக்க சபக்கத்திற் பற்றல் விடல்விபக்கம்
மற்ருென்றின் வாதையிலா மை. (48)

அசற்பிரதி பக்கமுமென் றைந்துருவும் ஆய்க
இசைப்பாம் எதிரிவற்றுக் கெண். (49)

அவமான ஏதுக்கள் ஐந்துண் டசித்த
முதலிவற்றை எல்லா முனி. (50)

பக்கத் தபாவம் சித்த விபரீத
பக்கத்து மாம்விருத்தம் பார். (51)

அசித்தம் விசேடணத்தும் ஆகில் அதுவும்
நிசித்தம் எனவே நினை. (52)

அனைகாந் திகம்சபக்கத் தாற்றுமுத லாகும்
பினையொன்று மூன்றும் பெறும். (53)

மற்றையொரு சாதனத்தின் வாய்க்கப் பொருளதனை
அற்றதனைக் காந்திகம்வீ றற்று. (54)

காலாத்தி யாபதிட்டம் காட்சிமுதல் மூன்றினுக்கும்
ஏலாப் பொருட்கிணங்கும் ஏது. (55)

சாத்தியமும் சாதனமும் தம்மில்விப ரீதமறச்
சாத்தியமில் லாதசபக் கம். (56)

காணசமஞ் சற்பிரதி பக்க மெனக்காண்க
வாணலவிவ் வைந்தும் வரம். (57)

அற்றிடினே இந்த அவாவிதம் ஓரைந்தும்
ஊற்றிடுமைந் தென்னுமுரு வோர். (58)

நேரியவும் தூரியவும் நேருநிம லேசனருள்
ஆரியத்தின் போதமுறை யாம். (59)

இல்லான் அனுதிமலம் ஈசனறிந் தேயிசைப்பன்
எல்லாம் இருந்தபடி யே. (60)

அவனமலன் காட்சியனு மானப் பொருளும்
சிவன்றனிய லாற்றெருட்டும் தேசு. (61)

கணித்தது மந்திரத்தும் காணக் கசடின்மை
எணுகஇவை போன்மற் றெலாம். (62)

கண்ணன் கருமுகில்போல் வண்ணனெனக் கேட்டவனைக்
கண்ணுமுணர் வொப்பெனவே காண். (63)

நின்மலன்சொன் மேலெனலும் நீசம் சமலரியல்
என்னும் துணிவொழிபென் றெண். (64)

ஒன்றனைமற் றென்றென் றெருவிப்பின் உண்மையினோ
டொன்றன பாவமென ஓர். (65)

ஆகுபெய ரிப்பெயர பாவத் துணர்ச்சிப்பின்
ஆதலினால் உண்மை அடைந்து. (66)

இன்னுமியல் புண்மைபொருள் ஐதிக மென்றியலுட்
பன்னுதலு முன்னடக்கிப் பார். (67)

உரைப்பாரும் இந்த இயலுரைப்பிப் பாரும்
வரைப்பாரும் பெற்றுர் வரம். (68)

முதலாவது பிரமாணவியல் முற்றிற்று.

ஆகக் குறள் வெண்பா — **88.**

---

## *இரண்டாவது பதிசாதன இயல்.*

உலகம் உதித்து நிலைபெற் ெறாடுங்கும்
மலமிலனுல் என்றே மதி. (1)

காரியத்தால் இவ்வுலகம் காட்டுமிறை யைக்காந்தம்
பாரிரும்பைத் தானியக்கும் பண்பு. (2)

பெண்ணுண் அலிமுதலாற் காரியத்தைப் பெற்றியை
எண்ணுவர்தேர் ஆதியும்கண் டீண்டு. (3)

அன்னிய தீவிற காதியினை யாக்கினரை
உன்னுவர்சா மானியத்தை ஓர்ந்து. (4)

கூளியினை மாந்தர் விகாரத்தி னுற்குறிப்பர்
கூளியினை முன்கண்டோ கூறு. (5)

ஆகம் சடம்காண் அணுவறியா திவ்விரண்டின்
யோகம் சிவனுலென் றோர். (6)

பிறப்பன் இறப்பன் பிரானல்லன் மாலும்
பிறப்பிறப்பில் லானெம் பிரான். (7)

அயனெழுவா யாக்கமலன் சத்திபதிந் தாகும்
வியன்வினையார்க் கும்விமலன் வேந்து. (8)

அனாதியம லன்காண் அவனாதி முத்தன்
உனாதியன வத்தையுறு மோர். (9)

படைப்புநிலை யிறுதிரோ பாவம் பரிவென்
றடுத்தவைந்தும் செய்யுமவன் ஆர்ந்து. (10)

அருக்கனொளி போலமல னைப்பிரியாச் சத்தி
பெருக்குமுல கைச்சுருக்கும் பின். (11)

வெண்ணெய் மெழுகுருக்கும் வெய்யிலுலர்த் தும்பசுங்கா
அண்ணலொளிக் கில்லைவிகா ரம். (12)

எல்லாம் அறியும் இறைவன் அவனமலன்
எல்லாம் இயற்றுதலா லே. (13)

ஆக்கும் அறிவுடையார் ஆகுவரே காரியத்தை
ஆக்குவரோ மற்றையராக் கார். (14)

எல்லாம் இயற்றும் இறைவன் எனிற்சபக்கத்
தில்லையிறை யன்னுவய மென். (15)

காட்சி விருத்தமுமுண் டென்னல் கலையிரும
லாட்சியர்க்கு முண்டறிவெங் ஙன். (16)

அமலன் பரமபதி யாக்கை விளக்க
அவனு லணுகபதி யாம். (17)

ஆக்கையிலை ஆக்கையினை யூருமுயிர்க் காக்கையுமற்
ருக்குமெலாம் நின்மலனெம் மான். (18)

ஆதலினுல் எல்லா வினைக்கும் பதிஅமலன்
வாதையிலைக் காணனுவ யத்து. (19)

அன்னுவயத் தாலே அவன்கருத்தா என்றறிக
பெண்முதலாற் காரியத்தைப் பெற்று. (20)

ஆக்கையுமில் லானென் றறிகவெதி ரேகத்தால்
நோக்கிமல மூலமிலா மல். (21)

அன்னு வயவெதிரே கத்தால் அவனறிவை
உன்னுகவே துக்கருத்தா வுற்று. (22)

ஆக்கை யுடைய அதிகாரி யர்க்கெல்லாம்
ஆக்கையுமில் லான்பதியா வான். (23)

மூன்படைப்பன் ஆக்கையிலான் மூலனுயிர் கட்கவனல்
பின்படைப்பார் ஆக்கையும்பெற் ருர். (24)

தானே உலகம் தழைத்துற் றெடுங்குமெனில்
தானேதோன் ருதுகடந் தான். (25)

அப்புருடன் சன்னிதியில் தோன்றி அடங்குமெனில்
அப்பலம்வீ ணேகருமத் தாம். (26)

வேண்டுவா ரில்லை விலங்கொருவன் காலிலது
பூண்டுறிற் பூண்பித்தா னுண்டு. (27)

பூட்டுவித்தான் தாள்பணியப் போம்விலங்கு புன்குரம்பை
கூட்டுவித்தான் தாள்பணிபோம் கூடு. (28)

தருமா தருமம் சகத்தினைத் தாராது
தருமா தருமம் சடம். (29)

வேலைதரு மோகூலி வேலைவிதம் கண்டிசைந்த
கூலிதரு வான்போலெங் கோ. (30)

கடாகாயம் போலும் கடவுளுடல் தோறும்
அடாதுபலம் என்பதடா தாம். (31)

உறுவ னனிமை யொருவ னொருகாலத்
துறுவனொரு வன்துயர்வே றோர். (32)

நரகசுவர்க் கம்பேதம் நண்ணுவார் தாமும்
ஒருவனெலாம் என்கையொழி யோர்ந்து. (33)

அமலன் சிவன்சமலர்க் கன்னியன்நீங் கானல்
சமலர்க் கனனியன் தான். (34)

உடலொலியின் மூல வொலியுறுதல் போலக்
கடவுளுயிர் உள்ளுறையும் காண். (35)

விண்மண் ணிறுவாய்க்கும் நீங்கா வியாபகமே
விண்ணேமண் ணுதி விளம்பு. (36)

அத்துவிதம் என்றசொலுக் கொன்றென் றலப்பொருள்வே
றற்றதென வேமலேவின் ரும். (37)

வேதா கமம்தம்மில் வேறல்ல வேறென்னும்
வாதம் மயலான் வரும். (38)

சத்தினிபா தர்க்கமலன் சாற்றினுன் ஆகமநூல்
மற்றையர்க்குக் காணவேத வாக்கு. (39)

புன்சமய நூலும் சிலராற் புகல்வித்தான்
தன்கருணை யாலமலன் தான். (40)

ஒற்றைவரி மற்றைவரி எல்லாம் ஒருவனே
கற்பிக்கக் கண்டேமே காண். (41)

புன்சமயம் சொன்ன புலவர் புரத்தடைவர்
தம்பருவ நூலுணர்ந்தார் தாம். (42)

புத்திதத்து வத்தாம் புவனம் தனிற்புகுவார்
புத்தரவர் போகம் புரிந்து. (43)

கண்ணுவரே னையா யிகர்தாமும் புத்திதனில்
புண்ணியர்துய்ப் பாரதன்போ கம். (44)

அடைவர் குணதத் துவத்தை அருகர்
இடரிலர்துய்ப் பாரின் பிருந்து. (45)

பிரகிருதி யைப்பாஞ்ச ராத்திரியார் பெற்றே
ஒருவவிடார் வாழ்வாரின் புற்று. (46)

திளைப்பார் புருடதத்து வம்தன்னில் செல்வம்
களிப்பார்கள் வேதாந்தி கள். (47)

சாங்கியரும் சார்ந்துதிளைப் பார்புருட தத்துவத்தில்
பாங்கான போகம் பல. (48)

அற்றம் அருமறைக்கும் கூறில் அவர்நிரையம்
பற்றிப்பின் தம்பலம்துய்ப் பார். (49)

அமலன் உரையது மேற்பிரண வாதி
சமலருரை தானதனில் தாழ்வு. (50)

அவருரையின் மண்டலர் ஆதியர்சொற் ருழும்
அவருரையிற் ருழ்வரிசொல் லாம். (51)

அயனமரர் சாகமு லாசனர்சாம் சித்தர்
இவருரையும் முன்முறையின் எண். (52)

தேர்க பிராகிருதர் செஞ்சொல்லும் முன்முறையின்
ஓர்கவயி ஞுயிகர்சொல் லும். (53)

விண்ணுலகம் தங்கி வியப்புடைய நல்வினையால்
மண்ணுலகின் மானிடராய் வந்து. (54)

மறவாதார் சாம்சித்தி கர்மறந்து பெற்ருர்
பெறுவர் பிராகிருதப் பேர். (55)

ஆய்ந்துவே தாதியெலாம் ஆரியனுல் ஐயமும்
காய்ந்தார் வயினு யிகர். (56)

ஆக்கையிலான் வாக்குமிலான் ஆகமத்தை வேதத்தை
ஆக்குவனோ வாக்கான் எனல். (57)

ஆக்கையுமற் றைந்தொழிலும் ஆக்குமுறை முன்னறைந்தாம்
ஆக்குவனூ லும்மவைபோ லாங்கு. (58)

அறிவிப்பன் வேறற் றமலனுயிர்க் கென்னில்
அறிவனுயிர்த் துன்புமவன் ஆங்கு. (59)

அறியானேல் எல்லாம் அறியானித் தோடம்
பிறியவெனக் குத்தரத்தைப் பேசு. (60)

வினைக்கிசைய இன்பதுன் பத்தை விளைப்பன்
வினையவனுக் குண்டோ விளம்பு. (61)

காட்டுகின்ற வாமற்குண் டோவுன் கனுமயக்கம்
மீட்டுனக்கும் பொய்யாய் விடும். (62)

காட்டுவார்க் குண்டோ களிப்பிந் திரசாலத்
தாட்டுவார்க் குந்தோற்கூத் தால். (63)

ஊகம் அநுபவமென் ருேரிரண்டாம் காணுணர்ச்சி
ஊக வனுக்குயிர்க்கண் உண்டு. (64)

அநுபவந்தன் ஞனந்த சத்தி யுயிர்கட்
கநுபவம்தம் சத்திமல மற்று. (65)

ஆதலினுல் ஊகத் தனுவின் பலமறிவன்
வாதையிலே என்றே மதி. (66)

ஊகம்கீழ் மேலுமுயிர்க் குண்டொப்பி னும்வினையால்
போகமாம் புந்திப் புலம். (67)

ஒத்தபொரு ளிற்கீழும் உண்டூகம் மென்மேலும்
புத்திக் கிரையம் புலம். (68)

கண்டுலகின் உள்ள கடமையதி காரியர்கைக்
கொண்டுவரக் கைக்கொள்ளும் கோ. (69)

தந்தை புதல்வன் சலிக்கிற் சலிப்பனே
சந்துட் டனுட்டிக்கும் தான். (70)

கீழூகம் புத்திக்கே யாகக் கெழுவரிய
மேலூகம் எங்ஙன் விளம்பு. (71)

தீண்டாதே மேலூகம் செல்லும்காண் புத்திக்குத்
தீண்டியும்கீழ் ஊகம் செலும். (72)

அவகரணம் கீழூகம் ஆம்பொழுது புத்தி
சிவகரணம் மேலூகம் சென்று. (73)

பஞ்சாசற் பாவகமும் புந்திக்குப் பாங்கவற்றை
எஞ்சாதே ஆகமத்துள் எண். (74)

உயிர்க்குயிர் மேலாம் உயிரதன் கீழாம்
உயிர்க்கீழ்மா யைகருவி யும். (75)

அமலனது சன்னிதியில் ஆர்ச்சித்த கன்மம்
சமலருறு வார்தத்து வத்து. (76)

ஈசன் விளையாட் டிவையெனலும் ஆமுயிர்க்குப்
பாசம் அறுக்கை பலம். (77)

பண்டிதர்கள் இன்பத்துன் பத்தாலும் பாற்றுவர்நோய்
அண்டனுமிவ் வாறென் றறி. (78)

உதவி இரவி உலகுக் கிரவிக்
குதவி செயுமோ உலகு. (79)

மெல்லமெல எல்லாரும் முத்தரா வார்விமலத்
தில்லை தொழில்பின் எனல். (80)

அலகிலர்சேர்ந் தாரமலன் தாள்நிழல்சேர் வாரும்
உலவாக் கிழிப்பொருட்போல் உண்டு. (81)

ஆதலினால் ஐந்தொழிலும் உண்டென்றும் சின்மயன்முன்
சேதமிலை என்றே தெளி. (82)

எண்ணுவார் இந்த இயலின் பொருண்முறையால்
அண்ணியார் ஈசன் அடிக்கு. (83

இரண்டாவது பதிசாதன இயல் முற்றிற்று.

ஆகக் குறள் வெண்பா—**171**

---

## மூன்றாவது பசுசாதன இயல்.

ஆகமியங் காதுசடம் தானே அதுதனையூர்
பாகன் பசுப்பலம்துய்ப் பான். (1)

யாதுண்டாய் யாதின்றாய் உண்டில்லைச் சேட்டையுடற்
காதியான் மாவென் றறி. (2)

அத்தியக்கம் காட்சியது தன்னாலூன் அன்னியமாம்
புத்திபணாய் வாஞ்சையினைப் போட்டு. (3)

படம்போல் அறியப் படும்பரிண மிக்கும்
சடமுடலான் மாவறியான் தான். (4)

ஆக்கையுயி ரோவன் றுறக்கத் தறியாது
காக்கையருந் தும்பொழுது காண். (5)

மறந்தாய் நனவைக் கனவின் மதிமுன்
இறந்தே பிறந்தாய் இழந்து. (6)

அடங்கி அதீதத் தறிவுதிக்கும் ஆங்கே
ஒடுங்கிப் பிறப்பினுதிக் கும். (7)

வளியுமுயி ரன்றுடலின்........... துறக்கத்
தொளியாதி யையுணரு மோ. (8)

ஐந்து புலனுமுயி ராலறிய வேயடலால்
ஐந்துபுல னும்மலவான் மா. (9)

அந்தக் கரணமறி யப்படுத லாலுயிரால்
அந்தக் கரணமுயிர் அன்று. (10)

அந்தக் கரணம் அமைச்சரைப்போ லும்மரையன்
அந்தக் கரணமாள் வான். (11)

காட்டும் மலர்நிறத்தைக் காட்டும் படிகமுயிர்
காட்டும் கருவிநிறங் கள். (12)

கண்ணின் மனம்போற் கலந்திரண்டற் றேநிலவும்
எண்ணினுயிர் சேதனமென் றெண். (13)

உடன்மட் டுடலேக தேசியுயிர் என்னில்
கெடுமளவு பட்டுண்டோ கேடு. (14)

எங்கும் நிறையினுயிர் இந்தவுட லத்தணைந்து
தங்குதல்கீழ் மேலெனநீ சாற்று. (15)

இருட்டறையில் தீபம் இலங்கியவப் போதோ
பொருட்புணர்ச்சி கண்ணிற் புகல். (16)

உறுங்கரண பேதத்தி னலே உயிர்தான்
உறுமவத்தை யைந்துமலத் துற்று. (17)

ஏழஞ்சும் ஐயைஞ்சும் மூன்றும் இரண்டொன்றும்
தாழுமுறை யிற்குளமுன் சார்ந்து. (18)

உரைத்த அவத்தை ஓரைந்தும்.........தண்டத்
துரைத்த கருவிமுறை ஓர். (19)

விடுவார் பிறப்பாங்கே மேலவத்தை ஐந்தும்
படுவார் குரவனுக்காட் பட்டு. (20)

ஆக்கையினும் உண்மனத்தும் புந்தியினும் ஆவியினும்
பார்க்கசிவன் நிற்கும் படி. (21)

வானடக்கல் போல்வளிமுன் மாதேவன் மன்னுயிர்முன்
தானடக்கல் காண்கையதீ தம். (22)

நனவுடலில் நம்பனையும் நாடல் மனமாதி
கனவாதி மேலவத்தைக் கண். (23)

ஒடுங்கா வியாபி உயிருடலி னுள்ளும்
ஒடுங்குமெங்ஙன் மாயையினும் ஓது. (24)

ஒடுங்கும் கருவி உபாதானத் தாவி
ஒடுங்கலுப சாரத் துரை. (25)

ஒடுங்கக் கருவி உணவுசெயல் ஆவிக்
கடங்கலிரு ளாற்கேவ லம். (26)

கூடக் கருவி குறிப்புற் றியானெனதென்
ருடுமது வேசகல மாம். (27)

ஊனமற வெல்லா வுயிர்க்குமுயிர் தானுணர்ந்து
தானதுவாய் இன்புறல்சுத் தம். (28)

உயிர்க்குயிர் ஒன்றே உயிர்த்திறம் மூன்றே
உயிர்நோயோர் ஐந்தென் றுணர். (29)

அனுதியம லன்சுத்தன் சச்சிதா னந்தன்
எனுதி யுயிர்க்குயிரென் றெண். (30)

பெருநோயொன் றுள்ளார் பிரளயர் முன்னோர்
கருணையுள விஞ்ஞா கலர். (31)

மலம்கருமம் என்றிரண்டு மண்டலர் முன்னோர்
கலந்த பிலாயா கலர். (32)

சகலர் மலங்கரும மாயையும் சார்ந்தார்
...........சுராதியரெல் லாம். (33)

மலங்கரும மாயைமா யேயம் திரோதம்
விலங்குயிருக் கிவ்வைந்தும் வேறு. (34)

திரோதம்சிற் சத்தி சிறியர்க் கிவற்றால்
விரோதம்செய் தாக்கும்பின் வீடு. (35)

அன்னை கொதித்தடிக்க அல்லற் படுங்குழவி
பின்னவளால் ஆர்வம் பெறும். (36)

ஈசனது சத்திமலம் மூன்றினையும் மேவுதலால்
பாசமெனும் பேரதற்குப் பாங்கு. (37)

ஒத்த வினையின் மலமூல பாகமுறில்
சத்திபதி யும்கருணை சார்ந்து. (38)

சூத்தி பதியும் தமோமலபா கந்தன்னில்
ஒத்தவினை யில்லார்கண் ணும். (39)

தேசிகனை ஆவேசம் செய்தே சிவன்சகலர்
பாசமறுப் பானென்று பார். (40)

உயிர்க்குயிரை ஓரான் உடல்வெறுத்தான் உள்ளத்
துயக்கம் துடைப்பனோ சொல். (41)

உயிர்க்குயிரை ஓர்ந்தானும் ஊனுவரான் உள்ளத்
துயக்கம் துடைப்பனோ சொல். (42)

மெய்யே உடல்வெறுத்தார்க் குப்பாச வேரறுத்து
மெய்ஞ்ஞானி காட்டுவனுண் மை. (43)

இந்த இயலின் பொருளனைத்தும் எண்ணுவார்
பந்தமறச் சின்மயம்பார்ப் பார். (44)

மூன்றாவது பசுசாதன இயல் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**215.**

---

## நான்காவது பாசசாதக இயல்.

---

உயிர்க்குயிரா நின்ற உணர்வை ஒளித்து
மயக்குவது மூலமல மாசு. (1)

ஆக்கையினை யானென்பித் தாவிக் கமலனடி
நோக்குதலை நீக்குமல நோய். (2)

ஆசையினை ஆக்கி அராகத்தால் ஆருயிர்க்கு
மாசையருத் தும்தொன் மலம். (3)

இன்புறப் பெற்றோ மிவனைஎமக் கென்னகுறை
என்பிக் குமிருளீங் கு. (4)

கெடுத்தனன்கிட் டாரைக் கிளைதன்னை யானே
எடுத்தனனென் பிக்குமிருள் ஈடு. (5)

இந்த மயக்க உணர்வும் இழப்பிக்கும்
அந்தத்தின் அந்தவிருள் ஆர்ந்து. (6)

உயிர்க்குக் குணமன் றுயிர்ச்சத்தி போல
உயிர்க்கொடுங்கா தேநிற்கு மோ. (7)

செம்பிற் களிம்பறுமே தீண்டக் குளிகைசிவன்
அம்பொனடி தாக்கவறும் ஆசு. (8)

போக்குமோ மற்றொரு செம்பிற் களிம்புபோல்(?)
நீக்குவரோ நீங்கினர்நோய்........... (9)

ஆக்கை கருவி உலகங் கனுபவமும்
ஆக்குவிக்கும் கன்மமிரண் டாம். (10)

மூலமலம் போல அனுதி முளைக்கையால்
ஏலுமுட லாதியுமாம் ஈறு. (11)

முன்னைவினை யின்பலத்தைத் துய்க்குமள வின்முளைக்கும்
என்னதியான் என்னவினை ஈங்கு. (12)

செய்தமுறை யன்றிப் பரிபாகத் தாற்செறியும்
பைய வினையின் பலம். (13)

தூலமொடு சூக்கமதி சூக்கமு மென்னவினை
ஏலுமொரு மூன்றுதி ஈங்கு. (14)

ஆக்கையின்வாக் கின்னுளத்தி னுனவினை தூலமவை
ஆக்கும் சுவடதிசூக் கம். (15)

ஆகும்சூக் குமமந் தச்சுவடு தான்பாகம் (?)
ஆகும்கா லத்தமல ஞல். (16)

பாகவினை யாலாம் பலத்தினைத்துய்க் கும்பசுத்தான்
ஆகம் பரித்தமல ஞல். (17)

புண்ணியத்தாற் பாவத்தாற் புண்ணியபா வத்தாலும்
நண்ணுமுயிர் மேல்கீழ் நடு. (18)

புரியட் டகமே புகுந்தங்கங் குண்ண
உரியவுடல் தன்னைவிளைக் கும். (19)

வாய்ந்தமனம் புத்தியாங் காரந்தன் மாத்திரையும்
ஆய்ந்தபுரி யட்டகமென் ருர். (20)

துன்பம் சடந்தான் தொடராது நீதொடராய்
துன்புறுமா றென்னுய்ந்து சொல் (21)

இன்பத்துன் பத்தை இருவினையால் எய்துவிப்பன்
அன்பனுயிர்க் கன்னியனல் லான். (22)

புத்திகேத மாயதுதான் மாயையினென் றிப்பலநாள் (?)
ஒத்துதிக்கும் தொட்டவுட லுள். (23)

ஒன்றினு லொன்றழியா துறறபரி காரத்தாற்
குன்றும் குறித்தவினைக் கொத்து. (24)

சத்தி பதியும் தமோமலபா கம்முறினே
ஒத்தவினை யில்லார்கண் ணும். (25)

சத்திபதி யாது தமோமலபா கம்மறினே
ஒத்தவினை தன்னையொழிக் கும். (26)

உன்னதமுற் ருலவற்றின் ஒன்றதனை முன்னூட்டும்
அன்னியமல் லாதசத்தி யாய்ந்து. (27)

இப்பகுதி சிதைந்தது. ... ... (28)

மற்றையநூ னந்தன்னை மற்றையொரு காலத்தில்
துற்றுவிக்கும் என்றே துணி. (29)

அறமனைத்தும் ஒத்தால் அதன்மவிதத் தோடே
அறுமவையெல் லாம்சத்தி யால். (30)

தீர்ந்தான் வினையனைத்தும் சுத்தவித்தை யைச்சேர்ந்தே
ஆர்ந்திருப்பன் சத்தியரு ளால். (31)

சத்தி பதியும் தமோமலபா கம்முறினே
சுத்தனு வன்வினைதீர்ந் தோன். (32)

பெருமாமை மாயை பிரகிருதி யென்ன
ஒருமூன் றுபாதான முண்டு. (33)

ஏடுகள் சிதைந்தன. ... ... (34—56)

அழுகைமடி வேசம்ப வாதம் பகராம்
இழுதை யிவைமதத்தா மே. (57)

ஈகை யிலாமை யிரப்பார்க்கீ வார்தம்மைக்
காய்கையிவை தாமதத்தாம் காண். (58)

தன்னைமதிக் கும்பெரியோர் தம்மை யவமதிக்கும்
இன்னுமுள தாமதத்தா லே. (59)

புத்தியாங் காரத்தும் புக்கிந்தப் பேதங்கள்
முக்குணமும் செய்யும் முளைத்து. (60)

ஆக்கப் பலங்காலம் அந்தப் பலம்நியதி
தூக்கும் முறையில் துணிந்து. (61)

கலைமலத்தை நீக்க வுயிர்கருத்தா வாகும்
பலமூன்றும் துய்க்கும் படிக்கு. (62)

வித்தை யறிவை விளக்கவரா கங்காதல்
புத்தியினைத் துய்க்கும் புமான். (63)

சூக்குமைமுன் வாக்கினுல் தோன்றும் உயிர்க்கூகம்
ஆக்குவிப்பார் நாதமுத லார். (64)

ஐந்து பிரேரகமென் மற்றைந்தும் போசகங்கள்
ஐந்தின்கீழ்ப் போக்கியகாண் டம். (65)

சுத்தமைந்தும் ஏழும்சுத் தாசுத்தம் ஆம்சுத்தம்
பத்தும் பதினான்கும் பார். (66)

அன்றே இருவிதமாம் தத்துவங்கள் ஆருயிர்கட்
கொன்று கருவியுல கொன்று. (67)

கருவி தனித்தனியே காணுயிர்க்கட் கெல்லாம்
புரமுட லார்தங்கும் போது. (68)

தத்துவங்கள் ஆதிபிர வாகம்தன் மாதன்மம்
மற்றையவ ளுதியென்னும் வாக்கு. (69)

இந்த இயலின் பொருள்முழுதும் எண்ணுவார்
பந்தமறத் துய்ப்பாரின் பம். (70)

நான்காவது பாசசாதக இயல் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**285.**

குறிப்பு:— இந்த இயலின் 34—56 வரையிலுள்ள குறள் வெண்பாக்கள் சிதைந்தன. உருக்காண இயலாவண்ணம் சில சில சொற்களாகவும், தொடர்களாகவும் கிடைத்தலின் பதிக்கவில்லை. சுவடியுடையார் இப்பகுதியையேனும் குறித்தனுப்புவாராயின் பலர்க்கும் பயனுடைத்தாம். அடுத்த பதிப்பிலே நன்கு திருத்த முறும்.

## ஐந்தாவது பொதுவியல்.

காட்டுமுளத் தைக்காண கண்ணுளமும் காணது
காட்டும் அமலன் கழல். (1)

உணரப் படிற்சடமின் ரூரப் படாதேல்
உணரா துணரப் படும். (2)

மனமொடுங்க மூல மலமொதுங்க வாய்க்கும்
உனதுளது காண்பே ருயிர். (3)

செறியாது சித்தை அசித்ததனைச் சித்தும்
அறியும்கீழ் மேலுமணு வாய்ந்து. (4)

சித்துமசித் தும்செறிந்து தேருமுயிர் சித்துமல
சித்தசித்தென் றேநீ தெளி. (5)

மருவிற் கருவியுயிர் வாயா தமலம்
பிரியினவை துஞ்சல் பெறும். (6)

இரவியெழும் காலத்தில் தீபமென ஆகும்
கருவி சிவமுதிக்கும் கால். (7)

ஓர்வரே இந்த இயலின் பொருளுணர்ந்து
சேர்வார் பரம சிவம். (8)

ஐந்தாவது போதுவியல் முற்றிற்று.
ஆகக் குறள்வெண்பா—**29** .

---

## *ஆறாவது போதகவியல்.*

முற்றவத்தால் வந்தமலன் தேசிகனய் மூலமலப்
பற்றறுப்ப னேயவரைப் பார்த்து. (1)
எல்லாம் சிவமெனில்வீ டிச்சிப்பா ராரெங்கும்
இல்லா......னெல்லா னிறை. (?) (2)
பேரொளியைக் காணுப் பிறவிக் குருடன்தான்
பேரொளிபெற் ருன்போலப் பேறு. (3)
ஊனக்கண் பாசம் உணரா துயிர்க்குயிரை
ஞானக்கண் ணுலுன துள் நாடு. (4)
அவனிரண்டற் றெம்மையறி வித்தாட்டி மீட்கும்
சிவனென்பார் தீர்ந்தார் சிறை. (5)
முழுதும் புலனெடுங்க முத்தனலர்த் தாளைச்
சுழுனைவழிக் கண்டதன்கீழ்த் தூங்கு. (6)
சித்திர மென்னச் சிலையென்னச் செத்திருப்பார்
வித்தகன்தாள் கட்டுள் விடார். (7)
திதியினு தாரத்தைச் சேர்ந்துமலம் தீர்க்கப்
பதியுயிர்க்கு நாதாதி பாங்கு. (8)
இந்திகை தீவிகை எழிற்புவன மைந்திலங்கு
............நாதத்தி லாங்கு (?) (9)
நாத மொடுங்கிடு நாட்டீர் நவைசிறிதும்
போததின் மீளா புணர்ந்து. (?) (10)
அப்பொழுதே முத்தர் அமலன் விழிப்பட்டார்
எப்பொருளும் துஞ்சுமிரு ளின். (11)
ஒடுக்கத் துதிப்பின் விழியுற்ரு ருட்படைப்பா
திங்குஞ் சிலரே பாங்கு. (?) (12)
சகளசிவ னைத்திளைப்பர் சார்ந்தபர முத்தர்
நிகழ்காலம் தன்னிலெதிர் நின்று. (13)

திளைப்பார்தஞ் சித்தினலங் கின்பமுல கெல்லாம்
ஒளித்திடும்போ துள்ளா சொழிந்து. (14)

திளைப்பன் சிவன்பரா சத்தியைப்பற் றற்ருர்
திளைப்பா ரலர்சிவனை யும். (15)

படைப்பதும் செய்யாரே பற்றற்ரு ரீசன்
படைப்பாதி செய்யும் பரிந்து. (16)

ஆருறும் போகா வழியா முதலடங்கும்
ஆருறுக் கப்பாலா ஞர்க்கு. (17)

இருள்மலமும் போகா திருந்து மயக்கா
தரன்மிடற்றி னஞ்சம்போ லாம். (18)

எஞதிதொழி லைந்தும் இயற்ரு தியற்றும்
அஞதியம லன்சிவனே கன். (19)

நீங்கினர்முன் சொன்ன நிராதார யோகத்தைத்
தாங்குகவா தாரம் தனை. (20)

நெஞ்சத் தருச்சிநினை நெற்றிதனி லாகுதிசெய்
தஞ்செழுத்தா ஞபி யழல். (21)

எட்டங் குலவுயர மற்றுமா மிட்டநிறம்
அட்டகுண னைத்தரிசி யாங்கு, (22

ஆட்டிப்பா லாதியணி தாரகலத் தூரியலர் ?
சூட்டிக் கொடுதீப மும். (23)

நேயத்தாற் பாயசமுன் னெல்லாம் நிவேதம்செய்
வாயத்தாவற் சொன்மந்தி ரம். (?) (24)

அலலாக்கைக் கில்லை அருவருப்பு மில்லை
கொலையுமிலை யுட்பூசை கூடு. (25)

உள்ளேவல் செய்வானைக் காந்தன் மிகவுகப்பன்
உள்ளேசெய் பூசை யுகந்து. (26)

பாவனையிற் பட்ட கருடஞற் பாம்பொழியும்
பாவனைமெய் செய்யும் பலம். (27)

புறத்தும் சிவபூசை பூவாற் புரியாய்
அறத்தின் மலையிலக்கே யாம். (28)

முட்டாதே தொட்டான் முடிக்க சிவபூசை
விட்டான் நரகில் விழும். (29)

நெஞ்சத்து முன்னிக் கரத்தியற்றி நீண்டவடம்
அஞ்செழுத்தை வாக்கினுஞ்சொல் ஆய்ந்து. (30)

சிவஞ்சத்தி ஆன்மாத் திரோதம் திமிரம்
சிவமுதலேந் திற்சிந்தை செய். (31)

வாக்கினொலி மந்தவொலி மானதமென் றிம்மூன்றும்
ஆக்குங் காலசனிமுன் ஞம். (?) (32)

வாக்கொலியின் மந்தம் விசிட்டபலம் மானதந்தான்
ஆக்குமது தன்னிலதி கம். (33)

கண்டி விசிட்டம் கனிட்டம் குசைக்கிரந்தி
புண்டரிக முண்மணியும் பூண். (34)

மேலியற்றுய் போகம் வெறுத்தால் விரும்பினுல்
மாலையைக் கீழே மறி. (35)

முத்திவல நாடி மொழிசுழுனை முற்றிரண்டிற்
புத்திக் கிடையிற் புகல். (36)

சற்புத் திரனைச் சமைப்பாரும் சார்ந்திடு
கற்புடையாள் தோள்பிங் கலை. (37)

புத்திரனைக் காமுற் றவள்தோள் புணர்வாகா
வித்தகர லார்குழிவீழ் வார். (38)

கன்னிகையைத் தான்முற்கைப்பிட மக்கள்கடனும்
அன்னியந்தான் அன்னியமே யாம். (?) (39)

தாங்க மனைபுதல்வன் தாந்தமுதற் றுணிழலில்
தூங்குவர்காண் நீங்காத் துகள். (40)

தமக்கினிமை வஞ்சகரே தாந்தமுதற் சாரார்
தமக்கினியார் தம்முதற்சார்ந் தார். (41)

கண்ணுக் குளம்போல் உளத்தினுக்குக் காட்டுநயம்
எண்ணிவணங் கீசனுரு வீண்டு. (42)

போதகனைத் தேசிகனைப் புத்தியினும் வைத்தருச்சி
மாதவரைத் தாள்வணங்கி வாழ்த்து. (43)

பயில்வித்தார் பக்குவத்தில் நூல்படித்தாய்ந் தாரும்
பயில்வரே தம்முணர்வின் பம். (44)

ஆறுவது போதகவியல் முற்றிற்று.

ஆக இயல் ஆறுக்குக் குறள்வெண்பா—**337.**

பதிபசுபாசப்பனுவல் முற்றிற்று.

*திருச்சிற்றம்பலம்.*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 11. சங்கற்பநிராகரணம்.

---

சிதம்பரம்—கண்கட்டி

ஸ்ரீ மறைஞானபண்டாரம்.

உ

சிவமயம்.

## சிறப்புப்பாயிரம்.

நேரிசை வெண்பா.

நிரந்தவர்சங் கற்பம் நிராகரிக்கும் இந்நூல்
பரிந்துலகோர் உய்யப் பகர்ந்தான்—திருந்துமறை
ஓங்கி விளங்க உதித்தமணி ஓட்டினன்பேர்
தாங்கினனுய்ந் தாகமமுத் தன்.

ஆரியனால் ஐயம் திரிவுமற ஆராய்ந்த
சூரியரே இந்நூல் குறித்தறிவார்—தேரும்பா
வார்ந்தவர்தம் பாதத் தறிக அவலமலம்
தீர்ந்துவிடும் வாய்க்கும் சிவம்.

அயிக்கியவாதி முதல் சைவர் அந்தமான எட்டுப் பெயர் சங்கற்பங்களையும் நிராகரித்தவர் சைவ சித்தாந்தி எனக் கொள்க.

ஞானப்பிரகாசன் திருவடி வாழ்க.
மறைஞானசம்பந்தர் திருவடி வாழ்க.
சிவனடியார் தழைக.
என்று இவ்வாறு இந்நூல் இறுதியில் உள்ளது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# 11. சங்கற்பநிராகரணம்.

## காப்பு.

**செய்யவுரு வேழ விநாயகன் தாள் சிந்திப்பாம்
மையலற வாய்க்கநல்கும் வாக்கு.**

## பாயிரம்.

*பூமேலான் அமரர் போற்றமணி மன்றுடி
ஓமென்னென் உள்ளத்தும் உண்டு.* (1)

*செடச்செயலோ ரைந்தினையும் செய்யாதே செய்யும்
மடக்கொடிதாள் வைப்பாம் மனத்து.* (2)

*எநாயகனே என்ன இடரெல்லாம் கடியும்
விநாயகனைத் தாள்பணிவாம் வீழ்ந்து.* (3)

*என்னிருளை நீக்கும் இமையோர்க் கிடர்கடியும்
பன்னிருதோட் பாலன் பதம்.* (4)

*நாற்றமலர் சூட்டுவமே நந்திமா காளர்
ஏற்றினடி தன்னிலுமே யாம்.* (5)

*தந்தைதனைத் தாள்தடிந்த சண்டேசர் தாளிணையைச்
சிந்தனைசெய் வாம்பூசை செய்து.* (6)

*சனற்குமரன் ஆதி தபோதனர்க்கா ளானேம்
எனற்குவாம் முன்னியற்றி னேம்.* (7)

*பாட்டினுக்கு வித்தாம் பசுபதியை ஆலவனத்
தாட்டுவித்தாள் பாதங்களைப் பாம்.* (8)

ஈசனரு ளாலெரியிட் டேடெடுத்து வாதுவென்ற
பூசுரனைப் பாதநினைப் போம். (9)

வாக்கியலி னுலே மறைவனத்து வன்கதவை
நீக்கினன்தாள் நீங்காதென் னெஞ்சு. (10)

வீட்டியுயிர் முன்முதலை தான்விழுங்கும் 'பாலகனை
மீட்டவனைத் தாள்பணிவா மே. (11)

வேதா கமத்தின் விளைவை எனையாண்ட
பேதாய்என் முனைநினைப் பேம். (12)

கைதடிந்தும் கண்ணிடந்தும் கண்டமரிந் தும்பிறரே
உய்யவல்லார் தம்மைநினை வோம். (13)

சிந்தித்து மாளிகைந் தேவனெழு வாயரடி
வந்தித்தேம் காணேம்உள் மாசு. (14)

திருவெண்ணெ மாநகருள் மெய்கண்ட தேவன்
அருளியவாக் காலேதா மாசு. (15)

ஓதித்தான் மெய்கண்ட தேவன் உரையெமக்குப்
போதித்தார் பாதநினைப் போம். (16)

மழைபொழிக வாழ்க மறையோர்வா னேரும்
தழைகருழு மிக்கோ தனம். (17)

வாழ்க மனுநீதி மன்னவர்கள் மண்மகிழத்
தாழ்ககொடுங் கோல்மன்னர் தாம். (18)

அகத்தும் புறத்தும் அமலனுளன் என்று
மிகத்தெளிந்தார் பல்கநில மீது. (19)

பாங்குறமெய்ஞ் ஞானிக்கன் னுதி பரிந்தளிப்பார்
ஓங்குகவுள் ளாசழித்தின் புற்று. (20)

மன்னிடுக மண்டலத்தின் மாதவர்க்கும் வேதியர்க்கும்
அன்னமளிப் பாரருளி னுல். (21)

விருத்தர் மிடியர் விழியிலார்க் கன்னம்
அருத்துமவர் வாழ்கவரு ளால். (22)

*ஓங்கிடுக யாவரையும் உச்சிதனில் நீங்காதே*
*பாங்குறவே அன்னமளிப் பார்.* (23)

*ஆதுலர்க்குச் சாலேசமைத் தன்பால் மருந்தளிப்பார்*
*பூதலத்தும் வாழ்க புரிந்து.* (24)

*ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் தவர்க்களுக்கர்*
*சீருடனே மல்க செகத்து.* (25)

*திருப்பணியை ஈசற்குச் செய்வார்க்குச் செம்பொன்*
*விருப்புடனீ வார்பெறுக வீடு.* (26)

*இயலின் பொருள்முறையால் எண்ணு ருளத்தின்*
*மயன்மறுப்பார் ஓர்ந்தமல வாக்கு.* (27)

*நயக்க மவர்க்குத் துடைக்கையா லிந்தநூற்பேர்*
*மயக்கத்தை மாற்றும் மருந்து.* (28)

*அரிக்குமறல் மண்ணிணைத்தோ ருய்ந்தா ரியலைப்*
*பிரிப்பரிந்த நூலின் பிழை.* (29)

*மொழியின் பொருள்கொள்க முக்கியத்தி னானும்*
*ஒழிவில் கவுணத் தினும்.* (30)

*இலக்கணையி னானும் எணுக விரியும்*
*மலக்கணைதான் மூன்றாகி யே.* (31)

*விட்டதும் விட்டுவிடா தவ்வும் விடாதவ்வும்*
*ஒட்டவொரு மூன்று வுறும்.* (32)

*வெண்மைசிவப் பென்று விளம்பில் நிறந்தன்னை*
*எண்ணுதலே முக்கியமென் றெண்.* (33)

*வெண்மைசிவப் பென்று விளம்பிலவற் றின்குணியை*
*எண்ணுமிது தான்கவுண மே.* (34)

*அகத்தியன் என்பர் அறிவுடை யானைச்*
*சகத்தினிலோர் விட்டிது தான்.* (35)

*கங்கையிருப் பென்றே கரையிருப் பென்றேகாண்*
*அங்கதுவே விட்டுவிடா தாம்.* (36)

*கரியனிவன் என்கைவிடா லக்கணகாண் இன்னும்*
*விரியும் விடாத விதம்.* (37)

*குறிப்பிற் பொருள்கோளும் கொள்கநன் றென்றால்*
*வெறுத்தா........தென்றே விளங்கு.* (38)

*ஒருநான் குபமான முண்டவற்றி னெல்லாம்*
*ஒருபுடைகொள் முற்றொழிமா றோர்ந்து.* (39)

*கொண்டல்போ லுங்கரத்தான் என்றால் கொடையெனுவர்*
*கொண்டலுரு கையிற் கொளார்.* (40)

*பான்மொழியென் றாலினிமை பார்ப்பதலால் சொல்லினுக்குப்*
*பாணிறந்நித் திப்புமிலை பார்.* (41)

*அவாப்போலும் அல்குல் எனினகலம் கொள்வர்*
*அவாப்போல் அறிவோ வது.* (42)

*வெயிலனைய மெய்யெனில் கொள்வர் விளக்கம்*
*வெயில்வெப்பம் கொள்வரோ மெய்க்கு.* (43)

*எண்ணும் எழுத்தும் எணிமுனதன் பின்முறையால்*
*எண்ணுக மேய மெலாம்.* (44)

*எண்காண்ட லாதி யெழுத்தெழுத்து முன்னிவையுட்*
*கண்ணுயிருக் கென்றே கருது.* (45)

*எண்ணெழுத்தெ ணுண்மேயம் எண்ணினேன் என்கையுருக்*
*கண்ணிலன்கை தொட்டறிகை காண்.* (46)

*அனுதிமல முத்தன் சிவனவனு தார*
*மனுநீதன் வாக்காக மம்.* (47)

*சீரார் சிவாகமத்தின் ஐயம் திரிவறவே*
*ஓராதார் தாம்பலாண்டுண் டு.* (48)

*ஐயிக்கிய வாதியெழு வாயாவ ருள்ளத்*
*துயக்கம் சொலிமறுப்பாம் சூழ்.* (49)

பாயிரம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**50.**

# முதலாவது அயிக்கியவாதி சங்கற்பம்.

பதிபசு பாசம் எனவே பதார்த்த
விதமுன் றிவைவிளம்பு வேம். (1)

பாச மிலாதோன் பதிபசுக்கள் பாசமுளார்
பாச மிரண்டென்று பார். (2)

ஒன்றுலகு தோன்றும் உபாதான மாயைமற்
றொன்றுவினை யென்றுள் ளுணர். (3)

ஆக்கைவிதம் மாயைதனில் ஆக்கியறம் பாவத்தால்
வீக்குமுயிர்க் காக்கையிலா வேந்து. (4)

பலம்பாசம் பாற்றல் பசுவுக் கிதனால்
பலம்சிவனுக் கில்லையெனப் பார். (5)

திளைக்கும் வினைப்பலத்தைத் தேகத்தால் ஆன்மா
விளைத்த வினைகள் விட. (6)

யானென் செருக்கால் எடுத்த வுடல்தோறும்
ஊனவினை பின்னும் உறும். (7)

யானென் செருக்குக் கருவியுற எயுமுயிர்க்
கூனமலத் தாற்செருக்கா மோ. (8)

செருக்கே உணர்வு திமிர மலத்திற்
குரைப்பார் உணர்வினையா ரோது. (9)

இளைத்தே நிரையத் திருநிலன்விண் போகம்
திளைத்தேபல் காலம் செல. (10)

ஒத்தவினை கண்டே உயிர்க்குயிராய் நின்றசிவன்
சத்திபதிப் பன்கருணை சார்ந்து. (11)

அப்போ தருவருத்திவ் வாக்கை அவலவினை
எப்போது போமென் றிகழ்ந்து. (12)

பரிந்தவரைச் சுற்றத்தைப் பாரிதனைப் பற்றி
இருந்தபதி தன்னையும்விட் டே. (13)

பாம்பின்வாய்த் தேரையெனப் பஞ்சேந் தியத்தழுங்கித்
தேம்பியயல் தேசத்தில் சென்று. (14)

பிறவிப் பிணிதணிக்கும் பேரரு ளாளன்
உறையும் பதிகேட் டுணர்ந்து. (15)

குற்றமறுத் தாரைக் குழகனடி யிற்கூட்டக்
கற்றவனைத் தேசிகனைக் கண்டு. (16)

வலஞ்செய்து தண்டென்ன மண்ணிற் பணிந்தே
அலந்தேக வாழ்வென் றழுது. (17)

நையும் அவனொருமை நாடிக் குரவனயந்
துய்யச்செய் வோமென் றுரைத்து. (18)

தீக்கை புரியவினை தீரும் வினைதீர
ஆக்கையறும் ஆவிசிவத் தாம். (19)

ஒன்றுமே நீர்நீரின் உற்றுவினை அற்றுடலற்
றொன்றும் உயிர்சிவத்தை உற்று. (20)

என்றியம்பு கின்ற அயிக்கியவா தத்தினையாம்
அன்றிமறுப் பாம்கேட் டறி. (21)

முதலாவது அயிக்கியவாதிசங்கற்பம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**71.**

## முதலாவது
## அயிக்கியவாதி சங்கற்ப நிராகரணம்.

இருண்மலந்தான் ஆவிக் கிலையேல் துன்பின்பம்
கருவிகொடு காண்பதென்னே காண். (1)

உயிர்க்குக் கருவி யொடுங்கும்போ தற்ற
மயக்கத்துக் கேதுமல மாசு. (2)

கருவி கலக்க மயக்கம் கழியும்
இருளொளி போலும்காண் இவை. (3)

அற்றுரே யானென்கை ஆரியர்க்காட் பட்டாரிக்
குற்றம் இருள்மலத்தின் கூறு. (4)

நெருக்கித் தமோகுணத் தின்று ருயிர்க்குச்
செருக்கினை ஆக்குதிமிர்த் தீங்கு. (5)

உண்டு மறப்பு முனக்கதனுக் கேதுவினைக்
கொண்டிலையேன் மூலமலம் கொண்டு. (6)

வேண்டும் விழிவிளக்குண் டாய்விருத்தம் ஆவியுடல்
வேண்டுதலால் உண்டுவிரோ தம். (7)

இருளால் தடைபடுவ தெங்கள் பெருமான்
பொருளோ விழியோ புகல். (8)

பொருளைப் பொருவிழியிற் காணும் புலனை
இருளுக்கு மன்றேநீ எண். (9)

பொருளை இருள்மறைக்கும் என்கை பொருந்தும்
பொருவிழிக்கே யாதன் புகல். (10)

கண்ணைமறை யாது கருமுகிலா தித்தியனை
விண்ணின் மறைக்கும் மிடைந்து. (11)

இரண்டும் தடுக்கும் இருட்குணம்கண் ணள்ளேய்ந்
திரண்டும் தடாதொளிகள் ளேய்ந்து. (12)

தடைபடுமோ கண்சினை தர்ப்பணத்தின் காப்பண்
தடைபடுமே மண்ணினடுத் தான். (13)

கொள்கையே கண்ணென்று கொள்வர் குறிப்பிலர்கண்(?)
கொள்கைமட் டோவதற்குக் கொள். (14)

திரியினள வோதிரியைப் பற்றியெரி தீபம்
விரியுமொளி யுங்கண் விழிக்கு. (15)

பருதிதனைக் கிட்டியே பார்க்கும் பகற்கண்
ணுருவதனைக் கிட்டுமிரவிற் றெட்டு. (?) (16)

அந்தத் துறப்பதிதா ளார்த்த தடையுங்கால்
அந்தப் பொருட்குருத்தோன் முது. (17)

சேர்ந்த வுருவம் திளைக்கும் பொழுதுவிழி
கூர்ந்தளக்கும் உள்ளவுருக் கொண்டு. (18)

நீயுதவி யோசனைமே னிற்கும் பதி............
நீயுதமும் போமோகண் நிகழ்த்து. (?) (19)

கணத்தின் இமைமறைக்கத் தேசொடுங்கு கண்ணும்
கணப்பொழுதின் மீளுமெங்ஙன் காண். (20)

கடத்தா லடக்கிய தீபம் கணத்தில்
கடத்தையெடுக் கப்பார்க்கும் காண். (21)

நின்று திளைக்குமே நேர்ந்த விடயத்திற்
சென்றுவிழி தான்திளைக்கும் தேறு. (22)

தூரத் தொலிவந்து தொக்கதோ சோத்திரம்போய்த்
தூரத்திற் கேட்டதோ சொல். (23)

வானத் தொளிவிரைந்து மண்ணில் வருவதுபோல்
வானத் தொலியும் வரும். (24)

எண்ணின் இருண்மலமுண் டென்றியம்பும் போதிசைந்த
கண்ணிணையும் தேற்றினோம் காண். (25)

இல்லார்க்கு மூலமலம் ஏயாமா யாதனுவும்
உள்ளார்க் குடல்வினையும் உண்டு. (26)

முத்தர்க்கும் ஆக்கை முளைக்குமுயிர் ஆசில்லாச்
சுத்தவறி வென்றே சொலின். (27)

ஒன்றுகும் நீர்நீரின் உற்றதுபோல் ஆவிசிவத்
தொன்றும்சேர்ந் தென்றுயென் றோ. (28)

அணுதிமல முத்தன் சிவனவனுக் கொவ்வார்
அணுதிமல பெத்தரவ லர். (29)

ஒடுங்கும் ஒளியுடைய கண்கூர் இருளுக்
கொடுங்கா மனத்தினுக்கொப் போ. (30)

கண்ணும் மனமும் கலந்திரண்டற் றேகிலவும்
எண்ணுங்கால் ஒன்றல்ல வே. (31)

இந்தமுறை போலவிரண் டற்றுயிர்தான் நிற்குங்காண்
பந்தமறுக் கும்பதிபா தத்து. (32)

சேருமுயி ரென்ருய் சிவனை வியாபகனைச்
சேருமா றெங்ஙனநீ செப்பு. (33)

இருளடங்கும் போதுயிருள் ஈசனிணைத் தாளைத்
தெரிசிக்கை சேர்தலெனத் தேறு. (34)

தீருமள விற்றிமிரம் ஆவிதன்சிற் சத்திதனில்
பேரின் பினைத்திளைக்கப் பேறு. (35)

சூழ்வாரே இந்தவியல் சுத்தசைவ சித்தாந்தம்
வாழ்வார்பே ரின்ப மயத்து. (36)

முதலாவது அயிக்கியவாதி சங்கற்பநிராகரணம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**107.**

---

## இரண்டாவது பாடாணவாதி சங்கற்பம்.

---

பதியே அமலன் பசுக்கள் சமலர்
பதிபசுவார்க் கும்பாசம் மூன்று. (1)

இருண்மலம் என்று எழின்மாயை என்று
இருவினையென் றுமூன்றும் எண். (2)

நீக்க மலத்தை நிமலன் வினைக்கிசைந்த
ஆக்கைபிணிப் பானணுக்கட் கார்ந்து. (3)

வினைப்பலத்தை மேல்கீழ் நடுவும் மிசைந்தே
இனைத்தென்றெண் ணுநாள்சென் றே. (4)

பரிபாக மாகமலம் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலும் இறை. (5)

*ஆக்கைவெறுப் பப்பொழுதே ஆக அவனவலம்*
*போக்குமுபா யத்தைப் புரிந்து.* (6)

*பாசத்தைப் பாற்றும் பரமகுர வன்பதத்தின்*
*ஏசற்று விட்டிருந்த வில்.* (7)

*சிறந்தார்கள் சுற்றம் திருவென்ற மூன்றும்*
*துறந்தன் னியதேசம் தொட்டு.* (8)

*தேடியே தேசிகனைக் கண்டு சிரத்தவன்தாள்*
*சூடியே சொல்லித் துதி.* (9)

*எய்த்தேனெய்த் தேனின்பத் துன்பத் துடலெடுத்துக்*
*கைத்தே யிருளும் களை.* (10)

*என்றியம்ப வுள்ளத் திரங்கி எழிற்குரவன்*
*நன்றென் றவனை நயந்து.* (11)

*பண்ணச் சிவதீக்கை பற்றனைத்தும் அற்றேதம்*
*எண்ணான் சிவத்தோ டிசைந்து.* (12)

*அறியப் படிற்சடமே ஆகும் அமலன்*
*அறியப் படானுயிரி னல்.* (13)

*விளங்கின் அறிவு வினையதனுக் கேது*
*விளங்கா தறிவுவினை வீய்ந்து.* (14)

*இன்பத்துன் பத்தின் இளைப்பதே பெத்தமுத்தி*
*இன்பத்துன் பற்றிருப்ப தே.* (15)

*என்றியம்பும் பாடாண வாதி இவன்மதமும்*
*அன்றிமறுப் பாம்கேட் டறி.* (16)

இரண்டாவது பாடாணவாதி சங்கற்பம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**123.**

---

# இரண்டாவது பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்.

அறிவைத் தடுக்குமலம் ஆணவமா சற்றால்
அறிவிலங்கும் காணுயிருக் கார்ந்து. (1)

விளங்காதேல் ஆவிக் கறிவு விளையக்
களங்கம்தான் தீர்ந்ததல காண். (2)

அனாதிமலம் போகா திருந்து மயர்வாக்கா
தெனாதிமிடற் றின்விடம்போல் எண். (3)

புண்ணியபா வத்தின் புசிப்பறுகை முத்தியெனில்
புண்ணியமும் பாவமுமே போம். (4)

மற்றைமல மெல்லாம் நிலவும் வாயில்லை
குற்றமேனின் முத்தி கொளல். (5)

கருவு மாமும் கருவி கழிந்த
இருளும் பாமுத்தி என். (6)

அசித்தின்ப துன்பம் அவலத்தா மற்றால்
விசித்தின்பம் பெற்றிருக்கை வீடு. (7)

தீர்ந்தாற்கண் ஊனம் திளைக்குமுரு மூலமலம்
தீர்ந்தான் திளைக்கும் சிவம். (8)

அருக்கன் அருள்புரிய அந்தன் விழிபெற்
றருக்கனைக்கண் டாற்போலப் பேறு. (9)

அட்ட குணனை அமலனைக்கண் டார்மலமற்
றட்டகுணத் தைப்பெறுவ ராங்கு. (10)

அனாதியே போதன் அனைத்தும் அறிவான்
அனாதிமல முத்தசத்தி யால். (11)

ஒப்புயர்வில் லாத சுதந்தரனெல் லாவுயிர்க்கும்
தப்பா வியாபகனே தான். (12)

*நித்தியா னந்தன்.........திருத்தி நீங்காத*
*அத்தன் அலுத்தசத்தி யான்.* (13)

*அனந்தசத்தி மானென் றறிகுணம் எட்டும்*
*இனமெனக்கில் லாவிமலற் கே.* (14)

*அட்டகுணம் பெற்றா ரவனுக்கொப் பன்றவன்*
*அட்டகுணத் தாண்டுவிசிட் டம்.* (15)

*விட்டபொழு தானம் விளங்கும் குணமூனம்*
*ஒட்டாக் குணத்தினுக்கொப் போ.* (16)

*அனாத்தறிவு நித்தியம னாதியே போதம்*
*அலுத்தசத்தி யார்திருத்தி யாங்கு.* (17)

*விசுத்தம் சுதந்தரம னந்தசத்தி வீறென்*
*றிசைத்தகுணம் ஆதிமுத்தர்க் கெட்டு.* (18)

*இயற்றும்தம் சத்தி இலங்கியு முத்தர்*
*இயற்றாற் றேகா ணியம்.* (19)

*முந்தியகர்த் தாச்சத்தன் ஆதிமுத்தன் மும்மலத்திற்*
*பிந்தியகர்த் தாவுடல்பெற் றான்.* (20)

*முந்தினனும் பிந்தினனும் அல்லனே ஆதிமுத்தன்*
*இந்தநிலை முத்தியென எண்.* (21)

*உத்தமன னாதிமுத்தன் ஆதிமுத்தன் ஓதுங்கால்*
*மத்திமன்காண் பெத்தனத மன்.* (22)

*முத்திநிலை மூன்றும் மொழிந்தோம் அதுதனையும்*
*புத்திபணி நின்துயக்கம் போக்கு.* (23)

*ஆய்ந்தறிவார் இந்தஇயல் சித்தாந்தம் ஆசனைத்தும்*
*காய்ந்தடைவார் ஈசன் கழல்.* (24)

இரண்டாவது பாடாணவாதி சங்கற்ப நிராகரணம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**147.**

# மூன்றாவது பேதவாதி சங்கற்பம்.

அனாதிமல முத்தன் பதிபசுக்க ளம்மா
அனாதிமல பெத்தரனந் தர். (1)

அனாதிமல மாயை அறமும் கரிசும்
எனாதியைத்தீண் டாப்பா சிவை. (2)

போக்க மலத்தைப் புனிதன் வினைக்கியைந்த
ஆக்கையுயிர்க் குப்பிணிப்பன் ஆர்ந்து. (3)

நிலந்தன்னில் தாழ்ந்த நிரையத் துயர்ந்த
தலந்தனிலும் புக்குழன்று தான். (4)

விரித்த வினையான் விளைந்தபல முண்டே
தெரிப்பரிய காலங்கள் சென்று. (5)

பரிபாக மாகமலம் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலும் இறை. (6)

பள்ளியிற்பாம் பென்னப் பயின்ற மனைவியையும்
தள்ளியவன் அப்பொழுதே தான். (7)

அப்பதியை நீங்கி யடைந்தன் னியதேசம்
ஒப்பரிய தேசிகன்முன் னுற்று. (8)

அட்டாங்க பஞ்சாங்க மாக வடிபணிந்து
மட்டுமலர்த் தாள்தலைமேல் வைத்து. (9)

கருவும் கரிசும் களங்கமும் நீக்கி
வாதனுரு வாக்கியெனை வை. (10)

என்றியம்பக் கேட்டே எழிற்குரவன் தானிரங்கி
நன்றென் றவனை நயந்து. (11)

ஆய்ந்தாய்ந் தவன்றன் அகத்திலொருப் பாடுதனை
வாய்ந்தசெய லாலே மதித்து. (12)

சிவதீக்கை செய்யமலம் தீர்ந்துசிவன் தாள்சேர்ந்
தவனைப்போற் சுத்தனா வான். (13)

*பொற்குன் றடைந்தபொனும் காகம் கருநிறம்போம்*
*அக்குன் றுத் தோன்றியொன்ற காது.* (14)

*சிவனடிசேர்ந் தானும் சிவனைப்போ லாவன்*
*அவனடியின் ஒன் றியொன்ற கான்.* (15)

*என் றியம்பும் பேத வாதி மதத்தினையும்*
*அன் றிமறுப் பாம்கேட் டறி.* (16)

மூன்றுவது பேதவாதி சங்கற்பம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**163.**

---

# மூன்றுவது பேதவாதி சங்கற்ப நிராகரணம்.

---

*ஏகதேசம்பொற்குன் றெங்கும் நிறைந்துறையும்*
*ஏகனுக்கொப் பாமோ இயம்பு.* (1)

*வான்போல் அமலன் வளிபோல் உயிரெங்ஙன்*
*தான்பேதம் ஆமாறு சாற்று.* (2)

*திரிவறவே ஆகமமும் தேர்ந்தசிவ ஞான*
*குரவனுக்காட் பட்டனைகொல் கூறு.* (3)

*யோகத்தின் ஆகும் உருவம்காண் நின்முத்தி*
*ஆகுமமற் றனேமுத் தன்.* (4)

*முத்திநிலை முன்னும் மொழிந்தோம் அதுதனையும்*
*பத்திபணி நின்துயக்கம் போக்கு.* (5)

*எண்ணுவார் இந்தவியல் சித்தாந்தம் நிர்த்திருளும்*
*அண்ணியார் ஈசன் அடிக்கு.* (6)

மூன்றுவது பேதவாதி சங்கற்ப நிராகரணம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**169.**

---

## நான்காவது சிவசமவாதி சங்கற்பம்.

அமலன் பதியசுக்கள் ஆக்கையிற் பட்டார்
தமலமொரு மூன்றென்று தான். (1)

மலங்கருமம் மாயைமா யேயமென நான்கும்
விளங்குயிர்கட் கென்றே விளங்கு. (2)

ஓட்ட மலத்தை உயிர்க்குக் கருவியுடல்
கூட்டுமிறை கன்மம் குறித்து. (3)

உண்டுணர ஈசற் குயிர்க்குக் கருவிகளும்
உண்டுணர என்றே உணர். (4)

பாசத் தறிவால் பசுவின் அறிவுதனை
ஈசன் அறிவிலக்கு மே. (5)

துய்த்தே வினைப்பலத்தைத் தேசங்கள் தோறும்போய்
எய்த்தேபல் காலஞ்சென் றே. (6)

பரிபாக மாகமலம் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலும் இறை. (7)

அப்பொழுதே யாக்கைவெறுப் பாகவவ னுக்கவன்தான்
ஒப்புடைய காதலியை யும். (8)

விட்டு விரைந்து விதூர அயல்நாடு
கிட்டி நிலத்திற் கிடந்து. (9)

பித்தனென மத்தனெனப் பேதையெனப் பேயனெனச்
சுத்தனெனக் கண்டார் சொல. (10)

நாணற்றுப் பூணுக நாட்டார் தருமுணவின்
வேணதே தேனு மிசைந்து. (11)

ஆக்கைமுதல் நோய்நீக்கும் ஆரியன்தான் எங்குளனோ
தாக்கியலீர் கண்டாற் செலீர். (12)

என்றென்று தேடுமிவன் நாதா இவனுள்
நின்றசிவன் கண்டருள நேர்ந்து. (13)

கூரியனை ஆரியனை ஆவேசம் கொண்டிருக்கச்
சீரியன்தன் முன்னிவனும் சேர்ந்து. (14)

கண்களிக்கக் கண்டு மனங்களிக்கக் கைதொழுது
பண்களிக்கப் பாடிப் பணிந்து. (15)

மாசுடலம் நீக்கி வரதா பொருவரிய
ஈசனைப்போ லாக்காய் எனை. (16)

என்றியம்பக் கேட்டே இரங்கி எழிற்குரவன்
நன்றென் றவனை நயந்து. (17)

நிக்கைபுரி யத்திமிர மூலமலம் நீருமிரண்
டாக்கைவினை மாயையும்போம் அன்று. (18)

ஐந்து முகமும் அனைத்தறிவும் ஆருளும்
ஐந்தொழிலும் பெற்றவன்போல் ஆம். (19)

மென்புழுத்தான் வேட்டுவனும் வேட்டுவனைத் தான்குறித்துள்
அன்பினுமிவ் வாறிறைக்கொப் பாம். (20)

என்றுசம வாதி இயம்பும் இவன்மதமும்
அன்றிமறுப் பாம்கேட் டறி. (21)

நான்காவது சிவசமவாதி சங்கற்பம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**190**.

---

## நான்காவது
## சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்.

---

ஆருயிருக் குண்டேல் அறிவதனை ஆணவமென்
கூரிருள்தான் மூடுமோ கூறு. (1)

உண்டேல் உணர்வுயிருக் கோசையெழு வாய்கருவி
கொண்டறிவ தென்னெனக்குக் கூறு. (2)

அறிவுகரு விக்குளதேல் ஆமிந்தப் பலன்றன்னைப்
பிறியாத பேறும் பெறும். (?) (3)

கருவிக் கறிவுளதேல் எண்கரண மாமற்
றொருவாக்கா ராய்ந்தே யுரை. (4)

நிறையுடைய தேசிகன்சொல் நேர்மைப் பொருளைக்
குறியாதார் கோளெனின் கோள். (5)

சுத்த தனுவில் தொழில்புரிவ தேபரம
முத்தியென்ற சொற்கூன முண்டு. (6)

உறுப்பெவையும் காரியமென் றோர்ந்துநீ சொன்ன
உறுப்புமொடுங் கும்சடமென் றோர். (7)

அபாமுத்தி யென்றே அறைவர் இதனை
அபரவுபா தானமற லால். (8)

மூலமலம் அற்று முழுதறிவுண் டாயதென்றாய்
கோலவுடற் காரணமென் கூறு. (9)

ஆணவத்தை நீக்கவுறும் ஆக்கையுயிர்க் காக்கையறும்
ஆணவமற் றுலென் றறி. (10)

ஐந்தொழிலும் செய்யும் அதுபரம முத்தியல
ஐந்தொழிலும் உண்டனந்தே சர்க்கு. (11)

அவரபர மாமுத்த ரல்லர்பர முத்தர்
சிவவாக் கியத்தாலும் தேறு. (12)

பாமுத்தி என்று அபாமுத்தி என்று
இருவிதம்காண் முத்தி எனில். (13)

பாமுத்தி மும்மலமு பாற்றிப் பிரமப்
பிரமத்தின் வேற்றுமைப்பே றும். (14)

ஒப்பாகு மேற்குளிகைக் கூனமற்ற செம்பமலற்
கொப்பார் பாமுத்த ரும். (15)

அபாமுத்தர் நாதாதி கேசத்த மாவார்
அவர்பாம முத்தரோ அன்று. (16)

எடுத்தார்கள் சுத்ததனு வெல்லா அறிவும்
படைப்பா தியுமுளர்தம் பால். (17)

இத்தகைமை யாலே இவர்கள் இறையமலற்
கொத்தவரென் னிற்பழுதும் உண்டு. (18)

உடலிலா ஈசன் உணர்வினுக்கொப் பாமோ
உடலுற் றுதிக்குமுணர் வும். (19)

உயிர்க்குயிராய் நின்றமலன் ஓர்வன் உயிர்ச்செய்தி
யுயிர்க்குயிரா மோசிற் றுயிர். (20)

மென்புழுத்தான் வேட்டுவனும் மெய்யன் பினுமிறையாம்
என்பதுசா ரூப்பியப்பே றே. (21)

பெத்தத்தில் நீங்காண்ட முத்திக்குப் பேதமில்லை
சத்தாதி இன்புறலால் தான். (22)

சத்தாதி கீழ்மாயை தன்னில் படைப்பென்னில்
சுத்ததத்து வத்துமுண்டு சூழ். (23)

சுத்தாதி ஐந்தினையும் தாங்கும் செவிமுதலும்
அத்தனுவுக் குண்டென் றறி. (24)

பஞ்சேந் திரிய விடயங்கள் பற்ற......
எஞ்சா மனுதிபண் டெண். (25)

மனமெழுவாய் உண்டாக மற்றையவும் உண்டு
வினதுமுத்தி பெத்தமென்று நேர். (26)

சடமனைத் தையுநீங் கிடச்சச்சி தானந்தன்
அடியடைந்தின் புண்கைமுத்தி ஆம். (27)

முத்தினிலை முன்னும் மொழிந்தோம் இதுதனையும்
புத்திபணி நின்றுயக்கம் போக்கு. (28)

இளைப்பரோ ஆக்கைபெடுத் திவ்வியற்சித் தாந்தம்
திளைப்பார் திளைப்பார் சிவம். (29)

நான்காவது
சிவசமவாதி சங்கற்பநிராகரணம் முற்றிற்று.
ஆகக் குறள்வெண்பா—**219.**

# ஐந்தாவது சங்கிராந்தவாதி சங்கற்பம்.

கட்டிலோன் என்றும் பதிபசுக்கள் கட்டுளார்
கட்டுமொரு நான்கென்று காண். (1)

இருள்கருமம் மாயைமா யேய மெனவே
ஒருநான்கு பாரமுயிர்க் குண்டு. (2)

இருள்மலத்தை நீக்க இறைவன் உயிர்க்குக்
கருவிகொடுப் பன்கருமம் கண்டு. (3)

விளக்கென்ன ஆவி விளங்கு........தான்
திளைக்குமோ போகத் திறம். (4)

ஆருயிரின் சந்நிதியின் ஆக்கை சடமியங்க
ஒரும் பலம்கருவி உற்று. (5)

விளைத்த வினைப்பலத்தை மேல்கீழ் நடுவும்
திளைத்தே பலகாலம் சென்று. (6)

பரிபாக மாகமலம் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலும் இறை. (7)

விரைய உடல்வெறுப்புத் தோன்றஅவன் அப்போ
துரியமனை மற்று மொழித்து. (8)

போக்குவான் எங்குளன் போகமலம் புந்திசிவம்
ஆக்கினனக் கென்றே அயர்ந்து. (9)

தேசிகனைத் தேடித் தெரிசித் தடிபணிந்து
வாசியிலாத் தாடலைமேல் வைத்து. (10)

புன்புலால் ஆக்கை வினைமல மும்போக்கிப்
பொன்பா வெனச்சிவத்தி னுக்கு. (11)

என்றியம்ப உள்ளத் திரங்கி எழிற்குரவன்
நன்றென் றவனை நயந்து. (12)

நீக்கை புரிந்துமலம் தீர்ந்து சிவகரணம்
ஆக்குமன மாகியவ னுக்கு. (13)

*சித்தம் சிவத்தைத் திளைக்கு மதனாலே*
*சுத்த கரணமெனச் சூழ்.* (14)

*தொல்லைவினை வாதனையின் ஆம்பலத்தைத் துய்க்குமனம்*
*இல்லைவினை சுத்தனுக்கென் றெண்.* (15)

*ஊனுடலம் தானும் ஒடுங்க உயிர்க்கமலன்*
*ஞானம் நிகழுமென நாடு.* (16)

*ஆடி யுருவின் உதிக்கும் அருக்கனென*
*நீடும் சிவஞானம் நேர்.* (17)

*சிவஞானம் ஆவேசம் செய்ய உயிரும்*
*சிவமாம் எனவே தெளி.* (18)

*உப்பளத்திற் பட்ட உலவையுமுப் பாமதுபோல்*
*அப்பொருளாம் ஆவியும்வே றற்று.'* (19)

*என்றியம்பும் சங்கிராந்த வாதி யிவன்மதமும்*
*அன்றிமறுப் பாம்கேட் டறி.* (20)

ஐந்தாவது சங்கிராந்தவாதி சங்கற்பம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**239.**

---

## ஐந்தாவது
## சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம்.

---

*தூண்டாத தீபமென ஆவி துலங்குமெனில்*
*ஈண்டா ததனைத் திமிர்.* (1)

*சன்னிதியின் ஆன்மாவின் ஆக்கைகா ணஞ்சரித்துத்*
*துன்னும் பலமென்கை தோல்.* (2)

*துன்னும் மலத்தின் சுடாங்கும் தோற்றவுடல்*
*சன்னிதியெவ் வாறுயிர்க்குச் சாற்று.* (3)

அணுதிமல முத்தனுக்குச் சன்னிதியுண் டென்றும்
அணுதிமல பெத்தனுக்கெங் ஙன். (4)

துஞ்சார்க்குச் சன்னிதிதான் உண்டென்று சொல்லுமாம்
துஞ்சுமவர்க் குண்டெங்ஙன் சொல். (5)

ஐயம் திரிவுமற ஆகமமும் ஆராய்ந்த
துய்யனுக்காட் பட்டி லைகொல் சொல். (6)

பாசப் பலம்பாசத் தாகா பசுவுக்காம்
ஈசனது சன்னிதியா லே. (7)

இந்திரியம் தானுணரின் எக்காலத் தும்முணரும்
ஐந்தினையு மில்லையிந்த வாறு. (8)

இருவரொரு காலத் திருசெவிவே றேதின்
இருசெவியும் கேட்குமோ சங்கு. (9)

ஒவ்வொன்றாய் ஒன்றி உணருமுயிர் ஐந்தினையும்
கவ்வ மனமனத்தைக் கண்டு. (10)

அந்தக் கரணங்கள் பற்றி அவையறியின்
அந்தவுயிர் வேறோ அவற்று. (11)

மனம்பொறியெ னத்த மதியாதே லான்மா
மனத்துதித்த லத்தமதி யாது. (12)

சன்னிதியின் ஆன்மாவின் ஆக்கை சரிக்குமெனில்
பின்னமுடற் செய்கைக்கென் பேசு. (13)

வெறுக்கப்பட் டான்கொடிய வேந்தனெதிர் வந்தால்
கறுத்துக் குவியாத கை. (14)

வெறுக்கப்பட் டான்கொடிய வேந்தனெதிர் வந்தால்
கறுத்துத் தொழுவதென்னோ காண். (15)

இச்சை யுடலியக்கத் தேது வெனிலிருமல்
இச்சையற்றும் தோன்றுமா றென். (16)

அந்தக் கரணங்கள் ஆக்கைக் கேதுவெனில்
எந்தமா னத்தறிந்தாய் சங்கு. (17)

காட்சியல யார்யார்க்கும் காட்சிப் படாவிடயம்
மாட்சியனு மானத்து மன்று. (18)

காட்சியனு மானத் தருத்தத்தி லேதனையும்
மாட்சியிது சொல்லானு மன்று. (19)

மானமூன் றுனு மதியாய்ப் பொருள்கொள்கை
ஊனமென ஓர்ந்தே ஒழி. (20)

தத்துவா தீதனெனச் சாற்றுமறை யும்சிவனைத்
தத்துவங் காணுமெங்ஙன் சாற்று. (21)

இந்திரியத் தத்தத்தை எண்ணுமன மாதியெலாம்
இந்தவிதத் தொன்றும் இறை. (22)

சித்தம் சிவத்தைத் திளைக்குமெனச் செப்பியதும்
பித்தென்றுய் ஓடிப் பிழை. (23)

எங்கும் நிறைந்திணையும் இல்லா இறைஅமலன்
எங்ஙனுயிர்க் காவேசி ஈங்கு. (24)

ஆவேசம் தானில்லா எல்லையினும் ஆதலினல்
ஆவேசி யல்லனம லன். (25)

ஏகதே சம்பருதி எய்துமெழில் ஆடிதனில்
ஏகதே சன்சிவனன் றே. (26)

உப்பளத்திற் பட்ட உலவையென ஒன்றியுயிர்
அப்பொருளாம் என்றதிசை யாது. (27)

சடங்கள் பரிணமித்துச் சார்ந்தசட மாகும்
சடமலவான் மாச்சிவனும் தான். (28)

வளர்கை தளர்கை பரிணமம் மண்ணில்
பிணமுனை யாதி பெறும். (29)

உண்டோ வளர்ச்சி தளர்ச்சியுயிர்க் கொப்பிலிக்கு
மிண்டாநின் கொள்கை விடு. (30)

மனமாமோ இந்திரியம் மன்னு மனத்துக்
கனனியமான் மாவமலத் தாங்கு. (31)

*மூத்திநிலை முன்னும் மொழிந்தோம் அதுதனையும்*
*புத்திபணி நின்துயக்கம் போக்கு.* (32)

*அறிவாரே இவ்வியற்சித் தாந்தமா சற்றுச்*
*செறிவார் பரம சிவம்.* (33)

ஐந்தாவது சங்கிராந்தவாதி சங்கற்பநிராகரணம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**272**.

---

## ஆருவது ஈசுவர அவிகாரவாதி சங்கற்பம்.

---

*பசுமலமும் இல்லாப் பதியொருவன் மூலப்*
*பசுமலமும் உள்ளார் பலர்.* (1)

*இருள்கருமம் மாயைமா யேயம் எனவே*
*ஒருநான்கு யாசமென ஓர்.* (2)

*இயங்கான் அமலன் இயங்கான் சடத்தை*
*இயக்குமவன் முன்சடங்கள் ஏய்ந்து.* (3)

*துளைபலவாம் கும்பத்துள் சோதியென ஆன்மா*
*ஒளிருமனத் திந்திரியத் தும்.* (4)

*சீவன்ஞா தாக்கத்தாப் போத்தாச் செடத்தமலன்*
*சீவனைப்போ லாமின் செயில்.* (5)

*செய்வித்தா ரும்பலத்தைச் சேர்வனத னலல்லன்*
*செய்விப்பான் தானும் சிவன்.* (6)

*இரவியெதிர் மண்ணோர் இயற்றுவர் எல்லாம்*
*இரவிதான்செய் வித்ததன் றே.* (7)

*ஆக்கி வினையை அவன்முன் பலமருந்தி*
*ஆக்கும் வினையினுமான் மா.* (8)

*விண்மண் நிரயத்தும் துய்த்து வினைப்பலத்தை*
*எண்ணரிய காலம்செசன் றே.* (9)

மலபாக மாக மனுநிதன் முன்னே
அலமாக்கை என்றுரைசை அற்று. (10)

ஆக்கையும் ஆக்கும் அருவினையும் ஆணவமும்
போக்கவலான் எங்குளனிப் போது. (11)

என்றவன்றான் ஆதரவுற் றேய்ந்த மனைவியையும்
கன்றவரும் கூற்றென்று கண்டு. (12)

துறந்தன் னியதேசம் தொட்டுக் குரவன்
உறைந்தபதி யுங்கேட் டுணர்ந்து. (13)

அப்புரியை எய்தி அருமறையும் ஆராய்ந்த
ஒப்பரிய தேசிகன்முன் உற்று. (14)

அடிமலர்தூய்க் கைதொழுது கண்ணீர் பொழியப்
படியிற் படியப் பணிந்து. (15)

னையும் அவனொருமை நாடிக் குரவனயந்
நுய்யச்செய் வோமென் றுரைத்து. (17)

புரியச் சிவதீக்கை புன்மலம்போம் போக
இருவினைபோம் மாயையும்போ மே. (17)

தேசிகன்செய் தீக்கையினால் தீர மலமனைத்தும்
ஈசனடி ஞானம்பெற் றே. (18)

வெம்புவார் வெய்யிலினால் வேண்டுநிழல் சேர்வதுபோல்
எம்பெருமான் தாள்சேர்வ னே. (19)

என்றே அவிகார வாதி இயம்புவதும்
அன்றிமறுப் பாம்கேட் டறி. (20)

ஆறுவது ஈசுவர அவிகாரவாதி சங்கற்பம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**292**

# ஆறுவது

## ஈசுவர அவிகாரவாதி சங்கற்ப நிராகரணம்.

ஆக்குகையும் ஆக்குமறி வாருயிர்க்குண் டோவினையும்
ஆக்கையினை ஆக்கவறி யாது. (1)

தானேதோன் றாதுகடம் இத்தரணி தன்னிலற்
றானேதோன் றாதுசடம் தான். (2)

ஆக்கைஎழு வாயை அறிந்து வினையினையும்
ஆக்காதே ஆக்குமம லன். (3)

ஆக்கை விகாரத்தின் ஆகும் கடம்சிவனும்
ஆக்கில் விகாரியெனில் அன்று. (4)

சங்கற்பத் தாலே சமைப்பனத னாலமலன்
அங்கு விகாரி அலன். (5)

சமலரே செய்வித்தும் சார்வார் பலத்தை
அமலன்செய் வித்துமடை யான். (6)

புந்தித் துணிவு புமானறியும் ஆருயிரென்
எந்தையெனும் என்றேநீ எண். (7)

அவன்கணிதம் ஆராய்ந்தார் சொல்வரகத் தெண்ணம்
அவனறிவன் என்கைவியப் பன்று. (8)

உள்ளத்தின் உள்ளான் உணரும் அவரவருட்
கள்ளமும் மற்றனைத்தும் காண். (9)

கள்ளரையாழ் விப்பன் கடியநிரை யக்குழியுள்
வெள்ளரைவாழ் விப்பன்மேல் விண். (10)

எற்றே வலரால் இயற்றல் பலமரையன்
அற்றேசெய் விக்குமம லன். (11)

அறிவொளிரின் ஆவிக் கதற்குப் பொறியேன்
செறியா ததனைத் திமிர். (12)

முன்னொடுபின் மாறும் மொழிநின் மொழிநினது
புன்மொழியை இப்பொழுதே போடு. (13)

ஆதபத்தின் நொந்தார் அணிநிழலைச் சேர்வார்போல்
சோதியைச்சேர் வாரென்கை தொல். (14)

மனோதுக்கம் நீங்கியிட நீக்கியிட மாட்டார்
மனோதீத னைச்சேர்வ ரோ. (15)

நீங்காதே எங்கும் நிறைந்துறையும் நின்மலனைத்
தாங்கூடு மாறெங்ஙன் சாற்று. (16)

வான்தேடிக் கூடுவார் உண்டேல் வாதனடி
நான்தேடிக் கூடல் தகும். (17)

தேடாதே தேடிச் சிவனைத் தனதுள்ளே
கூடுவதே............கொள். (18)

புந்திக்கு வேறோ புமானன்றித் தானென்றோ
முந்தமுறை எண்ணுயிர்க்கீ சற்கு. (19)

விண்டிடலும் மூலமலம் வித்தகமாம் ஆருயிர்தான்
கண்டிடுமெல் லாமென்று காண் (20)

முத்திநிலை முன்னும் மொழிந்தோம் அதுதனையும்
புத்திபணி நின்துயக்கம் போக்கு. (21)

ஓர்வாரே இந்தஇயல் சிந்தாந்தம் ஊனமெலாம்
தீர்வார் திளைப்பார் சிவம். (22)

ஆறாவது ஈசுவர அவிகாரவாதி சங்கற்ப நிராகரணம் முற்றிற்று
ஆகக் குறள்வேண்பா—**314.**

---

## ஏழாவது
## நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்பம்.

---

இருள்மலமும் இல்லான் இறைவன் பசுக்கள்
இருள்மலமும் உள்ளாரென் றெண். (1)

இருள்மலம் மாயைமா யேயம் திரோதம்
கருமமிவை ஐந்துமலம் காண். (2)

போக்க இருள்மலமும் புண்ணியத்தும் ஆருயிர்க்கட்
காக்கையினை ஆர்க்குமம லன். (3)

அவன்வே றலன்பசு பாசத்தும் அதனால்
அவன்மயமெல் லாமென் றறி. (4)

அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறியப் படுவனவெல் லாம். (5)

அவனிவன் நானீ என்னும் விகற்பம்
அவஞானம் பேதமற்ற தே. (6)

அறிவணுவுக் கில்லை அமலனறி வாலே
அறியும் பலத்தையது வார்ந்து. (7)

அறிவணுவுக் குண்டேல் அடாா தவலம்
இறையறிவுக் குண்டோ விருள். (8)

தடுக்க அருள்வலியைத் தந்திடும்போ கத்தை
எடுத்தவுடல் தோறும்துய்த் தே. (9)

எய்த்தேயெய்த் தேசெல்லா ஆவிதான் எவ்விடத்தும்
இத்தனைஎண் ணாள்சென் றே. (10)

பரிபாக மாகமலம் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலும் இறை. (11)

ஒழுகுமவன் எற்பூன் உவர்த்தவப் போதே
விழுமியமெய்ஞ் ஞானம் விழைந்து. (12)

தேசன் சிவஞானம் தேற்றிமலம் தீர்த்தருள்செய்
ஆசா ரியன்பேரூர் ஆய்ந்து. (13)

மாதரையும் விட்டவன்தான் மற்றையொரு நாடுபெற்றிக்
காதலுறத் தேசிகனைக் கண்டு. (14)

விழிபொழிய வாய்குழற மெய்ம்முகிழ்ப்பக் கையால்
தொழுதுவல முன்னனை சூழ்ந்து. (15)

பணிந்தே படியப் படியிற் சிரத்தின்
அணிந்தே அவன்றாள் அலர். (16)

வெறுத்தேன் உடலம் விமலா மலங்கள்
அறுத்தே எனையமலத் தாக்கு. (17)

என்றியம்பக் கேட்டே எழிற்குரவன் தானிரங்க
நன்றென் றவனை நயந்து. (18)

தீக்கையினைச் செய்யமலம் தீரும் பிராரத்த
ஆக்கையறும் ஆவிசிவம் ஆம். (19)

என்றே நிமித்தபரி ணாம மியம்புவதும்
அன்றிமறுப் பாம்கேட் டறி. (20)

ஏழாவது நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்பம் முற்றிற்று.
ஆகக் குறள்வெண்பா—**334.**

---

## ஏழாவது நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்ப நிராகரணம்.

---

அவனாலே ஆக்கப் படும்அண்ட பேதம்
அவனாமோ அன்னியமே யாம். (1)

குலாலனாற் பண்ணப் படும்குடமற் றெல்லாம்
குலாலனா மோநீதான் கூறு. (2)

வானாகி வானிலுள மண்ணிறுவாய் மாதேவன்
தானும் உயிர்சடமும் தான். (3)

அவனெங்கும் நீங்கான் அதனால் உலகும்
அவனென்னும் வேதா கமம். (4)

விட்டு விடாத இலக்கணையா லேவேதம்
சிட்டனால கென்னும் சிவன். (5)

வாடியுடல் வாழ்க்கைக்கு மையலறுக் கைக்கவனைத்
தேடுமுயிர் தானவனோ செப்பு. (6)

அனைத்துயிர்க ளும்மமலன் என்னும் விடாத
இலக்கணையா லேறா லெலாம். (7)

விழிகுருடன் காணன் விளக்குப் பெறினும்
ஒழிவினர் கண்ணோ டொளி. (8)

ஆதலினு லுண்டே யறியாய் அறிவுயிர்க்குப்
போதிப்பன் போக்கியரன் புன். (?) (9)

ஐந்தினையும் ஐந்தால் அறியுமணு வின்சத்தி
ஒந்தொந்தாய் என்றே உணர். (10)

மூன்றும் ஒளிமலத்திற் குன்று ஒளிதன்னோ
டொன்றியொன்றும் என்றநிசை வோ. (11)

கனவிருளுக் கொல்கும்கண் ஒல்காக் கருத்துக்
கனனியமொன் றன்றுயிர்ச்சித் தாங்கு. (12)

முத்திநிலை முன்னும் மொழிந்தோம் அதுதனையும்
புத்திபணி நின்றுயக்கம் போக்கு. (13)

படித்துணர்ந்தார் இந்தவியல் சித்தாந்த பாசம்
தடுத்துவிழிப் பாரமலன் தாள். (14)

ஏழாவது நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்ப
நிராகரணம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**348.**

---

## எட்டாவது சைவர் சங்கற்பம்.

---

பற்றொன்று மில்லான் பதிபசுக்கள் பற்றுள்ளார்
பற்றுயிருக் கைந்தென்று பார். (1)

இருள்கருமம் மாயைமா யேயம் திரோதம்
ஒருநான்கும் ஒன்றுமலம் ஓர். (2)

அறிவுண் டணுக்கட் கவிரிருள்மே லிட்டால்
அறிவடங்கி நிற்குமென வாய். (3)

கூட்டிக் கலையும் குழகன் இருள்சிறிதே
ஒட்டவுல குண்ணுமுயி ருற்று. (4)

மண்ணகத்தும் விண்ணகத்தும் மாறிரையத் தோமற்றும்
எண்ணிய ஆக்கையெடுத் தெய்த்து. (5)

வினையின் பலத்தை மிசைந்தே மிசைந்தே
எனையபல் காலம்சென் றே. (6)

பரிபாக மாகமலம் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலும் இறை. (7)

ஆக்கையிற்சிற் றின்பம் அரவின்வாய்த் தேரைவாய்
ஈச்சிறு தேன்உண்டற் றென்று. (8)

எண்ணியவன் அப்பொழுதே இல்லம் மனைவி தனம்
மண்மோக மெல்லாம் மறந்து. (9)

மூலநோய் தீர்க்கும் முனிவான்தான் எங்குளனென்
றாலோப முற்றுற் றயர்ந்து. (10)

தேடும் அவனொருமை சித்தத் திருந்தசிவன்
நாடியருள் செய்ய நயந்து. (11)

தேசிகனை ஆவேசம் செய்து சிறந்திருக்கும்
வாசமலர் மணடபத்தின் வந்து. (12)

ஆரணமும் ஆகமமும் ஆராய்ந் தறிவிக்கும்
காருணியன் தேசிகன்தாள் கண்டு. (13)

வலம்செய்து தெண்டனை மானப் பணிந்தே
அலந்தேன் அடியேனை யா. (14)

அறுப்பையோ ஆண்டருளி ஆணவம் ஆதி
வெறுப்பையோ என்னை விளம்பு. (15)

அருணிதியே என்றென் றழுமவன் உள்ளத்
தொருமையினைத் தேசிகன்தான் ஓர்ந்து. (16)

சாண்பூண் தகையைத் தடுத்தே அவனை
இரங்கிக் கரத்தால் எடுத்து. (17)

ஆகம் உறவே அணைத்துமோந் துச்சியினை
மோகமொழி என்றே மொழிந்து. (18)

சாக்கிரா தீதச் சமாதிபுரிந் தாரருளால்
நோக்கவரும் மூலமல நோய். (19)

யானென தென்னும் செருக்குமின்றி அந்தவுடல்
தானும் அறச்சிவமாம் தான். (20)

தற்காட் சியினறியத் தற்காட்சி தானுமின்றி
நிற்குநிலை முத்தி நிலத்து. (21)

என்றியம்பும் சைவர் மதத்தினையும் அப்பொழுதே
அன்றிமறுப் பாம்கேட் டறி. (22)

எட்டாவது சைவர் சங்கற்பம் முற்றிற்று.

ஆகக் குறள்வெண்பா—**370**.

---

## எட்டாவது
## சைவர் சங்கற்ப நிராகரணம்.

---

உண்டா ருயிருக் கொளிரும் உணர்விருளும்
உண்டென்ற சொல்லிசையு மோ. (1)

ஆருயிருக் குண்டேல் அறிவதனுக் கேன்குருவி
கூரிருள் தான் மூடுமோ கூறு. (2)

சித்தாந்தம் ஆராய்ந்த தேசிகன்தான் நன்சிரத்தில்
கைத்தலத்தை வைத்திலனோ காண். (3)

சித்தன் றுயிர்திமிரத் தீண்டுதலா லேசிவத்தோ
டத்துவிதத் தாலசித்த மன்று. (4)

அதசித்துச் சிவனெனச் செப்புவர் தேர்ந்தோர்
விதிமற் றனைத்தும் விழைந்து. (5)

தம்மைச் சிவனைத் தமோமலத்தில் தாம்காணார்
என்னிருள் தீர்ந் துங்காண் கிலர். (6)

மாணுநோய் தீர்தலும்தம் உள்ளுறையும் வாய்மையினைக்
காணுதே கண்டிருப்பர் காண். (7)

இலங்குமுயி ரின்சத்திக் கின்பமுந்தீர்ந் தாசு
களங்கமறும் செம்பொளிபோற் காண். (8)

முளைப்பின்றி ஆன்மாத்தான் சத்தியின்முற் றின்பம்
திளைத்திருக்கை முத்தியெனத் தேறு. (9)

ஆறும் பதிபசுபா சங்கள் அறிவினெடும்
வேறென் றிரண்டை விடு. (10)

நான்காகி மூன்ருகி ஞானநாட் டத்திரண்டற்
ருய்பேறே சைவசித்தாந் தம். (11)

பரோக்காப ரோக்கச் சிவஞானத் தாற்பார்த்து
விருபாக்க னைப்பெறுகை வீடு. (12)

சிவனருளால் தேசிகனுல் தேசுடை வாக்கால்
சிவஞானம் வாய்க்குமெனத் தேறு. (13)

பாசபசு ஞானம் பழித்து சிவஞானத்
தீசனைக்கண் டார்க்கிலங்கும் இன்பு. (14)

பாசபசு ஞானப் பலங்கள் அழிந்துவிடும்
ஈசன்ஞா னப்பலத்தின் இற்று. (15)

பாசபசு ஞானம் பவுத்தரெழு வாயருக்குண்
டீசனடி ஞானமெமக் கே. (16)

பவுத்த ரெழுவாயான் மாதிபயின் ருய்ந்தார்
சிவத்தையடை வார்சைவம் சேர்ந்து. (17)

ஒற்றைவரி மற்ற வுறுப்புப் பயின்ருரே
மற்றை வரியெழுது வார். (18)

எச்சமயத் துற்றும் இறைஅமலன் ஏகனென
நிச்சயித்தார் மீளார் நிலத்து. (19)

கல்லெறிந்த சாக்கியனுட் கண்டருள்செய் தான்காஞ்சி
நல்லநகர் ஈசன்முன் நாள். (20)

சீலத்தார் சேர்வர் சிவனடியை மற்றையுடற்
கோலத்தார்க் காம்பயனென் கூறு. (21)

வேர்மரத்துக் காதாரம் வேர்க்குமாம் அன்றமலன்
ஆருயிர்க்கா தாரமுயிர் அன்று. (22)

என்றறிந் தீசன்தாள் இருக்கினடக் கிற்கிடக்கில்
பொன்றும் பொழுதுதினை போற்று. (23)

ஆக்கைவிடும் காலத்தில் ஆவிஅகத் தேசினைந்த
ஆக்கைபெறும் என்றே அறிந்து. (24)

சதாசிவமும் ஆதி தனைநினையில் சாங்கால்
சதாசிவமும் ஆமாவி தான். (25)

உயிர்க்குயிரை நோக்கின் உயிர்விடும் காலத்
துயிர்க்குயிராய் மீளா துயிர். (26)

தேசிக னேலே தெருள உயிருள்ளே
ஈசன் இலங்கும் இயல்பு. (27)

தேசிகனை ஈசனெனச் சிந்தனைசெய் வார்தினைப்பார்
பாசமறுத் தேபேரின் பம். (28)

எங்கும் உளனமலன் என்றிலிங்கத் தம்பணிவார்
சங்கைதடுப் பார்சிவத்தைச் சார்ந்து. (29)

ஈசனடி நேசரடி எண்ணுவார் கண்ணுவார்
பாசமற மேலாம் பதம். (30)

தேசிகர்க்குத் தீங்குசெயும் தீம்பரைவெல் அல்லதுந்
நாசமுறு சேர்வாய் நலம். (31)

அந்தணரை மாதவரைக் கொல்லாதே வெல்அல்லார்
சிந்தவும்செய் நீசெறியாய் நீங்கு. (32)

ஆக்கையினோ யற்றே அறிந்தவிதி அந்தணனும்
ஆக்கை விடுகை அழகு. (33)

காசிவிசு வேசன் கழல்பணிந்தாம் காலத்தில்
காசம் தனையும் கவின்று. (34)

கங்கையுட்புள் காக்கை களாக பிறர்கையி
னுங்குன் னபலங்க ளாம். (?) (35)

விதிதெருளான் நோய்க்குமழிந் தாக்கையைத்தான் வீய்த்தான்
புலைதயிருளின் ஆழ்வன் புகுந்து. (36)

ஆக்கையினை நோய்க்குமழிந் தந்தணன் தான் நீக்கினான்
சீக்குழிக்கும் ஆவன் செறிந்து. (37)

அரும்பெரும் பன்னோய் அடர்த்தாலும் ஆற்றிப்
பிரிந்திடச்செய் யாதுடலைப் பேறு. (38)

ஆக்கை அறவெறுத்தான் ஆரியனுக் கும்மழற்புக்
காக்கைவிடி னேமுத்தி யாம். (39)

சிவனெனவே தேசிகனை அன்பரையும் சிந்தி
அவனையவ ராகநினை யல். (40)

சிவனெனவே தேவரையும் சிந்தி அவனை
அவனெனக்கண் டார்நிரயத் தார். (41)

அரையனெனக் காண்பாம் அமைச்சரை அமைச்சாக
அரையனைக்கண் டாற்றுயர மாம். (42)

ஆதலினால் தேசிகனை ஆதித் தனைஅயனை
மாதவனை மற்றும் வணங்கு. (43)

சிவனெனவே சிந்தித்துச் செய்பூசை கண்டே
சிவனே பலத்தைச் செயும். (44)

இங்கியற்றிற் பூசை தவத்தார்க் கிவரன்றே
அங்கே பலமடைவிப் பார். (45)

ஆதலினால் ஈசன் அவரவர்க்குச் செய்பூசை
காதலுறக் கொண்டளிப்பன் காண். (46)

தனைக்குறித்துத் தன்கணத்தார் தாள்தொழவின் ஈவான்
தனைப்பணிந்தால் என்னதரான் தான். (47)

பற்றறுப்பீர் பற்றிலான் பற்றறுக்க வல்லான்தாள்
பற்றுமின்றும் பற்றையறுப் பன் (48)

*விரும்பீர் பலம்எனினும் விண்ணும் விமலன்*
*தரும்தனது தாளும் தரும்.* (49)

*சைவருக்குச் சித்தாந்தம் சாற்றும் பொழுதெவரும்*
*உய்யுநெறி தன்னையும்சொன் னேம்.* (50)

*அறிவிக்க இந்நூலை ஆரியனு சற்றூற்*
*கறிவிக்கின் ஆசுற் றவர்க்கு.* (51)

*இருவரும் வீழ்வார் எரியும் நிரையத்*
*தரிதரி தேறல் அவர்.* (52)

*பக்குவர்க்குப் போதித்தான் பக்குவரோ டும்பாசம்*
*பக்கடைவன் மூலன் பதம்.* (53)

*தேர்வரே இந்தஇயல் சைவசித்தாந் தம்திமிரம்*
*தீர்வார் திளைப்பார் சிவம்.* (54)

எட்டாவது சைவர் சங்கற்ப நிராகரணம் முற்றிற்று.

ஆக எல்லா இயலினுக்கும் குறள்வெண்பா—**424.**

*திருச்சிற்றம்பலம்.*

உ

திருச்சிற்றம்பலம்.

அருள்பெறுதற் கான்றோரே ஆகத் துறைசைத்
தெருள்சுப் பிரமணிய தேவே!—மருளேற்குன்
பாதம்தோய் நீரும் பரிகலமும் சேவையுமே
போதும் அவையே புரி.